

கவியரசியார்

திருவாட்டி கிருஷ்ணவேணி அம்மையார்

ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்
பவழக்காரத் தெரு :: சென்னை 1



கவியரசியார்

(ஸ்ரீமதி சரோஜினி தேவி)

கவியரசியார்

எழுதியது :

கிருஷ்ணவேணி அம்மையார்

Approved by the Madras Text-Book Committee for Class use—Non-detailed Study: Vide page 3, Part II, Supplement to Part I-B, Fort St. George Gazette dated 27th December, 1949

ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்

பவழக்காரத் தெரு : : சென்னை 1.

பதிப்புரிமை] 1949 [விலை ரூ. 1-0-0

FIRST PUBLISHED: *April 1949.*

The Progressive Printers, Madras

முன்னுரை

சீர்மை வாய்ந்த நம் இந்திய நாட்டிற்றேன்றிப் பல வகையிலும் வீறு பெற்று விளங்கிய பண்டை மகளிரின் பெட்புகளைப்பற்றி மாணவருக் கேற்ற முறையில் பல நூல்கள் வெளிவந்துள்ளன. ஆனல், இவ்விருபதாம் நூற்றாண்டில் அரிய செயல்கள் பல ஆற்றி, மாண்புற்று வாழ்ந்த மங்கையரைக் குறித்து மாணவர் அறிந்துகொள்ளும் வகையில் நூல்கள் வெளிவந்தில.

நம் இளைஞர், பன்னூற்றாண்டுகளுக்கு முன்னிருந்த மகளிரின் நலங்களில் கொள்ளும் உவகையைக்காட்டிலும், சின்னாட்களுக்குமுன் வாழ்ந்த வனிதையரின் சிறப்பியல்புகளில் மிக்க பெருமிதங் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை. என்? இப்பெரியவர் நாம் தோன்றிய காலத்திலேயே தோன்றி நாமறியவே பல செயல்களைப் புரிந்துள்ளனர். இவர்கள் பெருந்தகைமைகளுள் பலவற்றை நாமே நேரில் காணவும், பிறர் சொல்லக் கேட்கவும் வசதி உள்ளன. ஆதலின், இவர்களைப்பற்றிக் கூறுவனவற்றுள் பல உண்மையானவை என்னும் நம்பிக்கையும் ஏற்படுகின்றன.

இங்ஙிலையில், இம்மங்கையரிடம் வியக்கத்தக்க செயல்கள் தோன்றுங்கால், அவர்கட்கு இறும்பூதுண்டாதற்குத் தடை யாது? கல்வி, அறிவு, ஆராய்ச்சி, வீரம், ஒழுக்கம், சான்றாண்மை முதலியன வரண்டிருக்கும் இக்காலத்தில், சிலர் இவற்றுள் சிறந்து விளங்குவார்களாயின், இது யாருக்குத்தான் மகிழ்வை ஊட்டாது! இது நெருப்பில் தாமரை பூத்தது போன்றதன்றே ஆகும்.

இம்முறையில், இந்நூற்றாண்டில் வாழ்ந்த உயரிய மகளிர் சிலருள் ஒருவராகிய நம் சரோஜினி தேவியார், தம் சொந்த மொழியிலும், ஆங்கில மொழியிலும் வல்லுநராய்த் திகழ்ந்தனர். இவரிடம் நியாயத்தை நிலைநாட்டும் வாக்குத் திறம், பகைவரையும் விரும்பச்செய்யும் சொற்றிறம், மேற்கொண்டதை முடிக்கும் ஆண்மைத்திறம், தேசத்திற்

குழைக்கும் தெய்வத்திறம், பிறர் துன்பந் துடைக்கும் தூய்மைத்திறம், உலையாதுழைக்கும் ஊக்கத்திறம், கற்றவரையும் கவரும் கவித்திறம் முதலியன அமைந்திருந்தன.

இங்ஙனம் இவரிடம் பல பெட்புகள் பொருந்தி இருப்பினும், தறகால மகளிருள் இவரே சிறந்த கவிஞராய் விளங்கியதாலும், மேனாட்டாரையும் இந்நாட்டாரையும் மகிழச் செய்வனவும், இவரை உலகிற்கு அறிமுகப் படுத்துவனவும், இவருக்குப் பெரும் புகழை ஈட்டித் தருவனவும் இவருடைய கவிகளே யாதலினால் இவருக்குக் கவியரசியார் என்னும் பெயரே பொருத்தமுடையதாகும்.

இவருடைய கவிகள் தமிழ் மொழியில் அமையாமையின், இந்நூலைப் படிப்பவர், அக்கவி இன்பத்தை உள்ளது உள்ளவாறே துய்த்தற்கேற்ப ஆங்காங்கே அவைகளை எடுத்தாள இயலவில்லை. ஆயினும், இவருடைய கவிச் சிறப்பையும், பொருள் நயத்தையும் வாசகர்கள் அறிந்து இன்பங்கொள்ளுமாறு அவற்றின் கருத்துகளைத் தக்க இடங்களில் பொருத்திக் காட்டியுள்ளேன். இதனால், கவியரசியாரின் உயரிய பண்புகள் பல வெளிப்பட்டு நிற்கும்.

அடிமை வெப்பத்திலிருந்து நீங்கிச் சுதந்திர நிழலில் வாழும் நமக்கு, இதற்கு அடிகோலியாக இருந்து பல மகளிரால் செய்ய இயலாத அரிய செயல்கள் பலவற்றைச் செய்து, கணக்கற்ற இன்னல்களையும் அனுபவித்து ஒன்றிற்கும் அஞ்சா நெஞ்சுடையராய் யாவற்றிலும் வெற்றி பெற்று, உயர்ந்த (கவர்னர்) பதவியையும் வகித்து உன்னத நிலையில் வாழ்ந்த கவியரசியாரின் வாழ்க்கையைப் பற்றி அறிய யாவரும் விரும்புவர் என்பது திண்ணம். இந்நூல் மாணவருக்கு மட்டுமேயன்றிச் சுதந்திர வேட்கையுடைய பலருக்கும் பயனளிக்குமென நினைக்கின்றேன்.

S. கிருஷ்ணவேணி.

பொருளடக்கம்

கவியரசியார்

தோற்றுவாய்

தெய்வத்தன்மை வாய்ந்த நம் இந்தியதேசம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பலவற்றிலும் சிறந்தோங்கி இருந்ததென்பது பலரும் அறிவர். ஒரு தேசத்தைப் பெருமை படுத்துவனவும், முன்னணியில் நிறுத்துவனவும், அணிசெய்வனவும் பல உண்டு. அவற்றுள் முதன்மையுற்றது மங்கையரின் மாண்பேயாகும்.

இம்முறையில், நம் பண்டைய மகளிர் எந்நிலையில் திறமை வாய்ந்திருந்தனர் எனக் காணப்புகின், ஒன்றிரண்டில் மட்டுமன்று; நாட்டிற்கு நலனளிக்கக்கூடிய பல துறைகளிலும் மங்கையர் வன்மை பெற்றிருந்தனர் என்பது வெள்ளிடைமலை. நம் முன்னைய மகளிருள் சிலர், அரசியராக இருந்து செங்கோன்மை செலுத்தினர்; சிலர், அறிஞரிடையில் நடைபெறும் கலை வாதங்களுக்குத் தலைமை பூண்டு உண்மையைத் தெளித்துக் கூறினர்; சிலர், மன்னரிடம் தூது சென்று தம் சாதுரியத்தினால் அவரை நல்வழிப்படுத்தினர்; சிலர், கடலில் மறைந்த தம் கணவரைத் தம் கற்பின் திறத்தினால் திரும்பவும் பெற்றுக் களித்தனர்; சிலர், தம் கணவர் புதல்வர் முதலியவரைப் போருக்கு அனுப்பி, அவர்தம் வீர மரணத்தை அறிந்து மகிழ்ந்தனர்;

சிலர், தாமே போர் புரிந்து தம் கணவர் வெற்றி மாலை சூடுமாறு செய்தனர்; சிலர், ஆண்புலவ ரோடு தம்மையும் ஒக்க எண்ணுமாறு கல்வியறி விற் சிறந்து விளங்கினர்; சிலர், பிறர் உள்ளத் தைக் கவர்ந்து இன்பத்தை ஈய வல்ல பாக்களை இயற்றும் கவிஞராய்த் திகழ்ந்தனர். இங்ஙனம் நம் மங்கையர் பல துறைகளிலும் பண்பட்டு, நம் நாட்டை அணி செய்தனர் என்பது சங்க நூல் களின் வாயிலானும், இன்னும் சில காவியங்களின் மூலமாகவும் அறிகின்றோம்.

நம் தேயப் பெண்மணிகளின் பெருந்தகைமை பொதுவாக இருபாலாருக்கும் பெருமை தரக் கூடியதே யாயினும், சிறப்பாகப் பெண்பாலாருக்கு மிக்க சீர்மையை அளிப்பதாகும், ஏன்? தாய் மாரின் செல்வ நிதி மகளிருக்கே உரிமையுடைய தன்றோ!

இங்ஙனம் ஒருகால் நம் மங்கையர் மாண்புற் றிருந்ததினுற்றான், இடையில் அவர்களைக் கல்வித் துறையில் செல்லவிடாது, அறியாமையில் ஆழ்த்தி யும், அடிமைகளாக நடத்தியும், பல இன்னல்களில் வீழ்த்தியும், மணமுடைய ஒரு பொருள் இருந்த பேழை, அப்பொருள் நீங்கிய பின்னும், அம்மணம் நீங்காது வீசுதல் போன்று, அவர்கள் இன்னும் பழைய பொறுமை, தியாகம், ஒழுக்கம் முதலிய வற்றிலிருந்து நீங்காமல் நம் நாட்டிற்கு நலனளித் தலைக் காண்கின்றோம். “யானை படுக்கினும் குதிரை மட்ட மிருக்குமன்றோ?” இன்னும், மேற்கூறிய பெருந்தகைமை வாய்ந்த மங்கையராலேயே உலகம் உயர்நிலையைப் பெற்றுள்ளது என்பதை அறிஞர் மறுப்பரோ!

தற்காலத்திலும், கல்வியிலும், அறிவிலும், வன்மையிலும், கவி நலத்திலும் சிறந்த பெண்கள் இல்லாமற் போகவில்லை. இவர்கள் ஆங்காங்கே இலையால் மறைக்கப்பட்ட காய்கள் போன்று வாழ்ந்து வருகின்றனர்கள். இவர்களுள் ஒரு சிலரையே யாவரும் அறிந்துள்ளனர். இவருள் நம் கவி அரசியாராகிய சரோஜினி தேவியாரும் ஒருவர். இவரைப்பற்றி அறியாதார் மிகச் சிலரே யாவர்.

இத்தேவியாரைப் பற்றிப் பேசப் புகுங்கால், இவருடைய சொல் வன்மையைச் சொல்வதா? தேசப் பற்றைப் பகர்வதா? வீரப்போக்கை விளம்புவதா? கவித்திறனைக் கழறுவதா? என்பது ஐயப்பாடு! இவருடைய எப்பெற்றியும் கற்றவர் மனத்தைக் கவர்வதே யாகும்.

1. கவியரசியாரின் தோற்றம்

மக்களுக்கு உயரிய ஞானத்தை ஊட்டக்கூடிய வேதம், ஆகமம், இதிகாசம், புராணம் முதலியவற்றை நன்கு கற்றுத் தேர்ந்த பிராமண குடும்பம் ஒன்று வங்காளத்தில் வாழ்ந்து வந்தது. அக் குடும்பத்தில் தோன்றியவர்களுக்குச் சட்டோபாத்தியாய என்னும் சிறப்புப் பெயர் அமைந்திருந்தது. அவர்கள் சாத்திரங்களில் வல்லுநராய் இருந்தார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு அக்குடும்பத்தில் டாக்டர் அகோரநாத சட்டோபாத்தியாயர் என்னும் ஒரு பெரியவர் தோன்றினர். இளமையிலிருந்தே அவருக்குக் கல்வியில் விருப்பமும், அதைக் கற்க வேண்டுமென்னும் ஊக்கமும் இருந்தன. அவர் பிறர் வியப்புறும் முறையில், வேதம் ஆகமம் முதலியவற்றை ஆராய்ந்து கற்றார். அவருடைய

அறிவு கூர்மை, அவரை அத்துடன் நிறுத்திற்றில்லை; ஆங்கிலக் கல்வியிலும் தேர்ச்சி பெறச்செய்தது. அவருக்குக் கல்வியினிடமிருந்த ஆர்வம் அவரை இங்கிலாந்திற்கு ஈர்த்துச்சென்றது. அவர் நெஞ்சம், மற்றக் கலைகளினும் விஞ்ஞானக் கலையிலேயே வேரூன்றி நின்றது. அவர் அக்கலையில் எவ்வளவு அறிவைப் பெற வேண்டுமோ, அவ்வளவுஅறிவையும் பெற்றார்; அதில் நன்கு தேர்ச்சி பெற்ற சிலருள், அவரும் ஒருவராகத் திகழ்ந்தார். இதன் காரணமாக அவருக்கு டாக்டர் பட்டம் கிடைத்தது.

இப்பட்டம் கிடைத்ததைக் குறித்து அவர் மகிழ்வையோ பெருமிதத்தையோ கொண்டாரில்லை. தம் கலை, உலகிற்கு நற்றுறையில் பயன்படவேண்டுமென்பதிலேயே அவர் கருத்து ஊன்றி இருந்தது. அவர் நைஜாம் சமஸ்தானத்தில் ஓர் உயர்ந்த உத்தியோகத்தைப் பெற்றார்; தமக்குக் கிடைத்த தொழிலைச் செம்மை நெறியில் செய்துவந்தார். இத்தொழிலால் பலர் நலமடைந்துவரினும், அத்துடன் நின்றுவிட அவர் மனம் இடந்தந்திலது; நைஜாம் மாணவர் அறிவு வளர்ச்சிக்காக ஒரு கலாசாலை நிறுவினர். அதன்பொருட்டு அவர் மேற்கொண்ட முயற்சிகள் பலவாகும். அதற்குத் தாமே ஆசிரியராக அமர்ந்தார். அவ்வாசிரியத் தொழில் அவருக்கு மிக்க இன்பத்தை ஊட்டியது. நாடோறும் இளஞ்சிறாருடன் கலந்து வாழ்வதை அவர் பெரும்பேறெனக் கருதினர். தாமும் ஒரு மாணவன் என்பதே அவர் எண்ணம். "இளம் பிள்ளைகளே நம் நாட்டின் நிதி—எதிர்காலச் செல்வம்—அவர்களைக்கொண்டே நாடு முன்னேறவேண்டும் என்பன அவர் உள்ளக் கிடக்கை. அதற்

கேற்ப அவர்களை அன்புடன் நடத்தினர்; அவர்கட்குக் கல்வியுடன் பொதுப் பொருள்களையும் கலந்து கலந்து ஊட்டினர். மாணவர் வெறும் புத்தகப் புழுக்களாகமட்டும் இருக்க அவர் விரும்பினாரில்லை. அவர்களைப் பிற்கால வாழ்க்கைக்கேற்ப பண்படுத்த வேண்டுமென்பதே அவர் பேரவா. அதன் காரணமாக அக்கல்லூரிக்கு அவர் செய்த தொண்டுகள் பலப்பல. மாணவர்க்குழைக்கும் அருந்தொண்டனுகவே தம்மை மதித்தார். இங்ஙனம் தன்னலங் கருதாது, உலக உயர்விற்கென உழைத்துவந்த டாக்டர் அகோரநாத சட்டோபாத்தியாயர் அவர்களின் வாழ்க்கையைப் பின்னும் துலங்கச்செய்ய இறைவன் திருவுள்ளங்கொண்டான்.

கடவுள் அருளாலும், உலகின் நலத்தாலும், பெற்றோர் தவத்தாலும், 1879-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13-ம் நாள் நம் கவியரசியார் தோன்றினார். இவருக்குச் சரோஜினி தேவியார் என்னும் பெயர் சூட்டப்பட்டது. தாயன்பாலும், தந்தையார் அறிவாலும் இவர் இளமைப் பருவம் இன்புடன் கழிந்தது. "விளையும் பயிர் முளையிலே தெரியும்", என்னுமாறு இளமையிலேயே இவரிடம் சுறுசுறுப்பும் புத்திகூர்மையும் அமைந்திருந்தன. இவர் முகத்தில் ஒருவித அறிவு ஒளி திகழ்ந்தது. நம் தேவியாரின் உடன்பிறந்தவர் மிருனளினி அம்மா, நளினியம்மா, சுகாசினி அம்மா என்னும் மூன்று பெண்களும், பூபேந்தரநாத், ரவீந்தரநாத், ஹரீந்தரநாத், என்னும் மூன்று ஆண்களுமாவர். இவர்களும் கல்வியறிவிற் சிறந்து தூயவாழ்க்கை நடத்துகின்றனர்.

2. ஆரம்பக் கல்வி

இவர் சிறிது வளர்ந்தவுடன் இவர் சொற்கள் யாவும் அறிவுடையனவாயிருந்தன. இவர் முகம் ஆழ்ந்த யோசனையில் அமைந்திருப்பது போன்று காணப்படும். இவரைக் காணும் சாதாரண மக்களும், "இப்பெண் பெரியவளான பின்பு மிக்க அறிவுடையவளாக இருப்பாள்", எனக் கூறிக் கொண்டார்கள். அறிஞரோ, "இம்மகளுக்குக் கல்வியளித்து, அறிவுடையவருடன் பழகுமாறு செய்யின், இவள் இவ்வுலகிற்குப் பல நலன்களை அளிப்பாள். இவளால் மக்கள் பலர் பயனடைவர். நாடும் முன்னேற்றமடையும்," எனப் பகர்ந்தனர். சிலர் அகோரநாத் சட்டோபாத்தியாயரின் புண்ணியத்தைப் புகழ்ந்தனர்; மகளைக் கல்வியில் முன்னுக்குக் கொண்டுவருமாறு அவரை ஊக்கிவிட்டனர். இவையாவும் சட்டோபாத்தியாயருக்குப் பேரானந்தத்தைத் தந்தன. அவர் தம் மகளாரைக் கண்டு களித்தனர்; தேவியாருக்கு இளமையிலேயே பொதுப்பொருள்களில் அறிவைப் பெருக்கிவந்தார். அவர் மகளை வளர்த்த வளர்ப்புத் தனிப்பட்டதாயிருந்தது, இத்தகைய வளர்ப்பின் சிறப்பை அறியாத சிலருக்கு, இவ்விருவர் போக்கும் நகைப்பிற்கிடந்தந்தது. ஆயினும், பிறர் இகழ்வையும் புகழையும் சட்டோபாத்தியாயர் மனங் கொண்டிலர். தம் மகளாரின் பிற்கால நல்வாழ்க்கையிலேயே அவர் கண்ணும் கருத்தும் பதிந்திருந்தன. இவையாவும் தேவியாருக்குப் பாந்த அறிவை மட்டுமேயன்றி, மன ஊக்கத்தையும் அளித்தன. நம் தேவியார் இயற்கையிலேயே நுண்ணறிவுடையராயிருப்பினும், தம் தந்தையாரின் தூண்டுதல் பின்னும் இவருக்குக் கூரிய ஞானத்தை உண்டாக்கிற்று. பண்

பட்ட நிலமும், தேர்ந்தெடுத்த விதையும் இருப்பினும், அதனை நிலத்தில் விதைத்து நீர் விட்டு வளர்த்தற்கு ஒருவர் வேண்டுமல்லவா? சுடர் விளக்கும் ஒளி விட்டு ஒளிரத் தூண்டுகோல் ஒன்று வேண்டுமன்றோ ? அதைப் போன்றே நம் அன்னையாரின் அறிவு பரந்து விரிதற்குத் தம் தந்தையாரின் தூண்டுதல் வேண்டற்பாலதாயிற்று. இத்தகைய அரிய தந்தையாரைப் பெறுதற்கு இவர் புண்ணியமிழைத்திருத்தல் வேண்டுமென்றே இயம்பல் வேண்டும். இவர் அறிவற்ற பெற்றோரிடம் தோன்றி இருப்பரேல், இவருடைய பிற்காலம் இத்துணை மேன்மையுற்றிருக்குமோ என்பது சிறிது ஐயப்பாடுதான்! நுட்பமதி வாய்ந்த எத்தனை சிறுவர், பெற்றவர் அறிவின்மையாலும், சுற்றுப்புறமுள்ளவர் மூடக்கொள்கைகளினாலும் அறிவு மழுங்கிப் பயனற்றவராகின்றனர். ஆதலின், பெற்றவர் அறிவும், மற்றவர் சீர்மையும் குழந்தைகள் நல்வழியில் உயர்தற்கு அவசியம் வேண்டற்பாலன என்பதை மறுத்தற்கியலாது.

இங்ஙனம் அறிஞர் புகழவும், சான்றோர் மதிக்கவும், ஈன்றோர் மகிழவும் வளர்ந்துவந்த சரோஜினி தேவியார், ஒரு சிறந்த பள்ளியில் சேர்க்கப்பட்டார். இவர் கல்வி, பள்ளிக்குச் சென்ற பிறகுதான் தொடங்கப்பட்டது எனக் கூறுதற்கில்லை. முன் செப்பியவாறு இவர், தம் பெற்றோரால் இளமையிலேயே பல பொருள்களைக் கற்றுக்கொண்டிருந்தார். தம் குழந்தைகளின் இயல்பையும் மனப்போக்கையும் நன்குணர்ந்த அறிவுடைய தாய்தந்தையர், தம் மக்களுக்கு ஏற்றமுறையில் போதிக்கும் போதனைக்குப் பள்ளிப்படிப்பை எவ்வகையிலும் ஈடாகச் சொல்லுதற்கியலாது. குழந்தை

களுக்கு முதற்பள்ளி வீடும், முதலாசிரியர் பெற்றோருமே அல்லரா! குழந்தைப்பருவத்தில் மட்டுமன்று, அவர்கள் பெரியவர்களான பின்பும், பெற்று வளர்ப்பவருடைய தூண்டுதலும் நற்போதனையும் இன்றியமையாதனவாகும். இவையே மக்களை உயர்நிலைக்குக் கொணர்வன. இளைஞரிடம் பொதுப் பொறுப்பைக் கொள்ளும் கல்வி நிலையங்களைக் காட்டிலும், தனிப்பொறுப்பைக் கொள்ளும் இல்லம் உயர்ந்ததென்பதை அறிஞர் மறுக்கார். இங்ஙனம் வீட்டில் நன்முறையில் வளர்க்கப்படும் மாணவர்களே, பள்ளியிலும் நல்லொழுக்கமும் நல்லறிவும் வாய்த்திருத்தலைக் காணலாம். ஆகவே, பண்பமைந்த தாய் தந்தையரால் திறம்பட வளர்க்கப்பட்ட சரோஜினி தேவியார், கல்வியிலும் ஒழுக்கத்திலும் பள்ளியில், உயர்ந்தவராகக் காணப்பட்டார். இவருடைய நுண்ணிய அறிவும், சுறுசுறுப்பும், உயரிய போக்கும் ஆசிரியர்களுக்கு இவர்பால் அன்பைப் பெருக்குவித்தன. மாணவர் பலர் இவருக்கு நட்பினராயினர். இம்முறையில், இவருக்குப் பள்ளி வாழ்வு இன்ப வாழ்வாக இருந்தது.

தேவியார் இளமைக் கல்வி ஹைதராபாத்திலேயே நடைபெற்றது. ஆசிரியர் போதிப்பனவற்றுள் முழுமனத்தையும் பதித்துக் கருத்துடன் கேட்டல், அவற்றை நெஞ்சில் இருத்தல், ஊன்றி ஆராய்தல், தெளிதல் முதலியன இவரிடம் அமைந்திருந்தன. இச்செயல்களினால் இவர் அறிவு நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வந்தது. இவர் விடா முயற்சியும் சுறுசுறுப்பும் ஆசிரியர் மனத்தைக் கவர்ந்தன. அவர்கள் சோம்பலுடையவர்களைக் கண்டிக்குங்கால், இவரையே சான்றாக எடுத்துக் காட்டுவார்கள். மாணவர்களுள் சிலர், தமக்குள்ள

ஐயப்பாடுகளை இவரிடம் வந்து போக்கிக்கொள்ளு வர். இவருடன் சேர்ந்து படித்ததனுல் நன்மை யடைந்தவர் பலராவர். சிலர் இவர் கூட்டுறவினுல் தங்களுக்குள்ள சோம்பலை விட்டொழித்தனர். ஆனுல் சில மாணவர்களுக்கு இவரிடம் பொருமை உண்டு. யாவரும் ஒரே மனப்பான்மையுடைய வராய் இருத்தற்கியலுமா? உலகம் பலவிதமன்ருே? ஆயினும், நம் தேவியார் யாரிடமும் பகை கொள் ளுதல் இல்லை; யாவரிடமும் ஒரே விதமாய் நடந்து கொண்டனர். தம் உதவியை நாடுகின்றவர்கட்குத் தம்மாலானவற்றைச் செய்தற்கு இவர் ஒருகாலும் பின்வாங்கியதில்லை. எப்போதும் இன்சொற்களும் இன்முகமும் இவரிடம் குடிகொண்டிருந்தன. ஊன்றிக்கூறின், அப்பள்ளிக்கே இவர் ஒரு மணி விளக்காய் விளங்கினுர் எனச் சொல்லலாம். இங்ங ஞம் இவர் இளமைக் கல்வி இனிதே நடைபெற்று வந்தது.

தந்தையார் தம் மகளாரை அச்சிறு கல்வி யுடன் நிறுத்த விரும்பினுரில்லை. மகளின் இயல் பையும், பெண்கல்வியின் பெருமையையும், அத ஞல் உலகிற்கு ஏற்படும் நலத்தையும் நன்கறிந்த அப்பெரியார் அங்ஙனம் செய்ய ஒருப்படுவாரா? ஆதலின், அப்பெரியார் கல்வியின் பொருட்டுத் தம் மகளாரைச் சென்னைக்கு அனுப்பினுர். அன்னை யார், சென்னையில் உயர்தரப் பாடசாலை ஒன்றில் சேர்ந்து கற்கத் தொடங்கினுர்.

இங்கும் இவர் சிறந்த மாணவியாராகவே விளங்கினுர். இவரது கல்வியும் நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே வந்தது. ஏறக்குறைய ஐம் பது ஆண்டுகளுக்கு முன்னர், நம் சென்னையில்

பெண்களின் ஆரம்பக்கல்வியே எங்கிலையில் இருந்தது என்பதைப் பலர் அறிவர். அங்ஙனமாயின் உயர்தரக் கல்வியைப்பற்றிப் பகரவும் வேண்டுமா! அக்காலத்தில் ஒரு பெண்மணியார் ஹைதராபாத்திலிருந்து சென்னை போந்து படிப்பது என்னில், அஃது எத்துணை அருமைப்பாடுடையது! இச்செயலில், பரந்த எண்ணத்தைக்கொண்ட இவருடைய தந்தையாரை அல்லாமல், வேறு யாரைப் புகழ்வது! அவர், பணச்செலவிற்கும், மகளாரின் பிரிவிற்கும், தனிமைக்கும், பிறர் பகரும் பயனற்ற வார்த்தைகளுக்கும் மனஞ்சோராத தீரராகஇருந்தார் என்றுதான் இயம்பல் வேண்டும். இத்தீரம் யாவருக்கும் அமையக்கூடிய தொன்றோ? இதற்கு அக்குடும்பத்தின் நலமும், தேவியாரின் தவமுமே காரணங்கள் எனச் செப்புதலே தகுதியுடையதாகும்.

உயர்தரக் கல்வி

இவர் சென்னையிலிருந்த உயர்தரக் கலாசாலையில் கல்வி கற்குங்கால், இவருக்கு வயதுமிகக் குறைவே. ஆயினும், வயதில் மூத்த மாணவர்களைக்காட்டிலும், இவர் முன்னணியிலேயே நின்றார். இளமைச் சோம்பலும், அதிக விளையாட்டும் இவரிடம் அணுகிற்றில. இவர் சிலரைப்போன்று புத்தகமும் கையுமாகவும் இருந்திலர். பெரும்பான்மையும் ஆசிரியர் விளக்கிக் காட்டுவதே இவருக்குப் போதியதாய் இருந்தது. அதைத் திரும்பவும் இவர் ஒரு முறைக்குமேல் படித்தல் இல்லை.

ஆசிரியர் போதித்தலை நன்கு கவனிப்பவருக்கு இந்நன்மை தவறாது கிடைக்கும். நுட்ப அறிவு இல்லாதவரும் இதனல் பெரும்பயன் அடை

யக்கூடும்! நுண்ணிய மதிவாய்ந்தவர் இக்கோட்பாட்டைக் கடைப்பிடிப்பரேல், பொன்மலர் மணத்தையும் பெற்றது போன்று மிக்க நலனைப்பெறுவர். இதனாலன்றோ, மாணவர், பள்ளிக்குச் சென்று படித்தலே சிறப்புடையதெனச் சொல்லப்படுகிறது. தற்கால மாணவருலகம் இதன் நலனையும் மேன்மையையும் உணர்வதே இல்லை. ஆசிரியர் அரிய பொருள்களைப் போதிக்குங்கால், மாணவரின் மனம் ஒரு புறமும், கண்கள் மற்றொரு புறமும் உலவாநிற்கும். பார்வை ஆசிரியரிடத்தில் இருப்பினும், பெரும்பான்மையும் அவர் சிந்தை அவ்விடத்திலிருத்தலில்லை. இளமையிலேயே இங்ஙனம் மனத்தைக் கட்டுப்படுத்தி ஓரிடத்தில் நிறுத்தும் பழக்கமின்மையினாற்றான், பலர் தாங்கள் அடையக்கூடிய பல பலன்களையும் இழக்கின்றனர். இது மாணவர் தாமே உய்த்துணர வேண்டிய விஷயமாகும். நம் தேவியாரோ, அவ்வமயத்தை வீணாக்கினாரில்லை. இவர் கண்ணும் நெஞ்சும் முறையே ஆசிரியரிடத்திலும், அவர் எடுத்துரைக்கும் பொருள்களினிடத்தும் பொருந்தியிருந்தன.

இங்ஙனம் மிக்க ஆர்வத்துடன் கல்விகற்ற நம் தேவியார் தம் பன்னிரண்டாவது வயதில், மெட்ரிகுலேஷன் சோதனையில் மாகாணத்திற்கே முதன்மையாகத் தேறினார். இவர் ஆர்வமும் ஆற்றலும் பயன் பெற்றன. மாகாணத்தின் சிகரத்தில் நின்று ஒளிர்ந்தார். இவரைக்காட்டிலும், வயதில் மூத்த பல்லாயிரம் மாணவரைவென்று முன்னணியில் நின்ற இவர் வெற்றி, அறிஞர் மனத்தைக் கவர்ந்தது. இது கேவலம் உடல் வெற்றியன்றே, அறிவின் வெற்றியன்றோ! இஃது உடல் வெற்றியைப் போன்று சிலருக்கு இன்பமும் சிலருக்குத்

துன்பமும், சில நாடுகளுக்கு அழிவும், சில நாடுகளுக்கு ஆக்கமும் உண்டாக்குவதன்றே! இஃது எங்கும் புகழையும், எங்கும் இன்பத்தையும், பலருக்கும் ஊக்கத்தையும் அல்லவா ஏற்படுத்தும்! இவ்வெற்றியைப் பெறுதற்கன்றோ பலர் பதறி நிற்பது! இது யாவருக்கும் கிடைக்கக்கூடியதொன்றன்றே! இதற்குப் பெற்றோரின் தூண்டுதலும், பிள்ளைகளின் மெய்ம்முயற்சி, உள்ளக் கிளர்ச்சி, நுட்பமதி முதலியனவும் இன்றியமையாதன அல்லவா? இவை யாவற்றையும் பெற்றிருந்த நம் தேவியார், மெட்ரிகுலேஷன் சோதனையில் முதன்மையாகத் தேறியது பொருத்தமுடையதன்றோ? இச்செய்தி பெற்றோருக்கு எத்துணை மகிழ்வை அளித்திருக்கும்! அதினும், கல்வியின் அருமை பெருமைகளை நன்கறிந்தவரும், தம் மகளாரைக் கலை வல்லுநராகச் செய்யவேண்டுமென்னும் உயரிய எண்ணம் வாய்ந்தவருமான சட்டோபாத்யாயருக்கு உண்டான உவகையை அளந்து கூறஇயலுமா? நம் அன்னையாரின் கல்வி மட்டுமேயன்றி, இவருடைய அறிவும், ஆற்றலும், ஊக்கமும், மனத்திண்மையும், கம்பீரப் போக்கும் அவருக்கு ஆனந்தத்தை உண்டாக்கின. அவர் மனம் பூரித்தது; அவர் தம் மகளாரைப் பெற்ற காலத்தினும் பெரிதுவந்தார். ஈண்டு, "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச், சான்றோனெனக்கேட்ட தாய்" என்னும் திருவள்ளுவர் வாக்கு நினைவிற்கு வருகின்றது.

சரோஜினி தேவியாரின் கல்வி வெற்றியினால் ஏற்பட்ட மகிழ்வு பெற்றோருடன் நின்றுவிடவில்லை. இதைக் கேட்டவர் இறும்பூதெய்தனர். கற்றவருடைய நெஞ்சம் களித்தது; அறிஞர் மனம்

ஆனந்தமடைந்தது; கல்லாதவர் வியப்பிலாழ்ந்தனர்; மகளிர் களிநடம் புரிந்தனர். சிலர், "பெற்றோர் தம் பெண் குழந்தைகளைக் கல்வித் துறையில் செல்லவிடில், இத்தகைய இன்ப வெள்ளத்தில் மூழ்கலாம். மங்கையரும் அறிவு பெற்றுத் துலங்குவர். அவர் தம் அடிமை நிலையும் நீங்கும். அரிவையர் அறிவற்றவர் என்னும் எண்ணமும் ஒழியும். நாடும் முன்னேறும். இல்லறக் கடமைகள் இனிதே நடைபெறும். அவர்களுக்குத் தோன்றும் மக்களும் மாண்புறுவர்.

"பெருந்த டங்கட் பிறைநுத லார்க்கெலாம்,
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்,
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்,
விருந்து மன்றி விளைவன யாவையே"

இராமாயணம்—நாட்டுப்படலம்.

என்னும் கம்பர் வாக்கிற்கும் மதிப்பு ஏற்படும்" என ஆங்காங்கே பேசிக்கொண்டனர்.

4. இங்கிலாந்து செல்கை

இங்ஙனம் பலரும் மகிழப் பன்னிரண்டு வயதிலேயே கல்வியில் பண்பட்ட தம் மகளாரின் மேல் படிப்பைப்பற்றித் தந்தையார் ஊன்றிய யோசனையில் மூழ்கினர். "நம்மகளது அறிவாற்றலைப் பெருக்குதல் யாங்ஙனம்?" என்னும் எண்ணம் அவரை மிக்க சிந்தனையில் ஆழ்த்திற்று. "இவரை இங்கிலாந்திற்கு அனுப்பவேண்டும்," என்னும் அவா அவரைப் பெரிதும் ஊக்கினும், அதன்படியே நின்று செயலாற்ற அவர் மனம் இடந்தந்திலது. ஆதலின், அவர் சில அறிஞரையும் பெரியவரையும் கலந்து யோசித்தார். அவர்களுள் பலர் சட்டோ

பாத்தியாயரின் சிறந்த கருத்திற்கு மகிழ்ந்தது மன்றி, அவர்களும் அதற்கு உடன்பட்டு நின்றனர். ஆகவே, நம் தேவியார் 1895-ஆம் ஆண்டு மேற் படிப்பிற்காக இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டார். அங்கு இவர் இலண்டன் கிங்ஸ் கலாசாலையில் சேர்ந்து கற்கத் தொடங்கினர்.

ஆயினும், கற்று முன்னேறுவதில், தந்தை யாருக்கும் மகளார்க்கும் ஒரே கருத்திருப்பினும், கற்கும் பொருள்களில் இருவருக்கும் கருத்து வேறு பாடிருந்தது. தந்தையாரோ, தம்மகளார் பீஜ கணிதத்திலும் (Algebra), விஞ்ஞான சாத்திரத் திலும் விரிந்த ஞானம் பெறவேண்டுமென மிக்க விருப்பங்கொண்டார். ஆனல், நம் கவியரசி யாரின் உள்ளமோ, இவ்விரண்டிலும் ஊன்றிச் சென்றிலது; கவிகள் இயற்றுவதிலும், அவற் றைச் சுவைத்து சுவைத்துப் பாடுவதிலுமே நிலைத்து நின்றது. தம் தந்தையாரின் விருப்பத்தை முற்றுப்பெறச் செய்யவேண்டுமென்னும் எண்ணம் இவருக்கிருப்பினும், இவர் நெஞ்சமோ, இவரைக் கவி உலகத்திற்கே இழுத்துச் சென்றது. கவி இயற்றுவதில் இவருக்குண்டான அன்பும் ஆர்வமும் அளவிடற்பாலனவல்ல. இந்நிலை, இவ ருக்குப் பெரியவரான பின்போ, அன்றிக் கல்வி யில் தேர்ச்சியடைந்த பின்னரோ ஏற்பட்டதன்றே! உலகத்தைப் பற்றியும் கல்வியைக் குறித்தும் இவர் நன்கு அறிவதற்கு முன்பே, இவருக்கு இதில் சுவை ஏற்பட்டிருந்தது. அன்றியும், இவர் இக் கவிபாடும் திறத்தைக் கவிஞர் கூட்டுறவினாலும், பல நூல்களை ஆராய்ந்ததனாலும், கவி இலக்கணங் களைக் கற்றதனாலும் பெற்றவரல்லர். அங்ஙன மாயின் அஃது அளவுபட்டதாகவன்றோ இருக்கும்.

ஆதலின், கவிபாடும் வன்மையும் அதன் சுவையைத் துய்க்கும் தன்மையும் இவருக்கு இயற்கையாக அமைந்ததெனவே கூறல் வேண்டும். இவ்வியல்பை எதனுல் யாரால் மாற்றமுடியும்!

கவியரசியார் இங்கிலாந்தில் கலாசாலையில் கற்குங்கால், கல்வியிலும் சிறிது முன்னணியிலேயே நின்றனர். இவர் கவித்திறமையை அறிவதற்கு முன்னரே, அவணுள்ள சிலர் இவர் கல்வியின் தன்மையைக் கண்டு மகிழ்ந்தனர். ஆயினும், இவர் நெஞ்சுமட்டும் கல்வி கற்பதில் ஊன்றிச் சென்றிலது. ஒன்றில் பதிந்த மனம் மற்ருென்றில் செல்வது கடினமன்ருே! அன்றியும், இங்கிலாந்தில் பருவகாலங்களின் மாற்றமும், அவ்வக்காலங்களில் காணப்படும் இயற்கை வனப்புகளும் இவர் உள்ளத்தை அள்ளிக்கொண்டன. அவ்வின்பந் துய்த்தலிலேயே இவர் பெரும்பொழுது கழிந்தது. இவர் நூற்கல்வியைத் தந்தையாரின் வற்புறுத்தலுக்காக மேற்கொண்டனரே யல்லாமல், தம் விருப்பத்தினுலன்று. இந்நிலையில் அக்கல்வி எவ்வளவுதான் வளரமுடியும்! ஆயினும், இவருக்கு நூலறிவைக்காட்டிலும் பொது அறிவு நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வந்தது. இவர் பிற்காலத்தில் பேரும் புகழும் பெற்றதற்கு அந்த அறிவே காரணமாகும். இவர் நூலுடனேயே அழுந்தியிருப்பாராயின், இவர் பொதுத்தொண்டு புரிதற்கோ, புகழெய்துதற்கோ இடந்தருமா? இங்கிலாந்திலிருந்து திரும்புங்கால், இவரும் மற்றவரைப் போன்றே பெரிய பட்டத்தைத் தாங்கிப் போதருவர். இஃது இவருக்கும், இவர் குடும்பத்தினருக்கும் புகழையும் பொருளையும் திரட்டித் தந்திருக்கும்! இங்ஙனம் உலகம் புகழ்பவராய் இருக்கமுடி

யுமா? பலருக்கும் பல வழியிலும் நலமிழைக்கக் கூடுமா? மகளிருக்கு மாண்புடைய பிரதிநிதியாக இருக்க இயலுமா? பெண்ணுலகத்திற்கே பெருமை அளிக்க ஆகுமா? இதன்பொருட்டே இறைவன் இவர் உள்ளத்தை இங்ஙனம் வேறு வழியில் திருப்பினன்போலும்!

தேவியார் இங்கிலாந்திலிருந்தபோது கல்வியில் சிறப்புற்றிலேராயினும், அவணிருந்த அறிஞர் இவரிடம் மதிப்புக் காட்டாமலில்லை. கற்றுத் தேர்ந்தவர்களைக்காட்டிலும், இவரிடம் அவர்கள் மிக்க மதிப்புப் பாராட்டினர்கள். இவருடைய பொது அறிவும் கவிப் புலமையும் அவர்களுக்கு ஆனந்தமூட்டின. அவர்கள் இவரை எங்ஙெந்த முறையில், பெருமை படுத்தினர் என்பதைப் பிற் பகுதியில் அறிந்துகொள்ளலாம். ஆயினும், இவர் இங்கிலாந்திற்குச் சென்ற காரியத்தை முற்றுப் பெறச் செய்யாததைப்பற்றி வருந்தாதவரும் இல்லாமலில்லை. அவருள் முதன்மையானவர் இவர் தந்தையாராவர். என் செய்வது! தம் தந்தையாரின் எண்ணத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதில் இவருக்கு ஆர்வமில்லாமற் போகவுமில்லை. ஆயினும், அதற்கு இவருடைய நெஞ்சமும், இயல்பும் பிறந்த கோளும் இடந்தந்தில. இவர்தாம் யாது செய்ய இயலும்!

எக்கல்வியைக் கற்கவேண்டுமென, இவர் இங்கிலாந்திற்குச் சென்றனரோ, அக்கல்வியைக் கற்க முடியாமல் இயற்கை செய்துவிட்டது. அங்கிருக்குங்கால் இவர் நோய்வாய்ப்பட்டார். அது சில சிகிச்சைகளினுல் குணமடைந்திலது. அதனுல், மருத்துவர், இவர் தம் சொந்த நாட்டிற்குச் செல்லுதல் நல

மென அறிவுறுத்தினர். அவ்வறிவுரையை மேற்கொள்ள வேண்டுவது இன்றியமையாததாயிற்று. ஆதலின், தேவியார் தாம் கருதிச்சென்ற சோதனையில் தேர்ச்சியடையாமலே இந்தியா திரும்பினர்; திரும்பி வருங்கால் இத்தாலி தேசத்திற்குச் சென்ருர்; அவண் சரித்திர சம்பந்தமான இடங்களையும், ஞாபகக் குறிகளையும், ஜூலியஸ் ஸீஸரின் உருவச் சிலையையும் நோக்கி மகிழ்ந்தார். இவர் அறிவு பலவகையினும் கொழுந்து விட்டு வளருவதாயிற்று. இச்செய்கையினல் இவர் பல புதிய பொருள்களைக் கற்றுக்கொண்டார்; 1898- ஆம் ஆண்டு இறுதியில் தம் சொந்த ஊராகிய ஹைதராபாத்தை அடைந்தார்.

5. கவிமாண்பு

உலகில் கவிவுள்ளம் படைத்தவருக்கும் அதைப்பெருத மற்றவருக்கும் வேறுபாடுண்டு. கவிஞர் நெஞ்சம் அழகுள்ள அமைப்புகளையும், இயற்கை அழகுகளையுமே நாடிச் செல்லும். இயற்கை என்பது யாவருக்கும் இன்பத்தை அளிக்கும் நிதி; மக்கள் மனத்தைக் கவரும் காந்தம்; புத்தம் புதிய அழகுகள் கிளர்ந்தெழும் ஊற்று; அறிஞர் அகத்தாமரையை அலரச் செய்யும் ஞாயிறு; புலவர் புலமையை வெளிப்படுத்தும் புதையல்.

இத்துணைச் சீர்மைகள் அமைந்த இயற்கைப் பொருள்களைக் கண்டவுடன், கவிஞருடைய ஐம் புலன்களும் அவற்றினிடமே தோய்ந்துவிடுகின்றன. இவர்கள் அவற்றின் தன்மைகளை நுணுகி நுணுகிக் காண்கின்ருர்கள். ஒவ்வொன்றும் இவர்கள் கண்முன் காட்சி அளிக்கின்றது. அதனல், இவர்களுக்கு ஆனந்தம் பொங்கி எழுகின்றது. அவ்வா

னந்தம் உள்ளடங்காமல் வெளிக் கிளம்புகின்றது; அது பாட்டுருவத்தை அடைந்து யாவரையும் இன்புறச் செய்கின்றது. கவிஞர்கட்கு, எங்கெங்குத் தம் மனத்தைக் கவரும் வனப்புகள் தோன்றுகின்றனவோ, அங்கெல்லாம் பாட்டுண்டாகும். இவர்கட்கு இயற்கைப் பொருள்களே, கவியைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கும் பெட்டகமாகத் தோன்றும். அப்பேழையை இவர்கள் நுட்ப அறிவு திறந்து விடுகின்றது. உடனே அதன் உள்ளுறைப் பொருள்களை இவர்கள் கையாகிய கவி வெளியே எடுத்துப் பரப்புகின்றது. இதற்கு நீண்ட நேரம் வேண்டுவதில்லை. கவிவுள்ளம் வாய்ந்தவர், சில அற்புதப் பொருள்களைக் கண்டதும் இவர்கள் நா தங்குத் தடையின்றிப் பாடல்களை வெளியே தள்ளுகின்றது. இவைகளை இயற்கைக் கவிகள் எனவும், இவர்களை இயற்கைக் கவிஞர் எனவும் அறிஞர் கூறுகின்றனர். இவர்கள் இலக்கணத்தை உருப்போட்டோ, எதுகை மோனைகளை நோக்கியோ, பண்டைய புலவர்களின் சொற்றொடர்களைத் துணையாகக்கொண்டோ பாடுதல் இல்லை. ஆயினும், இவர்கள் கவிகளில் அவை தாமாகவே வந்து அமைவது மட்டுமேயல்லாமல், ஓசையின்பமும் பொருளழகும் அவற்றுள் அமைந்திருக்கும். இவையே கவிக்கு இன்றியமையாதனவாகும். பெருகியோடும் வெள்ளத்தை எங்ஙனம் தடுக்க முடியாதோ, அங்ஙனமே இவர்கள் நா கவிபாடத் தொடங்குமாயின், அதை நிறுத்த ஒருவராலும் இயலாது. அஃது இமைக்குப் பல பாடல்களாகப் பகரா நிற்கும். அக்கவிகள் இயற்கையின் இன்னலங்களைக் கற்பவர் கண் முன் நிறுத்துவது மட்டுமேயல்லாமல், அதைப் படிக்கப் படிக்க

இன்பச் சுவை சுரவா நிற்கும். அவற்றில் கவியின் இலக்கணங்களும், உயரிய பொருள்களும் நிரம்பி இருப்பினும், கற்பவருக்கு எளிமையும் இன்பமும் அளிப்பனவாகும். இவர்களுடைய கவிகளை, எளிய வாழ்க்கையும் உயரிய எண்ணங்களும் வாய்ந்த சான்றோருக்கு ஒப்பிடலாம். சிற்றறிவு வாய்ந்தவர்க்கும் பேரறிவு வாய்ந்தவர்க்கும் இன்பந்துய்த்தற்கு இவர் கவிகள் இடந்தந்து நிற்கின்றன. மேற்கூறிய இருதிறத்தினருக்கும் அக்கவிகளில் இன்பத்தை ஈயும் பொருள்களில் வேறுபாடு இருக்கலாம். ஆனல், இன்பம் என்பது ஒன்றேயாகும். அக்கவிகளில் அமைந்திருக்கும் பொருள் நயத்திஞலும், சொல் லழகிஞலும் அவற்றை யாவரும் விரும்புவர். எளிதில் பொருள் விளங்கக்கூடியவற்றை யாவரும் கற்று இன்புற விரும்புவது இயற்கைதானே! இஃதே இயற்கைக் கவிகளின் இலக்கணமாகும். இத்தகைய கவிஞர் நம் நாட்டில் பண்டைய காலத்திலிருந்தே வாழ்ந்து வந்தனர். இதற்கு ஏறக்குறைய பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த கம்பர் நன்கு சான்று பகர்வர்.

கவிச் செல்வராகிய கம்பர், ஓங்கி வளர்ந்து கவரிபோன்று அசைந்தாடிக் கொண்டிருக்கும் பச்சைப் பசேல் என்ற நெற்பயிர்களைக் காணுகின்றார்; "அவண் செந்நிறம் பொருந்திய தாள்களை யுடைய அன்னப் பேடைகள் தம் இளங் குஞ்சுகளைத் தாமரை மலரில் கண்ணுறங்கவிட்டு அழகு பெற மெல்லென நடந்து கொண்டிருக்கின்றன. அவ்வயலின் அருகில் மேயச் சென்ற எருமைகள் சேற்றில் கால்பதிய நின்று ஊருக்குள் விட்டு வந்த தம் கன்றுகளை நினைத்துக் கனைக்கின்றன. அம்மகவன்பிஞல் அவற்றின் மடியி

லிருந்து சுரந்த பால் அத்தாமரையில் விழ, அதை உண்டு பசி நீங்கிய அன்னப் பார்ப்புகள், அத்தாமரையின் கீழிருக்கும் பச்சைத் தேரைகள் தாலாட்டத் துயில்கின்றன,'' என இவ்வியற்கைக் காட்சியை ஓர் அழகிய சித்திரமாக வரைந்து காட்டுகிறார்.

சேலுண்ட ஒண்க ணாரிற் றிரிகின்ற செங்கா லன்னம்
மாலுண்ட நளினப் பள்ளி வளர்த்திய மழலைப் பிள்ளை
காலுண்ட சேற்று மேதி கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பாலுண்டு துயிலப் பச்சைத் தேரைதா லாட்டும் பண்ணை.

நாட்டுப் படலம்—13

இத்தகைய புலவர்களுள் ஒருவராய்த் திகழும் நம் கவியரசியார், இயற்கை இன்னலங்களைக் கண்டு மகிழ்வார். இயற்கையைக் காணுதலில் இவர் மனம் இன்புறுதல்போன்று வேறெதிலும் இன்பங் கொள்ளுதல் இல்லை. கடல், மலை, சோலை, இரு சுடர்கள் முதலிய இயற்கைப் பொருள்கள் இவர் நெஞ்சைக் கவர்ந்து கொள்ளும். இயற்கை அழகுகள் எங்கெங்குக் காட்சியளிக்கின்றனவோ அங்கெல்லாம் இவரைக் காணலாம். இவர் கவிதை உள்ளம் அவற்றை நாடிச் செல்லும்; அவற்றிற்கு ஆடை அணிகளை ஆய்ந்து ஆய்ந்து அணிவிக்கும். இவர் கவிகள் இயற்கைக்குப் புத்துயிரையும், புது ஒளியையும் ஈந்தன. இவர் கண்கள் அற்பத்திலும் அற்புதத்தைக் கண்டன. இயற்கை இவர் கவிகளால் நலம் பெற்றனவா என்பதுதான் ஐயப்பாடு! இம்முறையில் இயற்கையும் இவர் கவிகளும் ஒன்றுபடப் பிணைந்திருந்தன.

தேவியார் பலவகையான மலர்கள் மலர்ந்திருக்கும் ஒரு மலர் வனத்திற்குள் செல்லுகின்றார்;

சுற்றிப் பார்க்கின்றார். அவண் கொடிப்பூ முதலியன பூத்திருக்கின்றன. இவருக்கு உள்ளத்தில் மேன்மேலும் உவகை பொங்கி எழுகின்றது. "ஓ பூக்களே, நீங்கள் மேலும் கீழும் மலர்ந்து அந்தக் கொம்பை முற்றும் மறைத்துவிட்டீர்களே! 'இது மலர்களின் பத்தியா? கொம்பா' எனத்தெரிவதற்கியலவில்லையே! தன் உடல் முற்றும் மணம் நிறைந்த உங்களைத் தாங்கிக்கொண்டிருக்கும் அதன் புண்ணியமே புண்ணியம்! உங்கள் மணம், எங்கோ பறந்து செல்லும் வண்டுகளையும் உங்கள் பால் ஈர்க்கின்றது. உங்கள் தேனையும் மகரந்தத்தையும் உண்டு செல்லும் அவைகளின் பண்ணிசையைக் கேட்டு நீங்கள் களிக்கின்றீர்கள் போலும்! இது மட்டுமா, உங்கள் மணத்தைப் பல இடங்கட்கும் அனுப்பி அநேகரை மகிழச்செய்கின்றீர்கள்."

"செடிகளில் பூத்திருக்கும் ரோசா மலர்களே, நீங்கள் இலைகளோடு கலந்திருப்பினும், சில இடங்களில் இலைகளின் பச்சை நிறம் சிறிதும் தெரியா வண்ணம் கவிந்துகொண்டிருக்கின்றீர்கள்! இக்காட்சி ஓர் அரசி தன் மணத்தின்போது அணிந்துகொண்டிருக்கும் சிவந்த மெல்லிய பட்டாடையைப் போன்றுள்ளது!"

"இம்மலர்களைச் சுற்றிச் சுற்றிப் பறக்கும் பறவைகளே, என்னைக் கொண்டுபோய் ரோசா மலர்களினுல் மறைத்து விடுங்கள்! அதன் தேனில் என்னை அமிழ்த்தி விடுங்கள்! நெருப்புப் போன்று செவ்விய நிறம் வாய்ந்த அந்த ரோசா மலர்களோடு என்னைச் சேர்த்துக் கட்டிவிடுங்கள்!" என்று இயம்பி இயம்பி இன்பத்தில் மூழ்குகின்றார்.

முதன் முதலில் கவியரசியாரிடமிருந்து கவி வெளிப்பட்டதற்கு ஒரு காரணம் சொல்லப்படுகிறது: இவர் பள்ளியில் படிக்குங்கால், ஒருநாள் ஆசிரியர் கொடுத்த ஒரு கணக்கைப் பன்முறை செய்தும் சரியான விடை கிடைத்திலதாம். அஃது இவர் மனத்தை வருத்த, அவ்வமயம் இவருக்குச் சில உணர்ச்சிகள் உண்டாயினவாம். அவ்வுணர்ச்சிகள் கவிகளாக உருப்பெற்றெழுந்தனவாம். அக்காலத்திலிருந்தே இவர் கவிபுனையத் தொடங்கினராம். இவர், தம் பதின்மூன்ருவது வயதிலேயே, ஆறு நாட்களில் ஆயிரத்து முன்னூறு அடிகளையுடைய ஒரு கவியை இயற்றியதே, இவர் இளமையிலேயே கவிபாடும் வன்மை பெற்றிருந்தார் என்பதற்குப் போதிய சான்ருகும். இவர் இலண்டனில் படித்துக்கொண்டிருக்கும் போதும், ஆங்காங்கே அமைந்துள்ள இயற்கை வளங்களைக் காணுதலும், கவி இயற்றுதலுமே இவர் மேற்கொண்ட செயல்களுள் முதன்மை பெற்றிருந்தன. அம்மனப்போக்கைக் குறைக்கவோ, தடுக்கவோ இவரால் இயலவில்லை. அதன்பொருட்டு இவர் முயலுவுமில்லை. தம் கவியைப் பிறர் நோக்க வேண்டுமென்ருவது, புகழ வேண்டுமென்ருவது இவர் கருதிலர்; தம் கவிகள் தமக்கு இன்பமளிப்பதே தாமடையும் பயன் எனக் கருதினர். ஆயினும், கவி இயற்றும் இவர் ஆற்றலைப் பிறர் அறியாமலுமில்லை. இவர் பெற்றிருப்பது பொருட்செல்வமா? பொருளாயின் மற்றவர் காணுது பெட்டியில் பூட்டி வைக்கலாம். இக்கல்விச் செல்வத்தை அதினும் கவி நிதியை எவ்வாறு மறைக்கக் கூடும்! கவிஞர் நாவைத் தாழிட்டுவைக்க யாரால் முடியும்! அது நெஞ்சை அள்ளிக்கொள்ளும் பொருள்

களைக் காணும்போதெல்லாம் கவிபாட முந்துருதோ! அஃதும் இவர் கவிகள் ஆங்கில மொழியில் அமைந்திருந்தன. ஒருவர் அந்நியர் மொழியைக் கற்றுக் கொள்ளுதலே கடினம். அதனினும் அவற்றிலுள்ள பொருள்களைத் தெள்ளிதின் தெரிந்துகொள்ளுதல் மிகக் கடினம். அங்ஙனமிருக்க, தம் உள்ளத்தில் உண்டாகும் உணர்ச்சிகளைப் பிற மொழியில் செம்மையுறக் கவிகளால் வெளிப்படுத்துவது எத்துணை அருமைப்பாடாகும். கவிகள் எம்மொழியிலேனும் அமைந்திருக்கலாம். இவ்விஷயத்தில் நோக்குவது மொழியைப் பற்றியன்று. கருத்தைப் பற்றியே யாகும். ஆயினும், பெரும்பான்மையோருக்குத் தம் தாய் மொழியில் தான் இப்பேறு வாய்த்திருக்கும்; ஒருசிலருக்குப் பிற மொழியிலும் அமைந்திருப்பதுண்டு. இஃதொருவிதச் சீர்மை. பிற மொழியில் புலமை பெற்றுக் கவியியற்றும் வன்மை வாய்ந்தவர், நம் இந்திய ஆடவருள் தாகூர் போன்ற சிலருண்டு. ஆனல், இந்திய மங்கையருள் நம் சரோஜினி தேவியாரைத் தவிர வேறொருவரையும் குறிப்பிக்க முடியவில்லை. வயதோ இளமை! மொழியோ அந்நியருடையது! கருத்தோ உயரியன! இந்நிலையில் இவர் கவிகள் யாருக்குத்தான் வியப்பை உண்டாக்கா.

ஒருவர் கவிபாடுதல் என்பது எளிதன்று. அதிலும் அறிஞர் போற்றும் வகையில் ஒருவர் கவி அமைத்தல் என்றால் அதற்கு இயற்கை அறிவும் இறையருளும் இருத்தல்வேண்டும். இம்முறையில், தேவியார் ஓர் உயரிய கவி என்பதை ஆர்தர் சைமன்ஸ், எட்மண்ட்காஸ் முதலிய ஆங்கில அறிஞர் சிலர் அறிந்தனர். இவர் இளமையும், கவியின்

சிறப்பும் அவர்களை வியப்பில் ஆழ்த்தின. இவர் இளமையை நோக்கில் இவர் கவியை நம்ப முடியவில்லை. இவர் கவியை நோக்கில் இவர் இளமையை நம்ப முடியவில்லை. ஒருவர், தம் தாய் மொழியல்லாத பிறமொழியில் உயரிய பொருள்கள் நிரம்பிய பாடல்களைப் பாடுவதை அவர்கள் கண்டது அதுவே முதன்முறையாகும். அவர்கள் இவரிடத்தில் மிக்க அன்பும் மதிப்பும் கொண்டதுமல்லாமல், இவரைக் கவி பாடுவதில் மேன்மேலும் ஊக்கவேண்டும் என்னும் கருத்தும் அவர்கட்கு உண்டாயிற்று. ஆதலின், அவர்கள் இவர் இயற்றிய கவிகளுள் சிலவற்றைத் தொகுத்து நூல் வடிவில் கொணர்ந்தார்கள். தாம் செய்த கவிகள் நூல் வடிவு கொண்டு வெளிப்போந்ததைக் கண்டதும், தேவியாருக்கு அளப்பிலா ஆனந்தம் பெருகிற்று. அஃது இவருக்கு மனக் கிளர்ச்சியையும் ஊட்டிற்று. பின்பு இவர் பல பொருள்களைப் பற்றிப் பாடத் தொடங்கினர்—ஊற்றிலிருந்து நீர் சுரத்தல் போன்று, இவர் உள்ளமாகிய ஊற்றிலிருந்து பல கவிகள் பெருகிக்கொண்டே இருந்தன.

மற்றக் காலங்களைக் காட்டிலும் இளவேனிலே இயற்கைப் பொருள்களுக்கு அழகையும், மக்களுக்கு ஆனந்தத்தையும் ஊட்டுங்காலமாகும். நம் நாட்டினரினும் மேல் நாட்டாரே இவ்விளவேனில் செல்வத்தில் திளைத்து வாழ்பவராவர். அக் குளிர்ந்த நாட்டில் இதற்கு மிக்க குதுகலம் உண்டு போலும்!

நம் அன்னையார் மேல்நாட்டிற்குச் சென்றிருந்தபோது, வெளியிடங்களிற் சென்று இளவேனில் இன்பத்தைத் துய்க்க இவர் ஒருநாளும் மறந்துவிடுதல் இல்லை. ஒருநாள் இவர் இளஞ்

சிறுவருடன் பூஞ்சோலைக்குப் போகிறார்; அவர்களுடன் தானும் விளையாடுகிறார். அச்சிறுவர்க்கு மிகுந்த பெருமையும் ஆனந்தமும் உண்டாகின்றன. அவர்கள் ஆங்காங்கே ஓடி மலர் இலை காய்களைப் பறிக்கின்றார்கள். அவர்களை ஒருங்குகூட்டி, "குழந்தைகளே, இப்போதுதான் நாம் நீர் விளையாடவேண்டும். யானும் உங்களோடு விளையாட வருகிறேன். அதோ பாருங்கள், எங்கும் மைனு, புரு முதலிய பறவைகள் பாடுகின்றன. உங்களுக்குச் சம்பங்கி மலர் வேண்டுமா? நீங்கள் புதர்களினால் மறைக்கப்பட்ட நீர்ச்சுனைகளைக் காண விரும்புகின்றீர்களா? அவைகள் எங்கெங்கே உள்ளன என்பதை யானறிவேன்! அவைகளை எல்லாம் உங்களுக்குக் காட்டுகின்றேன். என்னுடன் வாருங்கள்," என்கிறார். இளவேனிற் காலத்திலும், அக்காலத்தில் ஏற்படும் இயற்கை அழகிலும் இவருக்குள்ள சுவை, இவரை இளைஞராகப் பாவிக்கவும் அவர்களோடு சேர்ந்து விளையாடவும் செய்துவிடுகின்றது. ஒருபோது இவர் இயற்கையழகில் ஈடுபட்டிருக்குங்கால், "இந்த இடத்தைக் காட்டிலும் இன்பந்தரும் இடம் வேறு உளதோ! அழகும், பளிங்கும் போன்ற பளபளப்பும் அமைந்த தரையும், நிறங்களினால் தீட்டப்பட்ட சுவர்களும் உள்ள வீடுகளில் வாழ்ந்து வாழ்ந்து யான் சலிப்புற்றேன். சிறு சிறு சண்டைகள், பாட்டுகள், கொண்டாட்டங்கள், விழாக்கள் முதலியவற்றைப் பார்த்துப் பார்த்து எனக்கு வெறுத்துவிட்டன. ஆதலின், நிறைய பூத்துக் காய்த்துள்ள மரங்கள் அடர்ந்ததுவும், பறவைகளும், வண்டுகளும் இனிமையுடன் பாடுவனவுமான காட்டிற்குச் சென்று, ஒரு பெரிய மரத்தின் அடியில் தனியே இருந்து, சிந்

திக்க விரும்புகிறேன் ; தாமரை நிறைந்த தடாகங்களில் குளித்து இயற்கைக் கடவுளைத் தொழ என் மனம் விழைகிறது" என மகிழ்வுடன் பகருகிறார்.

கவியரசியார் இங்ஙனம் கவி இயற்றுவதில் வல்லுநராய்த் திகழ்ந்தது மட்டுமே யல்லாமல், சொற்பொழிவிலும் முன்னணியில் நின்றார். தங்கள் உள்ளத்திருந்து உதித்தெழும் கருத்துகள், சிலருக்கு உரையாகவும், சிலருக்குச் செய்யுட்களாகவும் வெளிப்போதல் உண்டு. இஃதொரு புண்ணியப் பேறாகும்! இப்புண்ணியம் யாவருக்கும் அமைதல் இல்லை; ஒரு சிலருக்கே பொருந்துகின்றது. இவர்களைத்தாம் முறையே, கட்டுரைக் களஞ்சியங்கள் என்றும், கவிப் புதையல்கள் என்றும் அறிஞர் செப்புகின்றனர். இந்நிலையில், இவருடைய கவிகளைப்போன்றே, இவருடைய சொற்பொழிவும் யாவர் மனத்தையும் கவர்ந்தது. இஃதும் ஆங்கிலத்திலேயே அமைந்திருந்தது. ஆயினும், ஆங்கிலத்தில் அதிகப் பயிற்சி இல்லாதவர்க்கும் இவர் சொற்பொழிவு விளங்கக்கூடிய நிலையிலிருந்தது. "இந்திய நாட்டு மகளிர் ஒருவர், அந்நிய மொழியில் இத்துணை எளிய நடையில் பேசுதல் மிக அருமை," எனப் பலரும் பாராட்டினர். ஒரு பொருளைப்பற்றி இவர் பேசுங்கால், புதிய புதிய கருத்துகளும், ஆழ்ந்த ஆராய்ச்சிகளும் அதில் இடம் பெறும். அரசியல் செய்திகளை இவர் இயம்பும்போது, இவருக்குண்டாகும் வீரமும் ஊக்கமும் செப்புந்தரமுடையனவல்ல. இவர் பேச்சும் போக்கும் பலருக்கும் உள்ளக் கிளர்ச்சியை ஊட்டும். இவர் சொற்பொழிவாற்றுமிடத்தில் பல்லாயிர மக்கள் குழுமி இருப்பார்கள். அத்தனை பேர் உள்ளங்களையும் இவர் ஓரிமைப்போதில் தம் வசப்

படுத்தி விடுவார். யாவரும் சித்திரப் பாவையென அமைதியுடனிருந்து கேட்பர். இவர் அரசியலில் நுழைந்த பின்பு, கவி இயற்றுவது சிறிது குறைந்தது. ஆயினும், காலம் நேர்ந்தபோதெல்லாம் இவர் நா கவி பகர்வதை மறத்தல் இல்லை. சில சமயங்களில் இவருடைய பொழுதுபோக்கிற்குச் சிறந்த சாதனமாயிருப்பன இவ்வினிய கவிகளே.

இங்ஙனம் தேவியார் இன்பப் பெருக்கெடுத்தோடும் கவிகளிலும், பொருள் ததும்பும் சொற்பொழிவிலும் புகழ்பெற்றுத் திகழ்வதைக் கண்ட பின்பே சட்டோபாத்தியாயருக்கு, "தம்மகளார் விஞ்ஞானத்தில் வீறு பெறவில்லையே" என்னும் கவலை சிறிது குறைந்தது.

திருமணம்

நம் கவியரசியார் வாழ்ந்து வந்த ஐதராபாத்திலேயே, மிலிடெரியில் சுபேதார் மேஜராயிருந்த பாஷ்யகாரலு நாயடு என்ற பெரியார் ஒருவர் இருந்தார். அவரது இல்லக் கிழத்தியாரின் பெயர் முனியம்மாள் என்பது. அவர்கள் தவப் பேற்றினுல் தோன்றியவரே கோவிந்தராஜுலு நாயடு என்பவர். அச்சிரியருக்கு ஸ்ரீராமுலு நாயடு, துரைசாமி நாயடு என்னும் இரண்டு சகோதரும், அம்மணியம்மாள், ஜானகியம்மாள், சின்னம்மாள், தாயாரம்மாள், செல்லம்மாள், என்னும் ஐந்து சகோதரிகளும் இருந்தார்கள். ஆனல், தற்போது இருப்பவர் ஒரு சகோதரரும் (துரைசாமி நாயடு) ஒரு சகோதரியுமே (செல்லம்மாள்) ஆவர். இம் மூன்று சகோதரர்களும் பெரிய குடும்பத்திற் பிறந்ததற்கேற்ப மேல்நாடுகளுக்கும் சென்று கல்வியறிவிற் சிறந்து

விளங்கினுர்கள். தந்தையார் திரட்டிய பொருளில் பெரும்பிரிவு அம்மக்களின் கல்வியின் பொருட்டே பயன்படுத்தப்பட்டது. நாயடு அவர்களின் சகோதரிகளும் உயர் குடும்பங்களிலேயே வாழ்க்கைப் பட்டு இல்லறத்தை நல்லற மாக்கினுர்கள்.

கோவிந்தராஜுலு நாயடு அவர்கள் தம் பதினெட்டாம் வயதில் பன்னிரண்டு வயதுடைய சாரதாம்பாள் என்னும் தம் மரபைச் சார்ந்த ஒரு மங்கையாரை மணந்துகொண்டார். இருவரும் இல்லற வாழ்க்கையில் நுழைவதற்கு முன்னரே (ஓராண்டிற்குள்) அவ்வம்மையார் இவ்வுலகத்தை நீத்தனர். அதன்பின்பே அவர் இங்கிலாந்தின் செல்கை ஏற்பட்டது.

நாயடு அவர்களுக்குத் தம் உடன் பிறந்தார்களிடம் மிக்க அன்புண்டு. அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கு அவர் எப்போதும் பின் வாங்கியதில்லை. கணவனை இழந்த சகோதரியார் ஒருவருக்கு அவ்வம்மையார் இறக்குமட்டும் வேண்டிய யாவையும் தாமே செய்துவந்ததாகச் சொல்லப் படுகிறது.

இங்ஙனம் தம் சுற்றத்தினருக்குமட்டும் நலம் புரிந்து உண்மையுடையவராக நடந்துகொள்கிருர் என்பதற்கில்லை. மற்றவருக்கும் உண்மையுடையவராகவும், தம்மாலான நலம் புரிபவராகவுமே வாழ்ந்து வருகிருர். அதனுல், அவருடைய உறவினரும் மற்றவரும், திருமணம் நடத்தல், வேறு விவகாரங்கள் பேசுதல், முதலிய யாவற்றிற்கும் அவரையே யோசனை கேட்பது வழக்கம். அவ்வவற்றிற்கேற்ற உபாயங்களைச் சொல்லும் நுட்பமதி அவருக்குண்டு. இன்னும் யாவரும் அப்பெரியாரின் வாக்கியத்தையே வேத வாக்கியமாகக் கொள்ளு

கின்றனர். அவரிடம் யாவருக்கும் மிக்க பிரியமுண்டு.

ஆனால், யாரேனும் தவறான வழியில் செல்லுதலோ, தாம் செல்லும் செம்மையான நெறிக்குக் குறைகூறுதலோ செய்யின், உடனே அவருக்குப் பெருங்கோபம் உண்டாகும். இவ்விஷயத்தில், பெரிய உத்தியோகத்தர் என்றும் நோக்குதல் இல்லை. யாரையும் கண்டித்துப் பேசிவிடுவார். இம்முறையில்எத்தனையோ முறை தம் உத்தியோகத்தை விட்டுவிடுவதற்கும் அவர் ஆயத்தமாய் இருந்தார். ஆனால், அவர் உண்மையை உணர்ந்த பெரியோர், அதுவரையும் செல்லுவதற்கு அவருக்கு இடந்தரவில்லை. அவருடைய செப்பமுடைமையை அவர்கள் நன்கு அறிந்திருந்ததே அதற்குக் காரணம். அவருக்கு மேஜர் பட்டமும் ஒன்று உண்டு. ஐதராபாத்திலிள்ள யாவரும் அவரை நன்கறிவர். பெரும்பான்மையோர் அவரை இன்றும் மேஜர் நாயடு என்றே அழைப்பர்.

நாயடு அவர்கள் உயர் போக்கும் எளிய நடையும் உடையவர். அவருடைய பரந்த உள்ளம் யாவரையும் வியக்கச் செய்யும். அவர்க்குப் பொருளற்ற கொள்கைகளும் மூட நம்பிக்கைகளும் பிடித்தல் இல்லை. சமயத்தின் சார்பாக நடைபெறும் அர்த்தமற்ற செயல்களிலும் கொடுமைகளிலும் வெறுப்புக்கொண்டார். போலி வேற்றுமைகளிலும் அவருக்கு நம்பிக்கை இல்லை. அவர் பிரம சமாஜத்தைச் சார்ந்தவர். அறச்சிந்தையும் பரந்த உள்ளமும் அவரிடம் அமைந்திருந்தன. ஏழைகளுக்கிரங்கும் இன்னலம் அவருக்குண்டு. ஒருவருடைய நற்குணங்களுக்கும், நடுவு நிலைமைக்கும் மதிப்புக் காட்டுவதல்லாமல், அவர்தம் செல்

வத்திற்கோ, நிலைமைக்கோ பெருமை அளித்தல் அவரிடம் அமைதல் இல்லை. எளியவரிடம் எளியவராகவும், உயர்ந்தவரிடம் உயர்ந்தவராகவும் நடந்துகொள்வர். கண்டவற்றிற்கெல்லாம் அஞ்சுதல் என்னும் கோழைத்தன்மை அவரிடம் குடிபுகுந்திலது. அஞ்சவேண்டியவற்றிற்கு அவர் அஞ்சாமலும் இல்லை.

"அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்" என்னும் திருவள்ளுவர் கருத்து அவரிடம் பதிந்திருந்தது. அவர் மருத்துவத் தொழிலில் நன்கு பயிற்சி பெற்றிருந்தார். தம் தொழிலிற்கேற்ற இயல்புகள் அவரிடம் காணப்பட்டன. இன்சொல்லும் இனிய முகமும் மருத்துவத்திற்கு இன்றியமையாதன அல்லவா? இவை அவருக்கு இயல்பாக அமைந்திருந்தன. மருத்துவத்திற்கென இவற்றைத் தாமாகவே வகுத்துக்கொண்டனர் அல்லர். ஆதலின், என்றும் எல்லாரிடத்திலும் அவர் இத்தன்மையாகவே நடந்து யாவருக்கும் இன்பத்தை அளித்தார். அவர் மருத்துவம் ஏழைகளுக்கே பெரிதும் பயன்பட்டது; ஏழைகளுக்கு நண்பரெனக் காணப்பட்டார். அவர்களிடம் பொருளை அவர் எதிர்பார்த்தல் இல்லை. செல்வரைக் காட்டிலும் ஏழைகளிடமே அவர் கனிவு மிகுதியும் பாய்ந்தது. ஏழை பங்காளராகிய அவரை யாவரும் வாழ்த்தினர். அவர் மருந்தைக் காட்டிலும், நோயாளிகளிடம் அவர் நடந்துகொண்ட அவர்கள் பிணியைப் போக்கி நலத்தை விளைத்தது, அவரவர்கள் உடல் தன்மையை அறிந்து மருந்தைப் பயன்படுத்துவதில் அவர் வல்லுநராய் இருந்தார். இதனால், எளியர் செல்வர் ஆகிய இரு திறத்தினருக்கும் அவர் மருத்

துவம் பயன்பட்டது. இவ்விரு பகுதியினருக்கும் அவரிடம் மதிப்பும் அன்பும் குடிகொண்டிருந்தன. பிணியை நன்கு ஆராய்ந்தறிந்து மருந்தீந்து வந்தமையின், பெரும்பான்மையோருக்கு நலமேற்படுகின்றது. அதனால், யாவரும் இவர் மருத்துவத்தில் நம்பிக்கை கொண்டனர்.

நாயடு தம்போன்ற உத்தியோகத்தரிடத்திலும் தம்மினும் மேற்பட்டவரிடத்தும் நலமுற நடந்து கொண்டார். அதனால், அவருக்குப் பல பெரியோர் நட்பினராயினர். இந்நட்புக் குழாத்திடையே இன்றும் கூடிக் குலாவி இன்புடன் காலங்கழிக்கின்றார்.

இம்முறையில், நாயடு அவர்களுக்கும் தேவியாருக்கும் பெரும்பான்மையான கொள்கைகள் ஒத்திருந்தன. இவர்கள் இருவரும் பழகி வருங்கால், இவர்களுக்குள் அன்பு ஏற்பட்டது. இவ்வன்பு இவர்களை மணஞ்செய்து கொள்ளும் நிலையில் கொண்டுவிட்டது. இருவரும் மணஞ்செய்து கொள்ள நிச்சயித்துக்கொண்டனர். சின்னாட்கள் கழித்துச் சரோஜினி தேவியார், தம் எண்ணத்தைத் தந்தையாருக்குத் தெரிவித்தார். கல்வியிலும், உலகப் போக்கிலும் பண்பட்ட டாக்டர் அகோரநாத சட்டோபாத்தியாய தம் மகளாரின் மனப்போக்கைத் தெரிந்துகொண்டார். இல்லற வாழ்க்கையின் இன்னலத்தையும் உண்மைத் தத்துவத்தையும் உணர்ந்த அவர், தம் புதல்வியாரின் விருப்பத்திற்குச் சிறிதும் தடைசெய்யக் கருதினார் இல்லை.

ஆனால், சுற்றத்தினருள் சிலர், "உயர் குலத்தில் தோன்றிய இம்மங்கை தம்மினும் தாழ் குலத்

தில் பிறந்த ஒரு நாயடுவை மணஞ்செய்து கொள்ளல் எவ்வகையினும் பொருத்தமானதன்று. அது பிறர் ஏளனத்திற்கு இடனாகும். கல்வியறிவிற் சிறந்த இவள் இங்ஙனம் நடந்துகொள்ளின், இனிப் பெண்களைக் கல்வியில் ஊக்குவதற்குப் பலரும் மறுப்பர். கல்வியே இவளை இங்ஙனம் கெடுத்ததென அநேகர் கருத இடந்தரும். இதைத் தந்தையார் தடுக்கவேண்டும். இவள் சிறு பெண். இவளுக்கு இதனால் பின் வரப்போகும் இன்னல்கள் யாங்ஙனம் தெரியும்! இவள் கல்விக்கும் குணத்திற்கும் தக்க ஆண்மகன் கிடைத்தல் அருமையன்று. இவளுக்கு இவ்வளவு கல்வியைக் கற்பித்தும் என்ன பயன்! கல்வியறிவிற் சிறந்த சட்டோபாத்தியாய இதற்கு இடந்தருதல் கூடாது; எனப் பலவிதமாகச் செப்பிக்கொண்டிருந்தனர். சுற்றத்தினர் சொற்களிலும், மகளாரின் கருத்திலும் உள்ள நன்மை தீமைகளை அவர் நன்கு உணர்ந்திருப்பினும், தம் புதல்வியாரின் காதல் மணத்தைத் தடுத்து நிற்க அவர் மனம் சிறிதும் இடந்தந்திலது, அவ்விருவருடைய அன்புப் பிணிப்பைப் பிரிக்க அவர் சிறிதும் எண்ணிலர். ஆதலின், அம் மணத்திற்கு அவர் தம் முழுமனத்துடன் ஒப்புக்கொண்டு அவர்கட்கு ஆசியும் கூறினர்.

சுற்றத்தினர் கருத்தையும் மற்றவர் வம்பளத்தலையும் சரோஜினி தேவியார் அறியாமலில்லை. ஆயினும், இவர் நெஞ்சம் டாக்டர் நாயடுவிடமே பதிந்திருந்தது. அதை வேறு இடம் திருப்ப இவர் இயல்பு இடந்தந்திலது. முதலில் மனத்தில் வரித்த ஒருவரைவிட்டு எக்காரணத்தினாலும் மற்றொருவரை மனத்திலும் நினைத்தல் பிழை என்னும் உயரிய கொள்கையில் இவர் உறுதியுடன் நின்றார். பிற

ருக்காக, "நாம் நம் ஒழுங்குமுறையிலிருந்து தவறு தல் கூடாது," என்பது இவருடைய ஊன்றிய எண் ணம். ஆகவே, இவர் நாயடுவையே மணஞ்செய்து கொள்ளத் தீர்மானித்துக் கொண்டார். தந்தை யாரும் இதற்கு அனுமதி தந்தது இவருக்குச் சிறிது ஆறுதலை அளித்தது.

நம் கவியரசியாருக்கும், டாக்டர் கோவிந்த ராஜுலு நாயடுக்கும் ஒரு நல்லோரையில் திரு மணம் நடந்தேறியது. சடங்குகள் யாவும் பிரம சமாஜத்தின் முறையின்படியே நிகழ்ந்தன. தேசீய வாதிகளும், சீர்திருத்தக்காரரும் இவ்வன்பு மணத் தைப் பாராட்டினார்கள். வைதிகர் இதற்குப் பல குறைகளைக் கூறி இகழ்ந்தனர். தம்பதிகள் பிறர் இசையையோ, வசையையோ மனங்கொண் டார்களில்லை. உலகம் பலவிதம் என்பதை நன் குணர்ந்த இவர்கட்கு இந்நிகழ்ச்சிகள் அற்புத மாகத் தோன்றவில்லை. அன்பினால் பிணைக்கப் பட்ட இவ்விருவரும் தம் இல்லறத்தைச் செம்மை வழியில் நடத்திவந்தனர். இவர்கள் இல்லம் கற்ற வர்க்கும், தேசீயவாதியர்க்கும், அறிஞருக்கும், சீர் திருத்தக்காரருக்கும் இருப்பிடமாயிருந்தது. அவர் கள் வீட்டில் எப்போதும் உலகப் போக்குகளைப் பற்றியும், தற்காலத்திற்கேற்ற சீர்திருத்தங்களைக் குறித்தும், அவற்றைக் கடைபிடிக்க வேண்டிய வழிகளைப்பற்றியும், பொதுப்பேச்சுகளும், வாதங் களும் நடைபெற்றுக்கொண்டிருந்தன. இவற் றிற்கு நாயுடுவே முதன்மையுற்றிருந்தனர். அப் போதைக்கப்போது தேவியாரும் இவற்றுள் பங்கு எடுத்துக்கொள்ளுவர். இம்முறையில் தேவியாரது அறிவு நாளுக்குநாள் பெருகிக்கொண்டே வந்தது. இவர்கள் வாழ்க்கை இவர்கட்கு மட்டுமே அன்றி

மற்றவர்க்கும் இன்பமளித்தது. நூற்கல்வியும் பொதுக்கல்வியும் பெற்ற காதலரின் வாழ்க்கையைக் கண்டு பலர் மகிழ்ந்தனர். அதனுற்றான், கற்ற ஆண் மகனுக்குக் கூடியமட்டும் கற்ற மகளிரையே வாழ்க்கைத் துணையாக்குவது நலமெனவும், அதற்குத் தக்கவாறு பெண்களைக் கல்வியில் முன்னேற்றுவது சிறப்புடையதெனவும் பல அறிஞர் கூறுகின்றனர். தற்போதுதான் அதன் பொருட்டுச் சில முயற்சிகள் செய்யப்படுகின்றன. ஆயினும், அவை இன்னும் மகளிருக்கு ஏற்றவகையில் பண்புறவில்லை. மங்கையருக்கு இல்லறத்தை நல்லறமாக்குதற்கும், மக்களை மாண்புறச் செய்தற்கும் தகுந்த கல்வியைப் பயிற்றுவித்து, அவர்களை உன்னத நிலைக்குக் கொண்டுவருவதே அறிஞர் கடமையாகும். வாழ்க்கைக்குப் பயனளியாத கல்வியினல் யார்தான் என்ன நன்மையை அடையமுடியும்! தற்போது தாங்கள் கற்ற கல்வி வேறும், நடத்தும் வாழ்க்கை வேறுமாக அல்லவோ நிகழா நிற்கிறது! இதனுல், நாடு எங்ஙனம் உயர்வைப் பெறுதல் கூடும்! நம்மகளிருள் ஒருசிலர் தாம், நம் சரோஜினி தேவியாரைப்போன்று பொதுத்தொண்டில் ஈடுபட்டிருக்க இயலும்! மற்றவர் யாவரும் தம் இல்லற வாழ்க்கையை வகைபட நடத்துபவர்தாமே! இதற்கேற்ற கல்வியையன்றோ அவர்கட்கு ஈதல் வேண்டும்! தம் இல்லப் பொறுப்புகளைத் திருத்தமுறச் செய்வதில் நன்கு பண்பட்ட மகளிர், நாளேற ஏறப் பொதுத்தொண்டிலும் ஈடுபட்டு நாட்டை நலமுறச் செய்யினும் செய்யக்கூடும்! இம்முறையில், வாழ்க்கைக்குப் பயன்படத்தக்க கல்வியைக் கற்ற மங்கையரால் யாவும் செம்மைப்படும் என்பது திண்ணம்.

இல்லறக் காரியத்திலும் பொதுத்தொண்டிலும் தேர்ச்சி பெற்றிருந்த தேவியார், தம் கணவருடன் சேர்ந்து வாழுங்கால், இவர்கள் அன்புவாழ்க்கைக்கு அறிகுறியாக இவர்களுக்கு இரு ஆண் மக்களும் இரு பெண்மக்களும் தோன்றினர்கள். ஆண் மக்களுக்கு, ஜயசூரியா, இரணதீரா என்றும் பெண் மக்களுக்கு பத்மஜா, லீலாமணி என்றும் பெயர்கள் சூட்டப்பட்டன. இக்குழந்தைகளும் நன்முறையிலேயே வளர்க்கப்பெற்றார்கள். உயரிய கல்வி பெற்ற பெற்றோரிடம் வளர்ந்துவரும் பிள்ளைகளைக் குறித்துப் பேசவும் வேண்டுமோ ?

தேவியார், தம் அருமைக் குழந்தைகளுக்குச் சூட்டிய பெயர்களின் சிறந்த பொருள்களைத் தம் கவிகளில் மிக அழகாக விளக்குகிறார். அப்பாடல்கள் தம் இளம் கொழுந்துகளைப் பார்த்துச் செப்புவனவாகவே அமைந்துள்ளன.

ஜெயசூரியா : சூரியனைப் போன்று வெற்றி வாய்ந்தவனே, உன் உயர்ந்த பெயரின் பொருளுக்கேற்ப நீ பாட்டிலும் நாட்டின் விடுதலைப் போரிலும் வெற்றி பெற்றுத் திகழ்வாயாக.

பத்மஜா : தாமரையில் வதியும் தூய மங்கையே, அழகிய பங்கஜத்தில் வதியும் திருமகள் உனக்கு எல்லாவித நன்மைகளையும் உண்டாக்குவாளாக. நீ சந்தோஷத்திற்கு இருப்பிடமாய் இரு.

இரணதீரன் : போர்க்களத்தில் வீரமாக ஒளிருபவனே, இராமாயணத்தில் இயம்பப்படுகிற வீரர் போன்று, நீ உன் வாழ்க்கையாகிய போர்களத்தைச் செவ்விய நெறியில் நின்று முறையுடன் நடத்துவாயாக. நீ யாவரிடமும் அன்பாயிருக்க மறந்துவிடாதே.

லீலாமணி: ஆனந்தத்தைத் தரும் அழகிய நீல மணி போன்றவளே, நீ உன் அழகிய பெயருக் கேற்ப நற்காரியங்களில் பிரகாசித்துக்கொண்டும், துன்பமில்லாமலும், என்றும் மகிழ்வுடனும் இருப் பாயாக.

இம்மக்களுள் இரணதீரன் இவ்வுலக வாழ்க் கையை நீத்தது பெரிதும் வருந்தத்தக்க செய்தி யாகும்!

ஜயசூரியா என்பவர் இயற்கை மருத்துவம் புரிந்து வருகிறார். ஆனால், அவர் பெரும்பான் மையும் மேற்கொண்டிருப்பது சமூகத்தொண்டே யாகும். அவருக்கு மணமாகிக் குழந்தைகளும் இருக்கின்றார்கள்.

பத்மஜா பொதுத்தொண்டு புரிந்து வருகிறார்.

லீலாமணி அரசாங்கத் தொழிலில் காலங் கடத்துகிறார்.

இவ்விருவருக்கும் இன்னும் மணமாகவில்லை.

ஆயினும், குழந்தைகள் யாவருமே தாயாரைப் போன்றே பிறர் நலத்திற்காக உழைத்து வருகின் றனர்.

7. கவியரசியாரின் மனப்பான்மை

நம் கவியரசியார், "நம் குடும்பத்தை முன்னேற் றுவது, நம் மக்களைச் சீர்திருத்துவது இத்துடன் நம் கடமை நின்றுவிட்டது," என நினைக்கும் குறுகிய எண்ணமுடையவரல்லர். இவர் நினைப்பு பொதுத் தொண்டில் ஈடுபட்டுத் தேசத்திற்கு நலமிழைப் பதிலேயே ஊன்றி நின்றது. "அதற்கேற்ற வழிகள் யாவை? அதன் பொருட்டுத் தமக்கு உதவி புரி

பவர் யாவர்? எங்ஙனஞ் செயல், மக்களுக்கும் தேசத்திற்கும் தடையும் தாமதமுமின்றிப் பயனளிக்கும்?" என்பவற்றையே இரவும் பகலும் இவர் நெஞ்சம் ஆராய்ந்துகொண்டிருந்தது. எப்போதெப்போது சமயம் வாய்க்கின்றதோ, அப்போதெல்லாம் தாம் கருதிய செயல்களை மேற்கொள்வர். இவ்விரிந்த மனப்பான்மையுடன் இவர் உலகத்தொண்டில் உழன்றுகொண்டிருக்குங்கால், தம் குடும்பத்திற்கும் தம் மக்களுக்கும் செய்யவேண்டுவனவற்றை மறந்து விடுதலும் உண்டு. இவற்றைக் கைவிட வேண்டுமென்பது இவர் கருத்தன்று. அவ்வாறு செய்தல் தக்கதன்று என்பதையும் இவர் அறிவார். இவர் பல உயரிய போக்குகளில் செல்லும்போது, இவருக்குத் தெரியாமலே அச்செயல்கள் விடுபட்டுப் போகின்றன. இக்காரியத்தில் இவர்மேல் குற்றஞ் சுமத்துவது யாங்ஙனம்? மேன்மை வாய்ந்த சில துறைகளில் செல்லுகின்றவருக்கு இக்குறை ஏற்படுதல் இயல்பாகும். இதை அறிஞர் தவறென நினைத்தல் இல்லை. சிலர் அவருக்குச் சிறந்தது எனத் தோன்றும் சிற்சில துறைகளில் செல்வதுண்டு. அவர்களை அதனின்றும் வேறு வழி திருப்புவது அருமையினுமருமையே! ஒருவருக்கு இறையன்பு பெருகுகின்றது. அவர் அதிலேயே ஆழ்ந்துவிடுகின்றார். அதிலிருந்து சிறிது விலகவும் அவரால் இயலவில்லை. அவ்வமயம் அவர் தம் சிற்சில கடமைகளை மறக்கத்தான் நேரிடும். அவர் செய்வது பிழை எனச் செப்ப இயலுமா? அவர் இயல்பு அவ்வாறிருத்தலின், அவர் கடமையை மற்றவர் ஏற்றுக்கொள்ள வேண்டுவதுதான். என்றேனும், அவர் நுழைந்திருக்கும் சீரிய

தொண்டே அவருக்கு உதவிபுரிந்து அவர் கடமையை முற்றுப்பெறச் செய்யவும் கூடும்! பக்தி இரத்தினமாகிய சக்குபாயின் கடமைகளைக் கண்ணன் ஏற்றுக்கொள்ள வில்லையா? எத்தனை தேசத் தொண்டர்களின் காரியங்களைக் கடவுள் தூண்டுதலால் பிறர் தாங்கி நடத்தவில்லை. உலகத் தொண்டும் இறைத் தொண்டும் வேறல்லவே! இறைவனால் தோன்றிய மக்களுக்குப் புரியும் நலம் இறைவனுக்குப் புரிந்ததன்றோ! அதைக்கண்டு இறைவன் இன்புறுவான் என்பதில் தடை யாது? தமக்குக் காரியம செய்பவரைக்காட்டிலும், தம் மக்களுக்குச் செய்பவரிடமல்லவா, பெற்றோர் மிக்க பிரியத்தைச் செலுத்துவது? ஆதலின், இவ்வுலகத் தொண்டினால் தேவியார் தம் இல்லறத் தொண்டில் சிலவற்றைக் கைவிடினும், அவை எங்ஙனமோ ஒழுங்கு முறையிலேயே நடைபெற்று வந்தன. இதற்கு இவர் அருமைத் தலைவர் நாயடு அவர்கள் முதற்காரணமாவார். இன்னும் சிலரும் உதவி புரிந்து வந்தனர். "ஊர் பிள்ளைகளைத் தாம் வளர்த்தால் தம் பிள்ளைகளைத் தெய்வம் ஊட்டி வளர்க்கும்," என்பது பழமொழியன்றோ!

தேவியார் பரந்த மனப்பான்மை ஓரிடத்தில் மட்டும் சென்றிலது. பல இடங்களிலும் சென்று உலவியது. "எச்செயலால் யார் நலமடைவர், நம்மால் யாருக்கு என்ன நன்மை செய்ய முடியும்," என்றெல்லாம் சிந்தித்துப் பார்க்கிறார். முதன்முதலில் இவர் உள்ளத்தில் தோன்றியவர் தோகையரே யாவர். அவர்களைக் கல்வியில் முன்னேற்றுவது தம் இன்றியமையாத கடமையெனக் கண்டார். "நம் நாடு நலமுறுதற்கு ஆண்மக்களின் உழைப்பு மட்டும் போதியதன்று. அரிவையரின்

ஆதரவும் அவசியம் வேண்டும். அங்ஙனம் மகளிர் ஆடவரோடு ஒத்துழைப்பதற்கு அவர்கட்குத் தக்க கல்வி வேண்டுமன்றோ! கல்விதானே மக்களுக்கு அறிவையும் ஆற்றலையும் ஈய வல்லது! ஆதலின், மகளிர் கல்வியில் யான் மனத்தைச் செலுத்தி அதற்காவன செய்வேன்,'' எனத் தீர்மானித்து, அதன்பொருட்டுப் பல முயற்சிகளையும் மேற் கொண்டார். அதனால், சில நன்மைகளும் கிடைத் தன.

ஒருகால், இவர் சொந்த ஊராகிய ஹைதரா பாத்தில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. அவ் வெள்ளம், அநேக பெரிய மாளிகைகள், நெற் களஞ்சியங்கள் முதலியவற்றை வாரிச்சென்று கட லிடம் ஒப்படைத்துவிட்டது. அங்ஙனமாயின் சிறு சிறு குடில்களைக் குறித்துச் சொல்லவும் வேண் டுமோ? செல்வர் பொருளிழந்ததைப்பற்றி வருந் தினும், உடைக்கும் உணவிற்கும் அத்துணைத் துன் பப்பட்டிலர். ஏழை மக்களோ இருக்க இடமும், அன்றைக்கு உண்ண உணவும் இன்றிப் பெரிதும் வருந்தினர். எளியவரின் பரிதாப நிலை அம்மை யாரின் இளகிய மனத்தை நீர்ப் பண்டமாக்கிற்று. அவர்கட்கு உதவி புரிதற்குப் பல ஆண்மக்கள் முன்வந்து உழைத்தார்கள். ஆயினும், அவ்வாட வர் செய்வதே போதியது என இருக்க இவர் மனப் பான்மை இடந்தந்திலது. ஆதலின், இவரும் அவர்களுடன் சேர்ந்து செயல் புரிந்து இந்திய மக்களிடமிருந்து ஒரு பெரு நிதியைத் திரட்டித் தந்தார். அப்பொருள் பல ஏழைகளுக்கு உண்டி, உடை, உறையுளை ஈந்தது. அவர்கள் ஆறுதல் நிலையைக்கண்ட அன்னையார் பேரானந்த மடைந் தார்; 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்'

என்பது நம் ஆன்றோர் அன்பு மொழி. அங்ஙனமாயின், உண்டி, உடை, உறையுள் ஆகிய மூன்றையும் உதவியவரை என்னென்றியம்புவது! இது மட்டுமன்று, இவர் விரிந்த மனப்பான்மை இன்னும் பல காரியங்களையும் மேற்கொண்டது.

இங்ஙனமே, அரசியார், தம் நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் இன்னல்கள் ஏற்படும்போதெல்லாம் அவற்றிற்கேற்ற காரியங்களைச் செய்து அவற்றைப் போக்கிவந்தார். பிறர் படும் துன்பத்தைப் பொறுத இவர் உள்ளம் அதை நீக்குவதிலேயே ஊன்றி நிற்கும். அதன்பொருட்டு எவ்வளவு கடின காரியங்களையும் மேற்கொள்வார்; மற்றவர் உதவிகளைப் பெறுதற்குப் பல இடங்களிலும் அலைந்து திரிவார். பொருள் கொடுக்க மனமற்றவரையும் தரும்படி செய்யும் சாதுரியம் இவருக்கிருந்தது.

இவர் நயமான வார்த்தைகள் ஈயாத லோபிகளையும் ஈயுமாறு செய்யும். இதனால், ஏற்படும் உடலுழைப்பையோ காலப் போக்கையோ இவர் சிறிதும் மனங்கொள்ளுதல் இல்லை. 'எங்ஙனமேனும் ஏழைகளை ஆதரிக்கவேண்டும்,' என்னும் ஒரே குறிக்கோள்தான் இவர் மனத்தில் பதிந்திருக்கும். அஃது இவரை எத்தகைய அருமைப் பாடுகளையும் தாங்கச் செய்யும்.

இவர் எளியவரிடம் இரக்க குணமுடையவர் என்பதை இவர் உளங்கனிந்து பாடிய பல பாக்கள் எடுத்துக் காட்டுகின்றன. அவற்றுள் ஒன்றின் கருத்தை இங்குக் கூறுவாம்:

ஓர் ஏழைக் கிழவி ஓர் ஆலமரத்தின் கீழ் உட்கார்ந்து 'அல்லா அல்லா' எனக் கூறிக்கொண்டே வழிப்போக்கரிடம் பிச்சை கேட்கின்றாள். சிலர்

இரங்கி அவளுக்குக் காசு கொடுக்கின்றனர்; மற்றவர் பேசாது செல்கின்றனர். இந்தக் காட்சியைக் காணுகின்ருர் அன்னையார். இவருக்குச் சில எண்ணங்கள் தோன்றுகின்றன. அவற்றைக் கனிந்த மனத்துடன் தம் பாடலால் வெளிப்படுத்துகின்ருர்.

"தான் வன்மையுடன் வாழ்ந்த இளம் பருவத்தில், தன் கணவனையும், மக்களையும் சுற்றத்தினரையும் உபசரித்துப்பாதுகாத்த முதியவள்ஒருத்தி, இவ்வமயம் தன்னை ஆதரிப்பவர் ஒருவருமின்மையின், ஓர் ஆலமரத்தினடியில் உட்கார்ந்து இறைவன் பெயர்களைக் கூறிக்கொண்டே வழிப்போக்கரிடம் யாசிக்கின்ருள். அவர்களுள் சிலர் இவள் நிலைக்கு இரங்கிக் காசு தருகின்றனர். மற்றவரோ வாளா செல்கின்றனர். ஆயினும், யார் காசு கொடுக்கினும் கொடாவிடினும் இவள் கவலைப்படுதல் இல்லை. இம்முதுமைப் பருவத்தில், ஏழ்மை நிலையில் இவள் கடவுள் திருநாமங்களைச் சொல்வதையே தனக்குக் கடமையாகக் கொண்டுள்ளாள். அவையே இவளுக்கு ஆறுதலளிக்கக் கூடியனவாயுள்ளன. அக்கடவுளையே நம்பி இவள் உயிர் வாழ்கின்ருள்" எனப்பகர்கின்ருர். இம்முறையில், ஏழைகளிடம் இவர் கொண்டுள்ள இரக்கம் எத்துணைத்து என்பது தெள்ளிதின் புலப்படுகின்றதன்றே?

இங்ஙனம் தேவியார் தம் சொந்த இல்லக் காரியத்திலும், தாம் பிறந்த நாட்டுக் காரியத்திலும் நுழைந்து செயல் புரிந்துகொண்டிருப்பினும், இவருடைய கவி உள்ளம், அழகிய பாக்களைப் புனையாமலிருத்தற்கு விட்டிலது. எங்ஙனம் பொருளில் பேரவாக் கொண்டவன் பொருள் கிடைக்கக்கூடிய

குறுகிய வழியிலும் நுழைந்து பொருளைத் திரட்டு வனே, அங்ஙனமே, அன்னையாரும் எப்போது எப்போது தம் கவிக்குத்தக்க வாய்ப்புக் கிடைக் கின்றதோ, அப்போதெல்லாம் பாக்களைப் பலபடி யாகப் பாடிக் குவித்தார். இவருடைய அழகிய கவி மலர்களின் மணம் இந்தியாவில் மட்டுமன்று உலகெங்கும் வீசத் தொடங்கிற்று. இயற்கையும், வளமும் வாய்ந்த இவர் கவிகள் இவரை அறிஞர் ஒவ்வொருவர் முன்னிலையிலும் கொண்டுபோய் நிறுத்தின. அப்பெரியார் இவரை நேராகக் கண் டிலரேனும், இவர் இயல்பு, உள்ளப்போக்கு முத லியவற்றைத் தெள்ளிதின் உணர்ந்தனர். ஒருவர் இயற்றிய கவிகளும், உரை நடைகளும் அவருடைய உள்ளக் கிடக்கையைத் தெளித்துக்காட்டும் கண் ணடிகளல்லவா? எங்ஙனம் சங்கீதக் கலையில் தேர்ந்தவரின் தலையும் கையும் எப்போதும் அசைத் துக்கொண்டும், தாளத்தைக் குறித்துக்கொண்டும் இருக்குமோ, அங்ஙனமே அரசியாரின் நா எங்குச் செல்லினும் பாட்டைப் பாடிக்கொண்டே இருக் கும். இம்முறையில், இவர் பாடிய பாக்கள் பல வாகும்: அவை இளவேனில் பாட்டு, தாலாட்டுப் பாடல், தமயந்தி தன் நாயகனுக்கு வீரத்தை ஊட் டும் பாக்கள் முதலியன.

கவியரசியாரின் இளவேனிற் பாக்களை ஆங் காங்கே குறித்துள்ளோமாதலின், அவை ஈண்டு வேண்டற்பாலனவல்ல.

தாலாட்டுப் பாடல் என்பது, குழந்தைகளின் பத்துப் பருவங்களுள் ஒன்றைப்பற்றிப் பாடும் பாட லாகும். இதைப் பெரியாழ்வார், கண்ணனை இளம் பருவத்தில் வைத்துப் பொருள்கள் நிறைந்த பாடல் களைப் பாடுவதிலிருந்து நாம் அறியலாம். இங்கு

இயற்கையே தமக்கு உண்டி, உடை, செல்வம், சுற்றம், இறைவன் எனக் கருதியிருக்கும் தேவியார், தம் குழந்தைகளுக்கு எத்தகைய தாலாட்டுப் பாக்களைப் பாடுகின்றார் எனக் காண்பாம் :

“என் அருமை அமுதே, வயல்களிலிருந்தும், தாமரைத் தடாகத்திலிருந்தும், வானளாவிய மலை உச்சிகளிலிருந்தும் அழகிய கனவுகளை யான் உனக்குக் கொண்டுவந்திருக்கின்றேன். சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டிருக்கும் உன் கண்களை மூடிக்கொண்டு நன்றாக உறக்கங்கொள். யான் கொணர்ந்துள்ள பொருள்கள் எல்லாம் உனக்குக் கனவாகத் தோன்றி உன்னை மகிழ்விக்கும்.”

“என் கண்ணின்மணியே, ஒளிவிட்டு ஒளிருகின்ற மின்மினிப் பூச்சிகள் செடிகளின் ஊடே தாவிச் செல்வதிலிருந்தும், கொடிகளிலும், மரங்களிலும் பூத்த பல நிற மலர்களிலிருந்தும் உன் மனத்தைக் கவரக்கூடிய கனவுகளை யான் களவாடி வந்துள்ளேன். என்னை அன்பினுல் நோக்கிக்கொண்டிருக்கும் நீ தூக்கத்திற்குச் செல். அவ்வமயம் அவ்வழகிய தோற்றங்கள் யாவும் உனக்குத் தோன்றும். அவற்ருல் நீ ஆனந்தமுறுவாய்.”

“என் அன்பின் கொழுந்தே, சந்திரன் வான வீதியில் அழகாகத்திரிந்து வருகின்ருன். வான் மீன்கள் எங்கும் ஒளியை விசிக்கொண்டிருக்கின்றன. இரவு வந்துவிட்டது. இனியும் நீ விழித்துக் கொண்டு மற்றவருக்குத் தொல்லை கொடுத்தல் கூடாது. ஆதலின், உன் நீலமணி போன்ற கண்களை மூடித் துயில்வாயாக. அப்போது நான் பாடும் பாட்டுகளெல்லாம் உன் காதில் இசைவது

போன்று கனவு காண்பாய். உனக்கு உவகையை ஊட்டும்.''

நளன், தன் நாட்டைப் பகைவர் கவர்ந்து கொள்ள மக்கள் பாட்டன் வீடுசெல்ல, தன் காதலி தமயந்தியுடன் கையற்ற நிலையில் காட்டில் ஒரு மர நிழலில் உட்கார்ந்துகொண்டிருக்கின்றான். இன்பத்திலும் துன்பத்திலும் தன் கணவனுக்கு வேண்டுவன புரிந்து அவனைக் களிக்கச் செய்யும் கற்பரசியாகிய தமயந்தி, அவ்வமயம் தன் கணவன் முகத்தில் தேங்கி நிற்கும் வருத்தத்தையும், மனத்தில் பொதிந்து கிடக்கும் சோர்வையும் ஊன்றி நோக்குகின்றாள்; தன் கணவனை ஊக்கிவிடுவதே தன் கடமை எனக் கருதுகின்றாள். அவள் நளனை நோக்கி, ''என் ஆருயிர்க் காதல, பல சான்றோரையும் துன்பத்திற்குள்ளாக்கும் தீயூழ், இன்று நம்மையும் இந்நிலைக்கு ஆளாக்கியுள்ளது! ஆயினும், பல மன்னரையும் வீரரையும் வென்று வெற்றிமாலை சூடிய நீர், இவ்வூழை எதிர்த்து நின்று, அதைத் தோல்வியுறச் செய்ய பிற்பட மாட்டீர் என்பது திண்ணம்! அதுமட்டுமன்று. முன்போ, நீர் ஒரு சிறிய நாட்டிற்கு அரசராய் இருந்தீர்! இப்போதோ, அளவுபடுத்த முடியாத இப்பரந்த இடத்திற்கு மன்னராகத் திகழ்கின்றீர்! பேரரசராகிய உங்கள் வரவிற்கு மகிழ்ந்து இப்பறவைகள் யாவும் குதுகுலத்துடன் பாடிக்கொண்டிருக்கின்றன! காற்றோ, மெல்லெனை வீசித் தன் கரங்களால் உங்களை வரவேற்கின்றது! இளஞ் சூரியனோ, தன் சிவந்த கதிர்களால் உங்கள் பாதங்களை அலம்புகின்றான். மரங்களோ, பூத்து மலர்களை உங்கள் தாள்களில் சொரிந்து பூசிக்கின்றன. சந்திரனோ, விண்மீன்களோடுங் கூடிய பரந்த

வானத்தை உங்களுக்கு ஆடையாகப் போர்க்கின்ருன். இந்த இயற்கை அரசை உங்களிடமிருந்து கவரப் பகைவரால் இயலுமா? இதை விதிதான் விழுங்கிவிட முடியுமா? இங்ஙனம் ஒருவராலும் கவர்ந்துகொள்ளக்கூடாத பெரிய இடப்பரப்பிற் கன்றே நீர் பேரரசராக விளங்குகின்றீர்! ஆதலின், உம்சோர்வை ஒழித்து ஊக்கங்கொண்டு மேல் நடைபெறவேண்டிய காரியங்களைச் செய்வீராக" என அவனுக்குத் தீரத்தையும் வீரத்தையும் ஊட்டுகிருள்.

இன்னணமாகிய பாக்கள் பல நம் தேவியாரின் கற்பனையால் வெளிப்பட்டுள்ளன. இவைகள் இவருடைய கற்பனைச் சக்தியையும் கவிப் புலமையையும் தெரிவிக்கின்றன அல்லவா?

கவியரசியார் நாளேற ஏறத் தம் கலை வளர்ச்சியில் பெரிதும் மனத்தைச் செலுத்தினர். அதினும், கவிக் கலையில் இவருக்கிருந்த ஆர்வம் அளவிடற் பாலதன்று. ஆனல், இவர் கலை முன்னேற்றத்திற்கு ஹைதராபாக்கம் இவருக்கு எவ்வகையினும் உதவி புரிந்திலது. ஆதலின், இவர் பம்பாய் நகரத்திற் குச் சென்ருர்; அங்குத் தாஜ்மஹால் என்னும் உணவு விடுதியில் தமக்கு ஓரிடத்தை அமைத்துக் கொண்டார். அவண் தம் கலை வளர்ச்சிக்கும் கவி புனைதற்கும் தக்க வசதிகளை ஏற்படுத்திக் கொண்டார். இவருக்குப் பொழுது மிக உல்லாசமாகக் கழிந்தது. இவர் நெஞ்சில் ஆறுதலும் ஆனந்தமும் நிலவி இருந்தன. இவர் ஹைதராபாத்தை விட்டு வெளியூருக்கு வந்திருந்தபோதும் தம் சொந்த நாட்டிற்கும், தம் குடும்பத்திற்கும் வேண்டுவனவற்றைச் செய்தற்கு மறந்தாரில்லை.

அவற்றை மிக்க கவனத்துடன் இயற்றிவந்தார். அவற்றிற்கும் பொதுத் தொண்டிற்குந் தம் காலத்தில் பெரும் பாகத்தைச் செலவழிக்க நேர்ந்தது. எஞ்சிய நேரத்தையே கவி இயற்றப் பயன்படுத்தினர். அக்காலம் மிகக் குறைவாயிருப்பினும், இவர் புனையும் கவிகள் எண்ணிக்கையில் குறைந்தில. சுருங்கிய காலத்தில் பல கவிகளைப் பாடும் வன்மை நம் அம்மையாருக்குண்டன்றே! இம்முறையில், இவருடைய கவிகள் குவிந்துகொண்டே வந்தன. இங்ஙனம் இவர் கவி இன்பத்தில் மூழ்கி இருந்தார். மற்றச் செயல்களைச் செய்யுங்கால், ஒரோபோது இவருக்குச் சிறிது சோர்வு ஏற்படினும் ஏற்படும். ஆனல், கவி இயற்றுங்காலோ அத்தகைய தளர்ச்சி ஒன்றும் இவருக்குத் தோன்றுதலே இல்லை. மற்றச் செயல்களில் உண்டாகும் தளர்ச்சியைப் போக்கிக் கொள்வதற்கு இவர் கவி புனைதலில் நுழைவார். இவருக்குப் பழைய ஊக்கமும், மன எழுச்சியும் உண்டாகும். தளர்ந்த உடலிற்கு வன்மை தரும் சில மருந்துகளைப் போன்று, சோர்ந்த மனத்திற்கு ஊக்கத்தைத் தர இவர் கவிகள் பயன்பட்டன.

முன்னர் குறிப்பித்தவாறு தேவியார் இயற்றிய கவிகளின் அருமை பெருமைகளைப் பல பிரிவுகளில் உள்ள அறிஞர் அறிந்து பெரிதும் கொண்டாடினர். மேல்நாட்டார், லார்டு டென்னிஸன், ஷெல்லி முதலிய மகா கவிகளோடு, சரோஜினி தேவியாரையும் ஒருவராக வைத்துப் பாராட்டினர். கவியில் வல்லுநரான இரவீந்தரநாத தாகூரைப் பற்றி நம் நாட்டில் பலர் அறிவர். அவருடைய கவிக்கு உலகம், எத்துணை மதிப்பை அளிக்கின்றதோ, அத்துணை மதிப்பை நம்தேவியார் கவிக்கும் அளிக்

கின்றது. கவியில் ஆழ்ந்திருந்த இவர் நெஞ்சம் காங்கிரசில் திரும்பாமல் அதனிடமே பதிந்திருக்கு மாயின், உலகக் கவிகள் யாவரினும், இவர் முன் னணியில் நிற்பர் என்பது சிலர் கருத்து. இப் போதும் இவர் கவிகள் எம்முறையிலும் பின் னடைந்தனவல்ல. இரவீந்தரநாத தாகூருக்குக் 'கவியரசர் என்னும் ஒரு சிறப்புப் பெயர் அமைந் திருத்தல் போன்றே, இவருக்கும் கவியரசியார் என்னும் ஒரு பட்டப் பெயர் அமைந்திருத்தல் யாவ ரும் அறிந்ததே!

இன்னும் குயிலுக்கு இனிமையாகப் பாடும் இயல்பு அமைந்திருத்தலின், 'குயில் கூவும்' என் னும் ஒரு சொற்றொடர் வழங்கிவருகின்றது. இனிய ஓசையுடன் பாடுகின்றவரை, 'குயில் போலப் பாடு கின்றனர்', எனக் கூறுகின்றோமல்லவா? இறை வன் இனிய பண்ணிற்கு வசப்படுபவனாதலால், நம் ஆழ்வார்களும், நாயன்மார்களும் குயிலை இறைவ னிடம் தூது செல்ல விடுகின்றனர். அஃது இனி மையாகப் பாடி இறைவனைத் தம்பால் கொணரு மென்பது அவர்கள் கருத்துப் போலும்! பாரதி யாரும் குயிலைப்பற்றி மிக அழகாகப் பல பாக்கள் பாடியுள்ளார். இவைகளினால் குயில் ஈசுவரனைத் தன்பா லீர்க்கும் குரலோசையை உடையது என அறிந்தாம். இத்தகைய இனிய ஓசை நம் அரசியாரிடம் அமைந்திருந்ததினாற்றான், இவ ருக்கு அறிஞர் **இந்தியாவின் கவி கோகிலம்** எனப் பெயர் சூட்டியுள்ளனர்! இஃது எத்தகைய சீரிய பட்டமாகும்.

இப்பெயரை ஊன்றி நோக்குதல் வேண்டும். **கோகிலம்—கவி கோகிலம்—இந்தியாவின் கவி கோகிலம். கோகிலம்—இவர், மக்களுக்குப் பொருளாகாத**

எதையோ ஒன்றை இனிமையுற இசைக்கும் வெறுங் குயிலல்லர். கவி கோகிலம்—மக்களறிவிற்குப் பெரு விருந்தளிக்கக்கூடியனவும், பொருளை ஆய்ந்து களிக்கக்கூடியனவுமான பயனும் பண்பும் நிரம்பிய சொற்களால் புனையப்பட்ட பாவை இசைக்கும் கவி கோகிலமாவர். இம்மாண்பு வாய்ந்த கவி கோகிலம் பிற நாட்டினருக்குச் சொந்தமானதன்று. தோன்றியநாள் தொட்டுப் பல நலங்களையும் பெற்றிருப்பதும், எத்தகை இடுக்கண் காலத்திலும் இன்னலத்துடன் திகழ்வதும், பல தவத்தினர், சான்றோர், அறிஞர் முதலியவரை அப்போதைக்கப்போது தோற்றுவித்து ஆனந்தமுறுவதும், ஆதரவற்ற பலரையும் தாங்கி நிற்பதும், இறையருளை வாய்க்கப் பெற்றதுமான இந்தியாவிற்கே உரித்தான கோகிலம் என்னும் பொருள்பட இச்சிறப்பு வாய்ந்த பெயரை இவருக்கு இட்டுள்ளார். இஃது இவருக்கு மட்டுமா ? இவர் குலத்திற்கு மட்டுமா ? இவர் உதித்த ஊருக்கு மட்டுமா ? இந்தியா முழுமைக்குமே பெருமையளிப்பதாகும்.

இதுமட்டுமன்று. பொதுமக்கள் தேவியார் மாட்டுக் கொண்டுள்ள உயரிய எண்ணத்தைத் தழுவி, இந்திய அரசாங்கமும் இவருக்கு, 'கெய்சரிஹிந்'' என்னும் ஒரு பதக்கத்தை ஈந்தது. இதற்கு முந்தி இப்பதக்கத்தைப் பெற்றவர் இரவீந்தரநாத தாகூர் ஆவார். ஆனால், இத்தகைய பதக்கத்தை நம் இந்திய நாட்டில் தோன்றிய பெண்மணிகளுள் ஒருவரும், இவருக்கு முந்தியோ, அன்றி இவருக்குப் பிந்தி இதுவரையுமோ பெறவில்லை என்பது யாவரும் அறிந்ததொன்று. இங்ஙனம் உயரிய பட்டத்தையும், சிறந்த பெயரையும் பெற்றுத் திகழ்ந்த நம் தேவியாரால் பொதுவாக மக்களுலக

மும், சிறப்பாகப் பெண்ணுலகமும் பெருமையடைந் தது. அந்நிய நாட்டாரால் அம்மொழியில் வல்லுநராலேயே இவர் ஆங்கிலக் கவிகள் போற்றப் பட்டதெனில், நம் இந்திய நாட்டார் இவரைப் புகழ்ந்து கொண்டாடினர் என்பதில் என்ன வியப் புளது! சிலர், சரோஜினி தேவியாரை ஒரு தெய் வக் கன்னியரென்றும் நினைக்கின்றனர். சிலர், கவி இயற்றுவதில், பக்குடுக்கை நன்கணியார், பாரி மகளிர், மாரேக்கத்து நப்பசலையார், வெண்ணிக் குயத்தி யார் முதலிய நம் பண்டைப் புலவச் செல்விகளின் குழுவைச் சார்ந்தவரென்றும், சொற்பொழி வாற்றுவதில் அவைக்கு அஞ்சா அருந்திறர் கூட் டத்தைச் சார்ந்தவரென்றும் சொல்லிக்கொள்ளு கின்றனர். இவருக்குக் கவித்திறனைப் போன்றே சொற்றிறனும் அமைந்துள்ளதைக் கண்டு வியவாத வர் இலர்.

சொற்பொழிவாற்றுந் திறம் இவரிடம் செவ் வனே அமைந்திருந்ததென்பதை முன்னரே தெரி வித்துள்ளோம். ஒரு பெரிய அவையின்கண்ணே குழுமியிருப்பவர் ஒரு திறப்பட்டவராய் இருப்பர் என எதிர்பார்த்தற்கியலாது. அறிஞர், கலைஞர், தத்துவ ஞானிகள், விஞ்ஞானிகள், நடுத்தரக் கல்வி வாய்ந்தவர், சிறிது கற்றவர் இத்தகைய பலர் சேர்ந் திருப்பர் என்பது உண்மை. அங்ஙனம் பலவகைப் பட்டவர் கூடியிருக்கும் அவையில், ஒருவர் ஒரு பொருளைப்பற்றிச் சொற்பொழிவாற்றுவதென்பது எளிய காரியமன்று. அஃது அவணுள்ள ஒவ்வொரு வருக்கும் சிறிது நலத்தையேனும் தருதல்வேண்டும். மேற்கூறிய தொகுதிகளுள் எத்தொகுதி அதிகப் பட்டுள்ளதோ, அதற்கேற்பவும், இடம் காலத்திற் குப் பொருந்தவும், தாம் எடுத்துக்கொண்ட பொரு

ளைத் தொகுத்தும், வகுத்தும், விரித்தும் சொல்லுதல் வேண்டும். இவர்க்குச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் இன்றியமையாதது. தாம் எடுத்துக்கொண்ட பொருளைக் குற்றமற்றதும் பொருத்தமானதுமான சில சொற்களால், பிறர் மனத்தில் பதியுமாறு சொல்லத் தெரியாதவரே, பல வார்த்தைகளைத் தொடுத்துக் கூற விரும்புவர். இதனுல், காலம் வீணுகுவதுமல்லாமல், கேட்பவருக்கும் அத்துணை இன்பத்தை ஈதல் இல்லை. இச் செயலைச் செந்நாப்போதர்,

"பலசொல்லக் காமுறுவர், மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்ரு தவர்"

என்னும் குறளால் நன்கு கண்டிக்கிருர்.

ஒருவர் பல நூல்களை ஊன்றிக் கற்கிருர்; அதிலுள்ள பொருள்களை ஆய்ந்து ஆய்ந்து நோக்குகிருர். அவ்வரிய பொருள்கள் அவருக்குப் பேரானந்தத்தை அளிக்கின்றது. அவர் கற்றதனுல் ஆய பயன் இத்துடன் முடிந்துவிட்டதா? இல்லை. அப்பொருள்களை மற்றவரும் தெரிந்து இன்பமுறுமாறு அவற்றை விரித்துச் சொல்லுதல் வேண்டும். அப்போதே அவர் கற்றதன் பயன் முற்றுப் பெறுகின்றது. இவ்வன்மை அவருக்கின்றேல், அவர் கற்றதனுல் பிறருக்கு யாதொரு நன்மையும் உண்டாதல் இல்லை. அத்தகையவர், கொத்துக் கொத்தாக மலர்ந்திருந்தும் மணமற்ற மலருக்கு ஒப்பாவர் என்பது திருவள்ளுவர் கருத்து.

"இணரூழ்த்து நாரு மலரணையர் கற்ற
துணர விரித்துரையா தார்" திருக்குறள்.

இவற்றை மனத்திருத்தி நம் தேவியாரிடம் செல்லுவோமாயின், இவர் சொற்பொழிவு இந்தி

யாவில் மட்டுமா! மேல்நாட்டின் பல பகுதிகளிலும் நிகழ்ந்துள்ளன அல்லவா? எப்பொருளைப் பற்றி எங்கு இவர் பேசினும், அங்குத் திரளும் மனிதர், எண்ணிக்கையில் அடங்கார். எத்துணைப் பெரிய இடமாயிருப்பினும், இடக்குறைவு ஏற்படுமேயன்றி, மக்கள் குறைவு ஏற்படுதல் இல்லை. இவர் எழுந்து நின்றதும் கை கொட்டலினல் பேராரவாரம் செய்வர், இவர் வாய் அசையத் தொடங்கியதும் ஊசி வீழினும் ஒலி கேட்கக்கூடிய அவ்வளவு அமைதியுடன் இருப்பர். இவ்வமைதி இறுதிவரையும் நிலவும். முடிவுவரைக் கூட்டமும் கலைதலில்லை. கேட்பவர் கண்கள் தேவியார் மாட்டும், மனம் இவர் எடுத்துரைக்கும் பொருளினிடத்தும் பதிந்து கிடக்கும். இடையிடையே சிரிப்புச் செய்திகள் இடங்கொள்ளும். இவர் பேச்சு ஆங்கிலத்தில் இருப்பினும், அது சிறிது கற்றவர்க்கும், பொருளாதல் பாராட்டத் தக்கதாகும். பெண்கள் கூட்டமும் மிகுதியாக இருக்கும். ஏறக்குறைய ஐந்தாறு ஆண்டுகட்கு முன்பு, இவர் மாம்பலத்தில் வந்து சொற்பொழிவாற்றியபோது திரண்டு சென்ற மாணவி மாணவர் கூட்டத்தையும், மற்றவர் பெருக்கத்தையும் கண்ணுற்றவர், யாம் கூறியவற்றில் ஐயங்கொள்ளார். இதனல், விளங்கப்படுவது யாது? இவர் பொருள் நுட்பங்களைத் தக்க முறையில் எடுத்துரைக்கும் சொல்லாற்றல் உடையவர் என்பதன்றோ?

சரோஜினி தேவியாரின் இன்னெரு திறத்தையும் இங்குச் சொல்லாமல் விடுதற்கு மனம்விடவில்லை. சொல்வன்மை என்பது, பிறர் நெஞ்சில் பதியுமாறு சொற்பொழிவாற்றுதல் மட்டுமன்று. தங்களைச் சார்ந்தவர்க்கு நலமுண்டாதற் பொருட்

டுக் காரியம் நிறைவேற்றுதற்கு உரித்தானவரிடம் சென்று, தாம் கருதியது கைகூடும் வகையில் அவருக்குத் தொகுத்தும் வகுத்தும் எடுத்துச் சொல்லி, அது நடைபெறுதெனத் தோன்றுமாயின், அவரிடம் வாதிட்டு உண்மையை நிலை நிறுத்தி வெற்றி பெறுவதற்கேற்ற சொற்களைப் பகர்வதும் சொல் வன்மையே ஆகும். இத்திறமை வாய்ந்தவரைத் தான் தூதுவர் என்கின்றோம். இவருக்குப் பல இலக்கணங்கள் அமைந்திருக்க வேண்டுமாயினும், பரந்த கல்வியும், நுண்ணிய அறிவும், தோற்றப் பொலிவும் இன்றியமையாதனவாகும். சுக்கிரீவன் சார்பாக, ஸ்ரீராமபிரானிடம் தூது போந்த அனுமானுடைய சொல்வன்மையை ஸ்ரீராமரே வியந்துரைத்து, 'சொல்லின் வல்லோன்' என்னும் பட்டத்தையும் ஈந்தாரல்லரோ? இம்முறையில், சரோஜினி தேவியார் நம் நாட்டு மக்களின் நலத்திற்காக அரசாங்கத்தினரிடம் எத்தனை வகையில் வாதிட்டு வெற்றி பெற்றுள்ளார் என்பதை அறியாதார் யார்? இதற்குக் காரணம் இவருடைய சொல்வன்மையே யன்றோ?

கவித்திறனும் சொற்றிறனும் ஒன்றிற்கொன்று மிக்க உறவுடையதாகும். இவ்விரண்டும் கருத்துக்களைக் கவின்பட உரைப்பதிலோ, பிறர் மனத்தைக் கவருவதிலோ, சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலிலோ, எண்ணிய காரியத்தைக் கைகூட்டுவதிலோ ஒருதிறப் பட்டன அல்லவா? இவை இரண்டிற்கும் உலக அனுபவம், ஆழ்ந்த கல்வி, நுட்பமதி, சாதுரியம் முதலியன வேண்டற்பாலன என்பதை மறுப்பவர் யார்? இவ்விரண்டும் தம்மை உடையவரை உயர் பதவியில், உச்சநிலையில் நிறுத்தும் என்பது திண்ணம். அதிகம் கூறி

என், இவை இரண்டில் ஏதாவது ஒன்றில் திறம் பெற்றிருப்பவரையே உலகம் போற்றும் என்பது ஒருதலை. அங்ஙனமாயின், அயல்நாட்டினரும் நம் நாட்டினரும், வேதாந்திகளும், சித்தாந்திகளும், வைதிகரும், இலௌகிகரும், பழைய கொள்கையின ரும், புதிய கொள்கையினரும், ஆண்களும், பெண் களும், இளைஞரும், முதியரும் பாராட்டுமாறு இவை இரண்டிலும் தேர்ச்சி பெற்றிருக்கும் நம் தேவியாரைப்பற்றி என் புகல்வது! கவியிலும் சொல்லிலும் விரிந்து செல்லும் இவர் மனப் பான்மை போற்றத்தக்கதே! இவர் இயற்றிய புண்ணியம் மிகச் சிறந்ததாகும்! இதைக்குறித்து நாம் பெருமை அடையவேண்டியவர்களே! அன்னை யாரின் கவியும் சொல்லும் ஓங்கி வளர்வதாக. இவருக்கு மங்களமுண்டாவதாக.

8. தேசத்தொண்டு

சரோஜினி தேவியாருக்கு அந்தப் பம்பாய் மாகாணத்தில் ஒரு புதிய உணர்ச்சியும் புதிய போக்கும் ஏற்பட்டன. அங்குக் காங்கிரசு ஒலி எங்கும் ஒலித்துக்கொண்டிருந்தது; சுதந்திரமணி எங்கும் அறைந்துகொண் டிருந்தது. அவ்வோசைகள் அடிக்கடி இவர் செவியைத் தொளைத்தன. காங் கிரசின் கருத்துக்களும் கொள்கைகளும் இவர்க்குச் சிலரால் விளக்கப்பட்டன. கவி உலகத்திலேயே மூழ்கித் தம்மைத்தாம் மறந்திருந்த இவரை இவ் வொலி வேறு வழியில் திருப்பிற்று. இவர் கண் கள் புதிய ஒளியைப் பெற்றுத் திகழ்ந்தன. அவ் வொளியினால் இவர் தம்மைச் சூழ்ந்துள்ள சுற்றுப் புறங்களைப் பார்த்தார். நாட்டின் குறைபாடுகளும், இழிநிலையும், வறுமையும் இவர் கண்களுக்குப் புல

னுயின. தம் நாட்டின் பரிதாபநிலை இவரை வீறிட்டு வெளிப்படுமாறு செய்தது. அது முன் போல் தம் கவிதா உலகிலேயே தோய்ந்திருக்கு மாறு இவரை விட்டிலது. எப்போதும் கவிகளைப் பாடிப் பாடிக் களித்திருக்கும் தம் மனப்போக்கை இவர் சிறிது குறைத்துக்கொண்டார். ஒன்றில் பண் பட்டவர், எதில் நுழையினும் அதில் உயர்வுபெற்று விளங்குவரல்லவா? அங்ஙனமே, செல்வத்திரை களினுல் அசைந்துகொண்டும், கலைத் தெப்பத் தில் களித்துக்கொண்டும் இருந்த தேவியார், காங் கிரசின் கரையில் இறங்கி உலகியல்பையும், மக்கள் தன்மையையும் உற்று நோக்கினர். "நம் தேசத் திற்கும் நம்தேச மக்களுக்கும் வேண்டுவன செய்ய வேண்டும்," என்னும் ஓர் ஊன்றிய எண்ணம் இவ ருக்குத் தோன்றிற்று. அங்கு நிகழும் அரசியல் புரட்சிகளைக் கண்ணுற்ருர். அவை இவருக்குத் தனி உணர்ச்சியை உதிக்கச் செய்தன. இது காறும் தம் சொந்த நாட்டின் நலத்தைத் தேடாது, வீணே காலங்கழித்ததற்காக இவர் பெரிதும் வருந் தினர்; எங்ஙனம் ஆழ்வார்களும் நாயன்மார்களும் இறைவனருளால் உண்மை ஞானம் பெருதபோது தங்களைப் பிறந்தவராகக் கருதிலரோ, அங்ஙனமே தேவியாரும் தம் தேசம் படுந்துயரத்தை அறியாது போக்கிய நாளெல்லாம் தாம் பிறவாத நாளெ னவே எண்ணினர். நாட்டின் நிலை இவர் மனத் தைப் பெரிதும் துன்பத்திற்குள்ளாக்கியது. அவ் வமயம் கோபால கிருஷ்ணகோகலே, புலாபாய் தேசாய், லோகமான்ய பாலகங்காதர திலகர், ஜெயகர், ஜனுப் முகம் மதுஅலி ஜின்னு முதலியவர்களின் நட்பு இவருக்குக் கிடைத்தது. இவர்கள் நட்பே இவருடைய பிற் கால முன்னேற்றத்திற்கு அடிகோலியாக இருந் தது எனலாம்.

அவ்வமயம் மேல் நாட்டிலிருந்து இவண் போந்து சுய ஆட்சி இயக்கத்தை நடத்திவந்த அன்னிபெஸண்டு அம்மையாரைப் பலர் அறிவர். இந்த இயக்கத்தை நம் இந்தியாவில் முதன்முதலில் தொடங்கியவர் அவரேயாவர். நம் இந்திய சமூகத்திற்கும் சமயத்திற்கும் அவர் செய்த தொண்டுகள் பலவாகும். அவ்வரும்பெருந் தொண்டுகளைக் கண்ணுற்றார் நம் தேவியார். அன்னிபெஸண்டிடம் இவருக்கு நன்மதிப்பு உண்டாயிற்று. ஏன்? "அவர் நம் தேசத்தைச் சேர்ந்தவர் அல்லர்; மேல் நாட்டார்; அதிலும் நம் நாட்டை ஆட்சி புரியும் இனத்தைச் சேர்ந்தவர்; நம் போன்ற பெண்மணியார். இத்தகையவர், தம் நாட்டையும் சுற்றத்தினரையும் விட்டு, அந்நிய தேசத்தில் வந்து, இத்தேசத்தின் நலத்தைக் கருதி உழைப்பதென்றால், அவர் பெருந்தகைமையும் இயல்பும் எத்துணை உயர்ந்ததாக இருத்தல் வேண்டும்," எனத் தேவியார் வியப்பிலாழ்ந்தார். ஆதலின், "நாமும் அவருடன் சேர்ந்து தேச சுதந்திரத்தின்பொருட்டுப் பாடுபடுதல், வேண்டும்" என்னும் உறுதி இவருக்கு உண்டாயிற்று. "இந்தியர்கள் அடிமைக் கட்டிலிருந்து விடுபடுதல் வேண்டும். இப்போதே நம் நாடு சுதந்திரத்தைப் பெறல் வேண்டும்," என்னும் ஊன்றிய நோக்கத்துடன் பெரிதும் உழன்றார்.

நம் கவியரசியார் மற்ற நாடுகளைக் கண்டார். இவருக்குச் சில எண்ணங்கள் தோன்றின: "அம்மக்கள் நாளுக்குநாள் கல்வியிலும், அறிவிலும், ஆராய்ச்சியிலும் முன்னேறிக் கொண்டே வருகின்றார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பும் நாகரிகம் இன்னதென அறியாமலிருந்த பல நாடுகள் மேன்மேலும் நாகரிகத்தில் உயர்ந்து

கொண்டே செல்லுகின்றன. அந்நாட்டினர் புதிது புதிதாகப் பல பொருள்களையும் காணுகின்றனர்; அவற்றின்மூலம் கைத்தொழில் முதலியவற்றைப் பெருக்குகின்றனர்; பெரும் பொருள் திரட்டுகின்றனர்; தம் நாட்டுச் செல்வம் நாட்டிலேயே நிலை பெற்றிருக்கப் பாடுபடுகின்றனர்; உடலையும் அறிவையும் உழைப்பின் வாயிலாக உரம் பெறச் செய்கின்றனர்; சிறுசிறு கிராமங்களிலும் கல்வியை நுழைக்கின்றனர்; மனிதர் பொது அறிவையும், அரசியல் அறிவையும் அடைதற்கேற்ற வழிகளைக் கோலுகின்றனர்; இவற்றால், மக்கள் பிறருக்கு அடிமைப்பட்டிருத்தலை அடியோடு தொலைத்துச் சுதந்திர வாழ்வையடைய முயல்கின்றனர். அம் முயற்சி அவர்களுக்கு வெற்றியைத் தருகின்றது. அதனால், அவர்கள் ஊக்கத்தையும் பெற்று மகிழ்கின்றார்கள். அவர்கள் வாழ்க்கை தேவர் வாழ்வெனத் திகழ்கின்றது. இவற்றை மனத்துள் இருத்தி நம் நாட்டினை நோக்குவோமாயின், நம் நாட்டின் நிலை எங்ஙனம் உள்ளது! அந்தோ! மிக்க பரிதாபம்! பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கலையிலும், ஞானத்திலும், அறிவிலும், வீரத்திலும் முன்னணியில் நின்ற நம்மவர் தற்போது எங்ஙனம் வாழ்கின்றனர்! முதலில், கலையறிவைப் பெறுதற்கேற்ற வழிகளைக் கைவிட்டனர்; இதனால், மற்ற நாடுகளில் எழுதப் படிக்கத் தெரியாதவர் எத்தனை பேரோ, அத்தனை பேர்தாம் நம் நாட்டில் எழுதப்படிக்கத் தெரிந்தவராய் இருக்கின்றனர். நூற்றுக்கு நான்கு பேரே எழுதப்படிக்கத் தெரிந்தவர் எனத் தெரிகின்றது. இம்முறையில், நம் நாடு எங்ஙனம் கலைத்தேர்ச்சியைப் பெறும்? எங்ஙனம் தம் முன்னேற்றத்திற்கு வேண்டியவற்றைச்

செய்யும்? எங்ஙனம் சுதந்தர வாழ்வை அடையும்? இவை முயற்கொம்பே! இங்ஙனம் நம் நாட்டினர் யாவற்றிலும் குறைவுபட்டிருப்பதினுற்றான், வளமும் வன்மையும் நிறைந்த நாட்டைத் தாழ் நிலையை அடையுமாறு செய்து, நீங்காத அடிமைகளாய் வாழ்கின்றனர். இவர்கள், 'இங்ஙனம் நம் செல்வத்தையும் இன்பத்தையும் இழந்து அடிமைகளாய் வாழ்கின்றேமே! நம் நாடு முன்னேறுதல் என்று? இதற்குச் செய்யவேண்டுவன யாவை?' எனச் சிறிதேனும் சிந்திக்கின்றார்களா? இவ்வாழ்வே இன்ப வாழ்வென்றன்றே கருதுகின்றார்கள். இதை ஊன்றி உணர்தற்கேற்ற கல்வியும் பொது அறிவும் இவர்களுக்கு இல்லையே! கிராமத்தார் தங்கள் நிலங்களுக்காக முழுநாளும் கஷ்டப்பட்டு உழைப்பினும், அந்நிலங்களில் விளையும் பொருள்கள் தமக்குப் போதியதாக இல்லை! இதற்கேதேனும் வழியைத் தேட முயல்கின்றனரா? கடன்பட்டுக் கடன்பட்டு இறுதியில் தங்கள் பொருள்களை இழந்து, உண்ண உணவும், உடுக்க உடையும் இல்லாமற் போயினும், 'இஃது இயற்கை; இஃது இறைவன் செயல்,' என்றல்லவா கருதுகின்றனர்! 'நமக்குக் கடவுள் கொடுத்த அறிவைக்கொண்டு நாம் முன்னேறவேண்டும்,' என்னும் நினைவேனும் இவர்களுக்குண்டாகின்றதா? சிறிது கல்வி கற்ற கிராமத்தாரோ, நகரத்திலேயே வாழ நினைக்கின்றனர்; கிராமத்திற்குச் செல்லுதல் குறைவு என்றும், தங்கள் சொந்த நிலங்களைப் பண்படுத்தி வாழ்தல் இழிவு என்றும் நினைக்கின்றனர்; தங்கள் நிலங்களைப் படியாத பண்ணைக்காரனிடம் விட்டுவிட்டு ஓர் உத்தியோகத்தில் அமர்கின்றனர்; அதில் கிடைப்பது குறைந்த ஊதியமாயிருப்பினும், தங்கள் மேல

இழந்து ஏங்கி இருக்கின்றனை! இப்போது நீ இழந்த அரசை அடையும் காலம் அருகில் வந்துவிட்டது. ஆதலின், நீ துயிலைவிட்டெழுந்து எல்லா நலங்களும் நிறைந்த உன் அரசை ஏற்று ஆனந்தத்துடன் உன் மக்களைக் காப்பாயாக,'' எனச் சரோஜினி தேவியார் பாரத தேவியை ஊக்குவதைக் காண்க.

இவ்வாறு அரசியாருடைய கவியும் சொல்லும் பலரையும் ஊக்கிவிட்டன. பெரும்பாலோர் சுதந்திர விடாயைத் தீர்த்துக்கொள்ள வழி தேடவேண்டுமெனக் கிளம்பினர்; சுதந்திரப் பாதையில் சுறுசுறுப்புடன் சென்றனர். எங்கும் தேவியாரின் கொள்கைகளும் எண்ணங்களும் பரவலாயின. இவருக்கு எங்கும் வரவேற்பு - எங்கும் புகழ் - எங்கும் கூட்டுறவு - எங்கும் அறிஞர் நட்பு - எங்கும் வாழ்த்து. நம் தேவியார் தன்னலம் பாராத் தொண்டு பலரையும் விழிப்பிற்குக் கொணர்ந்து விட்டது. இன்று நம் நாடு சுதந்திரமடைந்திருக்கிறது எனில், இதற்கு அடிகோலிய பெண்மணிகளுள் நம் தேவியாரே முதன்மையானவர் என்பதை நம்மனோர் மறந்துவிடுதல் கூடாது. பின்பு இவரால் சில மங்கையர் நாட்டிற்காக உழைக்க முன் வந்தனர். நம் அன்னையாரின் ஆண்மைப் பேச்சும், அமுதப் பாக்களும் உலகத்தையே ஊக்கிச் சுதந்திர ஆர்வத்தில் மூழ்த்திவிட்டது என்பது மிகையாகாது. திலகர் முதலிய மேதாவிகளால் பண்படுத்தப்பட்ட நிலத்தில் சுதந்திரம் என்னும் விதை விதைத்தவர் நம் தேவியாரேயாவர்.

ஏறக்குறைய நாற்பது ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் நம் நாடு என்ன நிலையில் இருந்ததென்பதை ஊன்றி நோக்குவார்க்கே, நம் சரோஜினி

தேவியாரின் அருமைபெருமைகள் தெரியும். ஆண்களுள் பலருக்கும் சுதந்திர விடாய் பிறவாத காலம்—பெண்களுள் பலர் திரைச் சீலைக்குள்ளும் முகமூடியுள்ளும் மறைந்திருந்த காலம்—தலையைச் சிறிது வெளிக்காட்டினும் பெரிய தவருக நினைத்த காலம்—கன்னியரைக் கல்வியில் நுழைய விடாத காலம்—அவர்களை அடிமை வாழ்க்கையில் அழுத்தி வைத்த காலம்—அவர்கள் சுதந்திரம் முழுவதையும் கவர்ந்துகொண்ட காலம்-'இவ்வனிதையர்கள் கல்வியறிவு ஆராய்ச்சிகளில் துறைபோய பண்டைய மகளிரின் வழித்தோன்றல்கள்,' என்பதைச் சிறிதும் எண்ணுத காலம்! அத்தகைய காலத்தில் நம் தேவியார் இத்துணை வீர தீரத்துடன் வெளிவந்து நாட்டிற்குப் பல நன்மைகளையும் புரிந்தனர் என்னில், இதனினும் சீர்மையுடையது வேறென்றுண்டோ? இவருடைய மன உறுதியையும், பண்பாடுகளையும் எத்தகைய நிலையில் வைத்துப் புகழ வேண்டும்! இவரைத் தக்கவாறு புகழ்தற்கும் போற்றுதற்கும், ஏற்ற சொற்களும், கருத்துக்களும் நம்பால் இல்லையெனவே கூறல் வேண்டும்! ஆதலின், நாம் இவருக்கு நம் நன்றியறிதலைச் செலுத்தி நிற்க வேண்டியவர்களேயாவோம்!

முன்னர் குறிப்பித்தவாறு சரோஜினி தேவியார் விதைத்த சுதந்திர விதை ஓரிரண்டு இடங்களில் அல்ல, பல இடங்களிலும் முளைக்கத் தொடங்கிற்று. இவர் விதைத்த இடம் ஒன்ருனல் அது பரவிய இடங்கள் பலவாகும். இம்முறையில், நாளுக்கு நாள் மக்களிடையே இச்சுதந்திர நினைவு பெருகிக் கொண்டே வந்தது. நம்மனோர் இதைக் கண்டு ஆனந்தத்தையும் ஊக்கத்தையும் பெற்றனர். ஆனல், எதிரிகளோ, 'இஃது என்னய் முடியுமோ!'

என அச்சத்தையும் நடுக்கத்தையும் கொண்டார்கள். அவர்கள் நெஞ்சில் சில எண்ணங்கள் உருக்கொண்டெழுந்தன : "இம்மங்கையினுடைய வீரப் போக்கைச் சிறிது தடைப்படுத்தினாலன்றி, நமக்கு நன்மை ஏற்படாது. இஃது உலகத்தையே சுதந்திர வழியில் ஊக்கிப் பெருங் குழப்பத்தை உண்டாக்கும்,'' என அவர்கள் நினைத்தார்கள்.

ஆதலின், அவர்கள், "சரோஜினி தேவியார் ஒரு சிறந்த கவிஞர்! இவர் கவிகள், கற்றவர் கல்லாதவர் ஆகிய இருபாலாருக்கும் இன்ப மூட்டுகின்றன! கவிஞர் உள்ளம் தனிப்பட்டதாகும். அவர்கள் இயற்கை அழகில் ஈடுபட்டிருப்பார்கள்; கற்பனை உலகில் களித்திருப்பார்கள். இயற்கை இன்னலங்கள் பல வடிவங்களுடன் அவர்களுக்குக் காட்சி அளித்துக் கொண்டிருக்கும். அவற்றைத் தம் கவி உள்ளத்தில் இருத்தி இருத்தித் தம் கவி வன்மையினால், அவற்றிற்கு ஆடை அணிகளை அணிவித்து உலகிற்கு வழங்குவார்கள்; இங்ஙனம் தம் கவி உள்ளத்திலிருந்து வெளிக்கிளம்பிய கவிகளைக் கண்டுகண்டு தாம் மகிழ்வதுமட்டுமே அல்லாமல், பிறரையும் மகிழுமாறு செய்வார்கள். இதுவே உண்மைக் கவிஞரின் பொழுது போக்கும் இலக்கணமுமாகும். இத்தொகுதியினருள் சேர்ந்த சரோஜினி தேவியாரோ, இந்நிலையிலிருந்து விலகி வேறு வழியில் செல்லுகிறார். இவர் செல்லும் பாதை இவர் கவி உள்ளத்திற்குச் சிறிதும் பொருத்தமானதன்று. இவர் உலகத்திற்குப் பொதுவானவராய் இருத்தல் வேண்டுமே அல்லாமல், இவர் அரசாங்கத்தை எதிர்த்து நிற்கும் கட்சியுடன் சேர்ந்துகொண்டு தொழில் புரிதலும், மக்களுக்குத் தம் கவிகளாலும், பேச்சினாலும் சுதந்திர

கிளர்ச்சியை உண்டாக்குதலும் எல்வகையானும் தக்கதல்ல. இனியேனும் இவர் இப்போக்கி லிருந்து விலகிக்கொள்வாராக,'' என அறிவித் தார்கள்.

ஆயினும், நம் சரோஜினி தேவியாரின் வீர உள்ளம் இப்பேச்சுகளுக்கு அஞ்சி அகன்றிலது. எரியும் நெருப்பில் நெய் விடில் பின்னும் சுடர்விட் டெரிதல்போன்று, அவர்கள் சொற்களும், அடக்கு முறையும் இவரை முன்னையினும் அதிகமாக ஊக்கி விட்டன. ஆண்மையுடன் வீறிட்டெழுந்த சிங்கம் யானைக்கு அஞ்சுமா? பகையைத் தொலைக்க மனத் திட்பத்துடன் கிளர்ந்தெழுந்த போர்வீரன், பகை வர் படைக்கேனும், அவர்தம் ஆயுதங்களுக் கேனும் அஞ்சி பின்வாங்குவனோ? நெஞ்சுரம் வாய்ந்தவர் மேற்கொண்ட காரியத்தை நழுவவிடு வரோ? இத்தொகுதியினருள் சேர்ந்த நம் தேவி யார் மட்டும் தாம் கொண்ட செயலை எங்ஙனம் விடுவார்! தேசத்தின் பல பிரிவுகளுக்கும் செல்லத் தொடங்கினர். எங்கும் இவர் வீரப்பேச்சு முழங் கிற்று. ''இவர் சொற்களைச் செவியேற்காதவரும் பின்பற்றாதவரும் ஒருவருமிரார்,'' என்னும் நிலை யில் இவருடைய சொற்பொழிவு பயன் அளித்தது. முதன்மையில், ஒரு பெண்மணியார் இத்துணை வீரத்துடனும், தெளிவாகவும் கோவைப்படுத்தி யும் பேசுதல் கற்றவர் கல்லாதவர் ஆகிய இரு திறத்தினருக்கும் வியப்பை ஈந்தது. அதினும், இவருடைய சொற்கள் தங்களை அடிமைத் தன்மையி லிருந்து மீட்பதற்கு வழிகாட்டியாயிருந்தமையின், அவற்றை யாவரும் விரும்பி ஏற்றுக்கொண்டனர்; இவரிடமும் அன்பும் மதிப்பும் காட்டினர். ஆண் மக்களைக்காட்டிலும், பெண் மக்களையும் இளைஞரை

யுமே பெரிதும் ஊக்கவேண்டுமென்பது இவர் கருத்து. ஆதலின், இவர் சென்ற இடங்களிலெல்லாம், பெரும்பான்மையும் மாணவர் கூட்டத்திலும், பெண்கள் கூட்டத்திலும் பல சொற்பொழிவுகளாற்றினர். இவருடைய கனிவும் இனிமையும் கலந்த வீரப்பேச்சு, மாணவரைமட்டுமேயன்றி மங்கையரையும் ஊக்கிவிட்டது. அவர்கள் மனக்கிளர்ச்சி பெற்றூர்கள். அவர்களுள் சிலர், "எங்களால் நாட்டிற்கு நலம்புரியச் சிறிதும் முடியாது. உயரிய பொருள்களை அறிந்துகொள்வதற்கும் போதிய ஞானம் எங்களுக்கில்லை. நாங்கள் கிணற்றுத் தவளைகளைப் போன்று ஒரு சிறிய வீட்டில் உள்ளடங்கிக் கிடக்க வேண்டியவர்களே,' என எண்ணியிருந்த குறுகிய எண்ணங்கள் அவர்களிடமிருந்து அறவே ஒழிந்தன. ஆதலின், தேச முன்னேற்றத்திற்கும், அடிமை நிலையிலிருந்து நீங்குதற்கும், சுதந்திரம் பெறுதற்கும் அவர்கள் பெரிதும் முயன்றூர்கள். மாணவர்களோ, தம் நாட்டிற்குச் செய்ய வேண்டிய தொண்டுகளையும், மக்களை முன்னேற்றும் வழியையும் அறிந்தார்கள்; அன்றியும், அக்கருத்துகளை எங்கும் பறையறைந்தும் நின்றூர்கள்.

சரோஜினி தேவியார் இங்ஙனம் நாட்டை ஊக்கிக்கொண்டும், அவர்களுக்கு நலங்களைத் தேடிக்கொண்டுமிருக்குங்கால், இவருக்கு, தம் கருத்துகளையும், நாட்டு முன்னேற்றத்திற்குத் தக்க வழிகளையு மெடுத்தியம்புதற்குத் தக்க சமயம் வாய்த்தது. 1918-ஆம் ஆண்டு, கச்சியில் தமிழ் மாகாண அரசியல் மகாநாடு நடைபெற இருந்தது. "தலைமை வகித்து இம்மாநாட்டை நடத்துதற்குப் பொருத்தமானவர் யார்?" எனச் சிலர் சேர்ந்து

யோசித்தனர். அவருள் பலர் நம் சரோஜினி தேவியாரையே குறிப்பித்தனர்; மற்றவரும் அக் கருத்தையே ஆமோதித்தனர். ஆதலின், அப் பொறுப்பு நம் அம்மையார் மீது இறங்கிற்று. இவர் பன்னாட்களாக எதிர்ப்பார்த்திருந்த இத் தொண்டு இவருக்குக் கிடைத்ததும், இவர் மனம் மகிழ்வால் நிரம்பியது. ஆதலின் இவர், அவர்கள் கருத்திற்கு மறுப்புக் கூறிலர். தம் கருத்துகளை வெளிப்படுத்தற்கு இதுவே தக்க சமயம் என்பது இவர் எண்ணம். இதை நழுவவிடின் இனி இத் தகைய காலம் கிடைப்பது அருமை என்பது இவ ருக்குத் தெரியும். இவர் அப்பொறுப்பை அன்பு டன் ஏற்றுக்கொண்டது பலருக்கும் மகிழ்வை ஈந்தது. இவரைப் புகழ்ந்தனர். இது நிற்க.

இவர் இங்ஙனம் நாட்டின் நலத்திற்காக உழைத்துக்கொண் டிருக்குங்கால், இவருடைய மனக்கிளர்ச்சியினாலும் பேராற்றலினாலும் பலர் ஈர்க்கப்பட்டு, இவர் வழிச் செல்வதைக் கண்ட பகைவருக்கு அழுக்காறு மிக்கெழுந்தது. இவரை எங்ஙனமேனும் இவ்வழியிலிருந்து விலக்க வேண்டு மெனக் கருதிய அவர்கள், இவரைக் கண்டித்தற் கஞ்சி நயமாக சில உரைகளைப் பகரத் தொடங்கி னார்களாம். அவற்றை நம் தேவியாரே வெளியிடு கின்றார்: "என்னிடம் சிலர் சில கேள்விகளைக் கேட்கின்றனர்; சிலர் எனக்கு நலம் புரிபவர் போன்றும் சில அறிவுரைகளைக் கூறுபவர் போன் றும் பலவற்றை எடுத்தியம்புகின்றனர். அவை: உயர் குடியில் தோன்றி உயர் நிலைக் கல்வியைக் கற்ற நீங்கள், இங்ஙனம் பொதுக் காரியங்களில் தலையிட்டு ஊரூராய்த் திரிந்து அலைதல் தகுதியுடைய

தன்று. நீங்கள் பெண்பாலராதலால், மங்கையர் முன்னேற்றத்திற்காகிய சில காரியங்களைச் செய்து திருப்தியடையலாம்; உமது சொந்த நாட்டிற்கு வேண்டுவனவற்றைச் செய்து அதனைச் சீர்திருத்தலாம்; உங்கள் உயரிய கருத்துகளைப் பத்திரிகைகளுக்கு எழுதிப் பலரும் அறியச் செய்யலாம். நீர் கவிஞர் அல்லரோ? உங்கள் வேலை எதுவாக இருத்தல் வேண்டும்! இசைக் கருவிகளை வைத்துக் கொண்டு இனிமையாகப் பாடி யாவரையும் மகிழ்வித்து அந்நிலையில் நீங்களும் இன்புறுதலேயாகும். இத்தகைய உங்களுக்கு, யாவரையும் சுதந்திரப் போக்கில் ஊக்கி, எங்கும் கிளர்ச்சியை உண்டாக்குவது என்ன காரியம்?'' என்பனவாகும். "ஆனல், யான் அவர்களுக்குத் தக்க விடைகளைத் தரப் பின் வாங்குவதில்லை. சிலர் அவைகட்கு மாறுகூற முடியாமல் தயங்குவர்; சிலர் 'எங்ஙனமேனும் பொதுக் காரியங்களை மேற்கொள்வது உங்கள் நிலைக்குப் பொருத்தமானதன்று' எனச் சொல்லிக் கொண்டே மெல்லெனச் சென்றுவிடுவர்.''

"நான் அரசாங்கத்தின் குற்றங் குறைகளை மக்களுக்கு வெளிப்படுத்தி, அவர்கள் கண்களைத் திறந்து பார்க்குமாறு செய்வது, இவர்களுக்குப் பொறுமை போலும்! இதை வெளிப்படையாகச் சொல்வதற்கென்ன? இதை மறைத்துப் பெண்களிடம் அடக்குமுறையைக் கையாளுவது எதன் பொருட்டு? ஆடவர்மட்டும் எல்லாவற்றிலும் பங்கெடுத்துக் கொள்ளலாம்! அறிவுகலைகளில் புரண்டு புரண்டு எழலாம்! சமூகத் தொண்டையும், அரசியல் செயல்களையும் மேற்கொள்ளலாம்! பல பேருடன் பழகிப்பழகிப் பண்படலாம்! எங்கும் சுற்றிச் சுற்றி நாட்டிற்கு நன்மை தேடலாம்! ஆனல், அவர்

களுக்குத் துணைவராய், அவர் பொறுப்பில் ஒரு பங்கை ஏற்றுக்கொள்ள வேண்டியவராய், இன்ப துன்பத்தில் பங்குடையவராய், சமயம் நேர்ந்துழி யோசனை சொல்பவராய் அமையும் பெண்டிர், அறிவியற்றுறைகளில் செல்லுதல், உலகப்போக்கு களைத் தெரிந்துகொள்ளுதல், பொதுத் தொண்டில் நுழைதல், கல்வி கற்றல், நாட்டை முன்னேற்றுதற் கேற்றவழியைத் தேடல் முதலியவற்றை மேற் கொள்ளுதல் கூடாது என்பதுதானே இவர்கள் கருத்து! ஈதென்ன அறியாமை! ஈதென்ன கொடுமை! இன்னும் எத்தனை நாட்களுக்கு இவர்க ளால் பெண்களை இங்ஙனம் அடக்கி ஆளமுடியும்! பறவையின் பார்ப்புத் தனக்கு இறகுகள் முளைக்கு மட்டும் கூட்டில் அடங்கிக்கிடக்கும். பின்னர் தனக் குப் பிரியமான இடத்திற்குப் பறந்து செல்லாதோ! அதைக் கூட்டிலேயே அடங்கி இருக்குமாறு செய்ய யாரால் முடியும்! நன்ருகத் தவழக் கற்ற குழந்தை தாயார் படுக்கவைத்த இடத்திலேயே படுத்துக்கிடக் குமா? அது பல இடத்திற்கும் சென்று பொருள்களை இழுத்தலும் கவிழ்க்கவுந்தானே செய்யும்! இஃது இயற்கை. அதுபோன்று, உலகத்தின் தாழ்நிலையை யும், மக்களின் துன்பத்தையும், அரசாங்கப் போக் கையும் அறிந்த யார்தாம் வாளா இருக்கமுடியும்! இதற்கு ஆடவர் என்றும் பெண்டிர் என்றும் வேறு பாடுண்டா? உணர்ச்சி இருபாலாருக்கும் ஒத்தது தானே? சில காரியங்களைச் செய்தற்கு வன்மை வாய்ந்த மகளிர், ஆண்மக்களுடன் ஒத்துழைத்து ஆவன செய்யவில்லையேல், நம் நாடு முன்னேறு வதுதான் யாங்ஙனம்? மற்ற நாட்டாரைப்போன்று நம்மனோர் உயர்வடைதல்தான் எப்போது? இங்ஙனம் இரு சாராரும் ஒத்துழையாமையினு

லல்லவா, ஒரு காலத்தில் அறிவிலும், ஆண்மையிலும், நாகரிகத்திலும் சிறந்திருந்த நம் நாடு இவ்வமயம் தாழ் நிலையை அடைந்துள்ளது! நம் தேயத்தை உயர் நிலையில் கொணர—அறிவுக்களஞ்சிய மாக்க—சுதந்திரத்தினல் துலங்கச்செய்ய—விரும்புவரேல், மங்கையர் கல்வி, அறிவு, ஆராய்ச்சி முதலியவற்றில் முன்னேறவேண்டும்! அந்நாளே நாடு ஒளி பெற்று ஒளிரும் நாள்—அறிவு மணங்கமழும் நாள்—வறுமை நீங்கும் நாள்—குதூகலத்தில் ஆழ்ந்திருக்கும் நாளுமாகும். ஆதலின், வீணர்கள் வார்த்தைகளுக்கு யான் செவி சாய்க்கப் போவதில்லை. தன்னலக்காரர் பேச்சும் ஒரு பேச்சாமா? அவர்களுடைய நினைப்பு அவர்களளவிலேயே நிற்கட்டும். யான் இவர்களுக்கு அஞ்சுபவள் அல்லள்,'' எனத் தம்முள் உறுதிகொண்டு காஞ்சீபுரத்தில் நடைபெறவிருந்த அரசியல் மகாநாட்டிற்குத் தலைமை வகிக்க ஒப்புக்கொண்டார்.

முன் குறிப்பித்தபடியே சரோஜினி தேவியார் பல அறிஞரின் விருப்பத்தின்படி காஞ்சீபுரத்தில் நடைபெற்ற அரசியல் மகாநாட்டிற்குத் தலைமை வகித்தார்; அவ்வமயம் பலவகையில் மக்களுக்கு ஊக்கத்தை ஊட்டினர். "சகோதர சகோதரிகளே, இப்போதிருக்கும் நாட்டின் நிலை உங்களுக்குப் பெரிதும் கலக்கத்தை உண்டாக்கியிருக்கலாம். இதைக் கண்டு அஞ்சாதீர்கள்! இடுக்கண் வருங்கால், மன உறுதியையுடையவர் கலங்கார்; இடுக்கணிற்கு இடுக்கண் விளைவிக்கவே முயல்வர். இவை மக்களை மயக்க எழுந்த போலிச் செயல்கள்; இவை பன்னாட்கள் நிலை பெற்று நம்மை வருத்தா; இவைகள் விழுந்துபடும் காலம் விரைவில் வரும். நாமும் நம் நாடும் நலம் பெறுதற்கு இன்னும்

பல்லாண்டுகள் பொறுக்க வேண்டுவதில்லை. நமக்கு வெற்றி அணித்தாயுள்ளது. ஆயினும், நம் நாட்டின் தற்போதைய நிலை என்னைப் பெரிதும் வருத்து கின்றது. நம்மனோர் தாழ்நிலையை நினைக்க நினைக்க என் மனம் துன்புறுகின்றது. இத்துன்பம், 'நம் இல்லம் உண்டு—நம் மக்கள் உண்டு—நம் கணவர் உண்டு' என அவற்றையே நோக்கிப் போக எனக்கு இடந் தந்திலது. தன்னலச் செயலில் என்னைத் தங்கவிடவில்லை. என்னைப்பற்றிப் பலரும் பலவாறு கூறலாம். 'வீட்டிலிருந்து தன் மக்களையும் இல்லறத்தையும் சீர்மையுடன் நடத்தாதவள், உலகத்தைத் திருத்த வந்துவிட்டாளாம்! கணவ னுடனிருந்து கண்ணியமாக வாழ்க்கை புரிய முடியாதவள், கவிபாடி யாவர் மனத்தையும் கவரு கின்ருளாம்! வீட்டுக் காரியங்களைப் பார்த்துக் கொண்டு ஓரிடத்தில் இருந்து மரியாதையாக வாழத் தெரியாதவள் சொற்பொழிவாற்றி உலகத்தையே உய்விக்கப் போகின்ருளாம்!' என்பன சொல்லி என்னைப் பழிக்கலாம். இதைக் குறித்து யான் கவலையுறேன். உலகம் யாரிடத்திலும் எக்காரியத் திலும் திருப்தியடைதலே இல்லை. எத்தகைய தூய காரியத்திற்கும் ஒரு குறையைச் சொல்லவே காண்கின்ருேம். உலகம் ஒருவித மனப்பான் மையை உடையவரைமட்டும் கொண்டதன்றே! பல திறத்தினர் வதியும் உலகில் செயல்களும் அபிப் பிராயங்களும் பலதிறப்பட்டனவாகவே இருக்கும். ஒருவர் மனம் விழைவதை இன்னெருவர் மனம் விழைதல் இல்லை. ஒருவருக்கு நன்மையாகத் தோன்றுவது இன்னெருவருக்குத் தீமையாகத் தோன்றலாம். இஃது உலக வழக்கு. இதன் பொருட்டு நாம் கவலை கொள்வதிலோ, சோர்

வடைவதிலோ பயனில்லை. அங்ஙனமாயின், எவராலும் எக்காரியமும் செய்வதற்கியலாது. ஆதலின், 'நாம் செய்வது தகுதியுடையதா? தற்காலத்திற்கு இன்றியமையாததா? ஒருவருக்கும் தீமை விளைவியாததா? பிறருக்கு நலமளிக்கக் கூடியதா! அறிஞர் ஏற்கத் தகுந்ததா?' என நம்மை நாமே வினவிக்கொண்டு மனசாட்சிக்கு விரோதமில்லாமல் செய்வதுதான் நம் கடமையாகும். இன்றேல், உலகில் ஒரு மனிதனும் ஒரு நற்காரியத்தையும் செய்தற்காகாதென்பது திண்ணம்.

"ஒரு மங்கையின் மனம் உலகிற்கு நம்மாலாகிய உதவியைச் செய்யவேண்டும், என விரைந்து நிற்கின்றது. அம்மனத்தைக் கட்டுப்படுத்த யாரால் முடியும்! அவ்வெண்ணத்தில் ஊன்றி நின்று செயலாற்றக் கூடவா அவளுக்கு உரிமை இல்லை. இத்தகைய பரந்த உள்ளம் உடையவளை வீட்டிலேயே இருந்து வீட்டுக் காரியத்திலேயே அமிழ்ந்துவிடு என்னில் முடியுமா? சிலர் கூறும் வண்ணம், குழந்தைகளையும், கணவனையும் கவனிக்க வேண்டுவது அவள் கடமையே. ஆயினும், அக்கடமையையும் தக்கபடி செய்து, ஒழிந்த நேரத்தில் உலகிற்குச் செய்யவேண்டிய சில காரியங்களையும் மேற்கொள்வதில் குற்றம் யாது? இங்ஙனம் செய்தல் தவறு என எச்சாத்திரம் இயம்புகின்றதோ அறியேன்! தன் குடும்பம் ஒன்றையே நோக்கிக்கொண்டிருக்கும் குறுகிய நோக்கத்தை விட்டு உலகக் குடும்பங்கள் பலவற்றையும் நோக்கும் உயரிய எண்ணம் ஒருவருக்குப் பிறத்தலே இறைவன் அருளாகும்! இறைவன் பேரருளால் உண்டாகும் இதை மற்றவர் தடுப்பது எத்துணைக் கொடுமையுடையதாகும்! எல்லாரும் தன்வீடு-தன்வாசல்-தன்

மக்கள்-தன் குடும்பம் என்றே நோக்கிக் கொண்டிருந்தால், யார்தான் பொதுமக்களுக்காகத் தொழில்புரிவது! எப்போதுதான் மற்ற நாடுகளைப் போன்று நம் நாடும் முன்னேற்றமடைவது! ஆதலின், சிலரேனும் வெளிப்போந்து இக்காரியத்தைச் செய்தல் இன்றியமையாததாகும். ஆதலின், சகோதரிகளே, உங்கள் சொந்த கடமைகளுக்குக் குறைவு உண்டாகாதவகையில், பொதுத்தொண்டுகள் சிலவற்றையும் மேற்கொள்வது உங்கள் கடமையாகும்! அப்போதே நீங்களும் உங்கள் நாடும் மேன்மையுற முடியும்! இதைப்பற்றி ஏற்படும் பிறர் வசையையேனும் இசையையேனும் நீங்கள் மனங்கொள்ளாதீர்கள்! 'நன்றே செய்க அன்றே செய்க' என்பதை மறக்க வேண்டாம்,'' எனப் பல அறிவுரைகளை இயம்பி மக்களை ஊக்குவித்தனர்.

கவியரசியார் இங்ஙனம் நாட்டுப்பற்றிலும், பொதுத்தொண்டிலும், மக்களை ஊக்குவதிலும் இனிய கவிகள் பாடுதலிலுமே தம் காலத்தைக் கழிக்கிறார் எனச் சிலர் நினைப்பர். அது தவறு. எவ்வெப்போது காலம் வாய்க்கிறதோ, அவ்வப்போதெல்லாம் கடவுளின் இயல்பு, அன்பு, அருள் முதலியவற்றைப் போற்றி, அவனுக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பையும், பத்தர்களின் நிலையையும் தம் கவிகளில் நன்கு விளக்குகிறார்:

''கண்ணனிடம் அளவு கடந்த காதல் கொண்ட இராதை அவள் குலவழக்கத்தின்படி, வீதிகளில் 'தயிரோ தயிர்' எனக் கூவி விற்கின்றாள். அவ்வாறு விற்கின்ற அவளுக்கு இமைக்கு இமை கண்ணன் நினைவு வந்து விடுகின்றது. அவ்வமயம் தான் விற்கும் பொருள் இன்னதென்பதை முற்

றும் மறக்கின்ருள். ஆயினும், ஒன்றைச் சொல்லிக் கொண்டிருந்த அவள் நா அச்சொல்லுந் தொழிலை விட்டிலது. அப்போது தன்னை மறந்தவளாய், 'கோவிந்தா கோவிந்தா' எனக் கூவிக் கொண்டே செல்கின்ருள். இளவேனிற் காலத்தின் அழகிய தோற்றங்கள் மற்ற இடைப்பெண்களின் மனத்தைக் கவருகின்றன. அவர்கள் தங்களுக் குண்டான மகிழ்வு உள்ளடங்காது வெளிப்பட, அதற்குப் போக்குவீடாகச் சில பாக்களைப் பாடிக் கும்மி கொட்டுகிருர்கள். அவர்களோடு கலந்து காரியஞ் செய்யும் இராதை 'கோவிந்தா கோவிந்தா' எனச் செப்பிக் கை கொட்டுகிருள். இவளுடைய இச்செயல்கள் யாவருக்கும் நகைப்பை உண்டாக்குகின்றன. அவர்கள் இவளை ஏளனஞ் செய்கின்ருர்கள்.

"வட மதுரைக் கோவிலில் பலர் ஒருங்கு சேர்ந்து இறைவனை மனத்தினுல் தியானித்துக் கொண்டிருக்கின்றனர். சிறு ஓசையும் அவண் இல்லை. ஆனுல், அப்போதைக்கப்போது சங்கொலி மட்டும் எழுகின்றது; தியானத்தில் இருக்கும் மக்களுக்கு ஒருவித ஊக்கத்தை உண்டாக்கவே அச்சங்கொலி ஒலிக்கப்படுகின்றது. அவ்வமயத்தில், கண்ணனை ஊன்றிய நெஞ்சுடன் தியானித்துக் கொண்டிருக்கும் இராதைக்கு அவன் மாட்டு எழூம் அன்பு உள்ளடங்காமையின், அடிக்கடி 'கோவிந்தா கோவிந்தா' எனப் பேரிரைச்சலுடன் அரற்றுகின்ருள். அதன் பொருட்டு மற்றவர் இவளிடம் கோபங் கொள்ளுகின்றனர். ஆனுல், மற்றவர் ஏளனமோ, கோபமோ இவளை அலக்கழித்ததா? அன்றி, இவளுக்கு இன்பத்தையேனும் துன்பத்தையேனும் விளைவித்ததா? இரண்டுமில்லை. ஏன்? இவள் மனம்

முற்றும் கண்ணனிடத்திலேயே அழுந்தி இருக்கின்றது! ஐம்புலன்களும் அம் மனத்தினிடமே ஒடுங்கிக் கிடக்கின்றன. இந்நிலையில் மற்றவர் என்ன செய்கின்றனர்? என்ன சொல்லுகின்றனர்? என்பதை இவள் அறிதல் யாங்ஙனம்? பத்தர் நிலை இங்ஙனம்தான் இருக்கும். இப் பத்தியே மக்களுக்கு உய்யும் வழியைக் காட்டும் விளக்கொளி. இதையே யாவரும் பற்றுதல் வேண்டும்" என்கின்றனர்.

இங்ஙனம் இறையன்பின் நலத்தையும் உணர்ந்த தேவியார், தம் குடும்பத்திற்காகிய சில வசதிகளைச் செய்துவிட்டு, உலக நலன்பொருட்டு உழைத்தலையே பெருந் தொண்டாகக் கொண்டார்; மக்களைப் பலவகையினும் உற்சாகப்படுத்தினர்; அவர்கள் நிலைகளை அவர்களுக்கு விளக்கிக் கூறினர்; இதன்பொருட்டு இவர் பல நாடுகளுக்குச் சென்று, அறிஞர் பலரிடமும் நாட்டுக் குறைகளை எடுத்துக்காட்டினர். இவருடைய பொருள் நிரம்பிய சொற்கள் பலரையும் தேசத்தொண்டில் பங்கெடுத்துக்கொள்ளுமாறு செய்தன. "நம் தேசத்தின் பிற்போக்கிற்குக் காரணம் கல்விக் குறைவே யாகும்! அதினும் பெண்களிடம் கல்வி பரவாமலிருத்தல் பெரிதும் வருந்தத்தக்கதே! மகளிர் கல்வி கற்று அறிவு பெறுவதற்கேற்ற வழிகளை மேற்கொள்ள வேண்டும்! அவர்கள் பொதுத் தொண்டில் நுழைந்து, உலக முன்னேற்றத்திற்காக ஆண்களுடன் ஒத்துழைத்தல் வேண்டும்!" என்பன இவர் ஊன்றிய எண்ணங்கள். இவற்றை அடிக்கடிப் பலரறியவும் எடுத்தியம்புவார்.

இங்ஙனம் கவியரசியார் தேச முன்னேற்றத்தின் பொருட்டு மேற்கொண்ட தொண்டுகள்

பலப்பல. இவற்றிலேயே தம் பொழுதைக் கழித்து வந்தார். இதனுல், இவர்தம் குடும்ப நலத்தையும், தம் உடல் நலத்தையும் நோக்காது விட்டது பேரதிசயமன்று! தமக்கு இளமையிலேயே இயற்கையாக அமைந்த கவி நலனையும் விட்டது தான் வியப்பாகும்! இவர் எப்போது அரசியலில் மனம் செலுத்தினரோ, அப்போதே இவர் கவி இயற்றுஞ் செயலைச் சிறிது சிறிதாகக் கைவிட்டனர். இவருக்கு இதற்குப் போதிய காலம் ஏது? எப்போதும் தேசத்தின் விடுதலையைப் பற்றியும், மக்களின் சுதந்திர நிலையைக் குறித்துமே இவர் நெஞ்சம் சிந்தித்துக் கொண்டிருக்கும்; அதற்கேற்ற காரியங்களைச் செய்வதற்கே இவர் மனம் விரைந்து நிற்கும். இந்நிலையில் இவர் நெஞ்சம் கவிதையில் செல்லல் யாங்ஙனம்? ஆதலின், இவர் அரசியலில் நுழைந்த பின்பு இவருடைய அழகிய பாக்களைப் பெறும் பாக்கியத்தை நம் நாடு இழந்தது.

இங்ஙனம் தேவியார் நாட்டுத் தொண்டிலேயே நாள் கழித்துவந்தார். இவர் உழைப்பு இவருடைய உடல் வன்மையினும் விஞ்சி நின்றது. ஆதலின், இவருக்கு இருதய நோய் உண்டாயிற்று. சிற்சில சிகிச்சைகள் செய்யப்பட்டன. ஆனுல், அவற்றுள் ஒன்றும் இவருக்கு நன்மை அளித்திலது. இவர், "சில மாதங்களுக்கேனும் வெளிநாடு சென்று இளைப்பாறி இருத்தல் நலம்" எனச் சிலர் கருதினர். அறிஞர் பலர், இவரை இலண்டனுக்குச் சென்று அவண் சில நாட்கள் தங்கியிருத்தல் நலமென வற்புறுத்தினர். அங்ஙனம் செய்தற்கு இசைந்த அன்னையார் 1920-ஆம் ஆண்டு இலண்டனுக்குச் சென்ருர்.

அவ்வமயம் இந்திய கிலாபத் கமிட்டியார், இலண்டன் கிங்ஸ்லி ஹாலில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டினர். 'இக்கூட்டத்தில் இந்தியப் பெண்மணியாகிய கவியரசியார் ஒரு சொற்பொழிவாற்றல் இன்றியமையாதது,' என்பது அக்கூட்டத்தினர் அவா. அம்மையாரும் அதற்கு உடன்பட்டார். கிலாபத் இயக்கத்தின் கோட்பாடுகளும் செயல்களும் இவருக்குப் பிடித்திருந்தன. அவ்வியக்கத்தைப் பாராட்டியும் தாங்கியும் இவர் ஓர் அரிய சொற்பொழிவாற்றினர். அவ்வவையில், பன்னாட்களாகத் தம் நெஞ்சைப் புண்படுத்திக் கொண்டிருந்த பாஞ்சாலப் படுகொலையைப் பற்றிச் சொல்லாமலிருக்க இவருக்கு முடியவில்லை. ஆதலின் இவர், "பாஞ்சாலத்தில் ஆண்களைத் துன்பப்படுத்தியது மட்டுமேயன்றி, பெண்களையும் மிகக் கொடுமையாய் நடத்தினர். அது வாய்விட்டுச் சொல்லுதற்கும் ஏற்றனவல்ல. அம்மகளிரை எந்தெந்த வகையில் அலக்கழிக்கவேண்டுமோ அத்தனையும் செய்தனர். வாளெடுத்து அவர்களை ஒரே வீச்சில் வீசி இருந்தால் யான் சிறிதும் வருந்தேன்! அக்கொடியர் பெண்களை நிருவாணமாக நிறுத்துதல், கசையடி அடித்தல், கற்பழித்தல் முதலியவற்றைச் செய்தனரே! இவைகள் எத்துணைக் கொடுமை வாய்ந்தன! மனித இயல்புடையவர் புரியுஞ் செயல்களா இவைகள்! 'பெண்ணென்றால் பேயும் இரங்கும்' என்பார்களே! அந்த இரக்கமும் பகுத்தறிவு பெற்ற மக்களிடம் இல்லாமற் போயிற்றே! மானமே உயிரெனக் கருதிய இந்திய நாட்டில் பிறந்த என் அருமைச் சகோதரிகளுக்கா இம்மானக்கேடு உண்டாதல்! அந்தோ! அவ்வமயம் என் சகோதரிகளது மனநிலை எவ்வாறிருந்ததோ! அதை

எடுத்தியம்ப யாரால் இயையும்! அதை நினைக்கும் போதெல்லாம் எங்கள் மனம் துடிக்கின்றதே! ஒவ்வொரு இந்தியர் மனத்திலும் ஆறாப்புண்ணை யன்றோ அவர்கள் உண்டாக்கியிருக்கின்றார்கள்! இதை எதனாற்றான் ஆற்றமுடியும்! இத்தீமைகளைச் செய்தவருக்கு என்ன தண்டனை கிடைத்தது? அதற்கு மாறாக அவர்களுக்குப் புகழல்லவா காணிக்கையாகக் கிடைத்திருக்கின்றது! இவற்றை நோக்குங்கால், நம் இந்தியர் எம்முறையில் நடத்தப்படுகின்றனர் என்பது தெள்ளிதின் புலப்படுகின்றதன்றோ!'' என யாவர் மனமும் உருகுமாறு சொற்பொழிவாற்றினார். இதைச் செவியேற்ற பலர் கண்ணீர் விட்டுக் கசிந்துருகினர். இவருடைய ஊன்றிய சொற்பொழிவு ஆங்கில மக்கள், இந்திய மக்கள் ஆகிய இரு திறத்தினரிடமும் ஒரு பெரிய கிளர்ச்சியை உண்டாக்கிற்று. ''பாஞ்சால விஷயத்தைப் பற்றிச் சரோஜினி தேவியார் சொல்வன உண்மை அல்ல. இவை யாவும் யாரோ பொய்யாகக் கட்டிவிட்ட கட்டுக் கதை. இப்பொய்க் கதையை மற்றவரும் நம்பிவிடுதல் கூடாது,'' எனப் பார்லிமென்டும், சில ஆங்கிலேயரும் சேர்ந்து சுற்றறிக்கை விட்டனர். ஆனால், இதற்குத் தேவியார் அஞ்சவுமில்லை; வாளா விட்டு விடவுமில்லை; அவர்களோடு பல வாதங்கள் இட்டு இறுதியில் தாம் கூறியன உண்மை என நிலைநிறுத்தினர்.

தேவியாருக்குண்டாயிருந்த இருதய நோய் சிறிது குணப்பட்டதும், இவர் இந்தியாவுக்குத் திரும்ப எண்ணினர். அங்குள்ள பலர் இவரை அவ்வளவு விரைவில் அனுப்பிவிடப் பிரியப்பட்டிலர்; இவரை இன்னும் சின்னாட்களுக்கு

அங்கேயே நிறுத்தச் சில முயற்சிகளைச் செய்தனர். ஆயினும், தாய் நாட்டின் முன்னேற்றத்திலேயே மனமூன்றிய அன்னையார், இன்னும் பன்னாட்கள் அவண் தங்க விருப்பற்றவராய் இந்தியா திரும்பினர்.

தேவியார் இந்தியாவிற்கு வந்தபின்னும், பஞ்சாபில் நடந்த படுகொலையின் கொடுமை இவர் மனத்தைவிட்டு அகன்றிலது. அவ்வமயம் அருமைச் சகோதரிகளனடந்த துன்பங்கள் அடிக்கடி இவர் கண்முன் நின்றன. அவ் வருத்தம் நன்கு ஊன்றியிருந்த இவர் உள்ளம் எவ்வகையிலும் அமைதியைப் பெற்றிலது. இதற்கு ஒரு கழுவாய் தேடவேண்டுமென்று இவர் தீர்மானித்தார்; அதன் பொருட்டு இவர், "பஞ்சாபில் நடந்த நீதியற்ற செயலிற்கு அரசாங்கம் தக்க பரிகாரம் தேடவில்லையேல், அவரால் தமக்குக் கொடுக்கப்பட்ட 'கெய் சரி ஹிந்த்' என்னும் பொற்பதக்கத்தை அணிந்து கொள்ள முடியாது," என்பதைக் குறிப்பித்து இந்திய சர்க்காருக்கு ஒரு கடிதம் எழுதி, மேற்குறித்த பதக்கத்தையும் அத்துடன் வைத்தனுப்பினர். இவருடைய இவ்வீரச்செயல் யாவருக்கும் வியப்பைத் தந்தது; சிறுவர் பெரியவர் என்னும் வேறுபாடின்றி யாவருக்கும் வீரக்கிளர்ச்சியை உண்டாக்கிற்று. தேசபக்தி முன்னினும் அதிகமாக வளர்ந்தது. இவரைப் பின்பற்றிப் பலர் தங்கள் பட்டங்களையும் பதவிகளையும் உதறித் தள்ளினர். எங்கும் இப்பேச்சே உலவி வந்தது. இந்தியர்களுக்குள்ளே புதிய கிளர்ச்சியும் வீரமும் வீறுகொண்டெழுந்தன. அவ்வமயம் கானுட்டுக் கோமகன் என்பவர் இந்தியாவிற்கு வந்திருந்தார். இந்தியர்களின் உணர்ச்சியும் கிளர்ச்சியும் அவரைத் திடுக்

கிடச் செய்தன. அவர், "எங்ஙனமேனும் இச்செய்தியை இந்தியர் மனத்திலிருந்து நீக்கிவிடவேண்டும். இன்றேல், இது மிக்க தொல்லைக்கிடமாகும்" எனக் கருதினர். ஆதலின், அவர் இவ்வுணர்ச்சியில் ஊன்றியிருந்தவரை நோக்கி, "நீங்கள் பஞ்சாபில் நிகழ்ந்தவற்றை மறந்துவிடுங்கள்" எனச் சொல்லி பிரிட்டிஷ் சர்க்காருக்காகத் தாம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். இம்முறையில், நம் சரோஜினி தேவியாரின் வீரப்பேச்சும் வீரச்செயலும் எங்ஙனம் காரியத்தை நிகழ்த்தியுள்ளதென்பதை நோக்குதல் வேண்டும்! இங்ஙனம் ஒரு பிரிட்டிஷ் சிங்கமே தேவியாருக்குத் தலைவணங்கிச் சென்றதென்றால், இவருடைய பெருமைக்கு வேறொரு சான்றும் பகருதல் வேண்டுமா!

ஆமதாபாத்தில் 1921 ஆம் ஆண்டு காங்கிரசுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதற்குத் தலைமை வகிக்க ஸ்ரீஜத்—ஸி—ஆர்—தாஸ் என்பவர் உடன் பட்டிருந்தார். என்ன காரணத்தினலோ அவர் அக்காரியத்தை நிறைவேற்ற இயலாமற் போயிற்று. அவர் தலைமையுரையை வாசிக்க அவண் பல பெரியார்களிருப்பினும், அப்பொறுப்பு அம்மையாரையே சார்ந்தது. இதனலேயே காங்கிரசு, தேவியாரிடம் கொண்ட மதிப்பு இத்தகையதென்பது விளங்குகின்றதன்றோ! அன்றையலிருந்து இவருக்குக் காங்கிரசில் முன்னையினும் மிக்க செல்வாக்கு உண்டாயிற்று.

தேவியார் 1922-ம் ஆண்டு தென் இந்தியாவிற்குச் சென்றார். இவருக்குக் கள்ளிக்கோட்டைக்குப் போகவேண்டி நேர்ந்தது. அவ்வமயம் - என் - பி - ஹார்திகாரும் மலையாளத்தில் சுற்றுப் பிரயாணம்

செய்துகொண்டிருந்தார். அவரை வரவேற்க எண்ணிய அவ்வூர் மக்கள் ஒரு பொதுக்கூட்டம் கூட்டினார்கள். அதில் பல பெரியவர்களும் அறிஞரும், செல்வரும் கலந்துகொண்டார்கள். அங்கு நம் தேவியார் சொற்பொழிவாற்றுமாறு நேர்ந்தது. எப்போது எப்போது தமக்குச் சமயம் வாய்க்கின்றதோ அப்போதெல்லாம் அரசாங்கத்தாரின் அட்டூழியங்களைச் சொல்லாமல் செல்ல இவர் மனம் இடங்தருதல் இல்லை. ஆதலின், அவ்வவையின்கண் பிரிட்டிஷ் சோல்ஜர்கள் மாப்பிள்ளைகளுக்கு இழைத்த கொடுமைகளை விரிவாக எடுத்துக் கூறி அவற்றைப் பெரிதும் கண்டித்தார். இதுவும் பஞ்சாப் படுகொலை விஷயத்தைப் போன்றே யாவருக்கும் கிளர்ச்சியை உண்டாக்கிற்று. இவருடைய இச்செயல் சர்க்காருக்கு மிக்க கோபத்தை மூட்டியது. ஆதலின், சர்க்கார், "மலையாள இராணுவத்தைப் பற்றி நீங்கள் செப்பிய யாவும் உண்மையானவை அல்ல. நீங்கள் சொல்லியுள்ள வீண் புகாரை வாபசு வாங்கிக் கொள்ளவேண்டும். இன்றேல், உங்கள் மீது வழக்குத் தொடரவேண்டி இருக்கும்," என அச்சுறுத்தி ஒரு விளம்பரம் விடுத்தனர். இம்மிரட்டலுக்கெல்லாம் நம் தேவியார் அஞ்சுபவரா? இவருக்குப் பின்னும் வீரம் வீறிட்டெழுந்து, "யான் சோல்ஜர்களைக் குறித்துக் கூறியது பொய்யாயிருக்குமானல், அரசாங்கத்தார் தடையின்றி என் மீது வழக்குத் தொடரலாம். இன்றேல், அரசாங்கத்தார் எனக்கு அனுப்பிய நோட்டீசைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மன்னிப்புக் கேட்கவேண்டும்" என எதிர் நோட்டீசு கொடுத்தார். பூஜ்யர் ஆண்ட்ருஸ் துரையும், டாக்டர் - என் - பி - ஹார்திகாரும், "தேவியார்,

சோல்ஜர்கள் விஷயமாய்ச் செப்பியவை யாவும் உண்மையாக நடந்தவை. அவற்றுள் சிறிதும் பொய்யில்லை'' என ஆமோதித்தனர். அன்றியும், கேரளமாகாண காங்கிரஸ் கமிட்டிக் காரியதரிசியும், ''சோல்ஜர்கள் செய்த கொடுமைகளைத் தேவியாருக்குத் தெரிவித்தவன் யானே! அவற்றுள் ஏதேனும் பொய் இருக்குமாயின் அதற்கு விடையளிக்க வேண்டியவனும் யானே! அவை யாவும் உண்மையென நிலை நாட்ட யான் சித்தமாகவிருக்கின்றேன்'' என ஓர் அறிக்கையை வெளியிட்டனர். இதைப் பெற்ற சர்க்கார் ஒன்றும் கூற இடமில்லாமல் பெட்டிப் பாம்பு போன்று அடங்கி இருந்தனர்.

9. மேனுடு செல்கையும் பெரும் புகழும்

இந்தியாவின் உண்மை நிலையையும், இந்தியர்களின் சுதந்திரப் போராட்டத்தின் தத்துவத்தையும், அவர்கள் விருப்பத்தையும் தெரிந்து கொள்ள வேண்டுமென்பது அமெரிக்கர்களின் அவா. அதன் பொருட்டு அவர்கள் மகாத்மா காந்தியைத் தங்கள் நாட்டிற்கு வருமாறு பன்முறை கேட்டார்கள். ஆயினும், அவர்கள் எண்ணத்தை முற்றுப்பெறச் செய்ய அவரால் இயலவில்லை. பின்னும் சின்னுட்கள் கழித்து, அமெரிக்கர், காந்தியடிகளை வரும்படி மிக்க இரக்கத்துடன் ஒரு கடிதம் அனுப்பி இருந்தனர். அதையும் மறுக்க அவருக்கு முடியவில்லை; அவண் செல்லவோ அவருக்கு ஒழியவில்லை. இங்நிலையில் அவர் நெஞ்சம் சிறிது நேரம் ஆழ்ந்து சிந்தித்தது. அவ்வமயம் அவருடைய உயரிய எண்ணத்தில் தோன்றியவர் நம் சரோஜினி தேவியாரே ஆவார். அமெரிக்கர் தம் வாயிலாக என்னென்ன தெரிந்து

கொள்ள வேண்டுமென நினைக்கின்றனரோ, அவற்றை எல்லாம் விளக்கிக் கூறும் வன்மை சரோஜினி தேவியாருக்கு உண்டு என்னும் நம்பிக்கை காந்தியடிகளுக்கு இருந்ததனாற்றானே, தாம் செல்லவேண்டிய இடத்திற்குத் தேவியாரை அனுப்பினர். இதுவே, நம் பெரியாருக்கு அன்னையார் மீது எத்துணை மதிப்பும், இவருடைய நுண்ணிய மதியிலும் மனத்திட்பத்திலும் எத்துணை நம்பிக்கையும் இருந்திருக்க வேண்டுமென்பதைத் தெரிவிக்கவில்லையா?

காந்தியடிகளின் கட்டளைப்படியே கவியரசியார் 1928-ஆம் ஆண்டில் அமெரிக்கா சென்றார். அவண் இவருக்கு மிக உயர்ந்த முறையில் வரவேற்பு நடந்தது. பல பிரமுகர்களும் அறிஞர்களும் இவருக்கு அறிமுகப்படுத்தப்பட்டனர். அநேகமாய் இவர் மகாத்மாவிற்கு ஒப்பாகவே எண்ணப்பட்டார். ஆங்காங்கே பல கூட்டங்கள் நடைபெற்றன. அக்கூட்டங்களில், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியப் பிரசாரர்களும், பாதிரிமார்களும், மிஸ்—மேயோ போன்ற கூலிப் பிரசாரர்களும் இந்தியாவைப்பற்றி வெளிப்படுத்தியிருந்த தவறான செய்திகளைப் போக்குதற் பொருட்டு இவர் பல உண்மைகளை எடுத்துக்கூறி அவர்கள் மனத்தில் ஊன்றியிருந்த குறைவான எண்ணங்களைக் களைந்தெறிந்தார். அவை ஒருவாறு அவர்கள் மனத்தை விட்டு நீங்கிய பின்பு, இந்தியாவின் மேன்மையையும், இந்தியர்களின் இலக்ஷியத்தையும், சுதந்திர இயக்கத்தின் கருத்தையும், மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரகத்தின் உண்மையையும், காங்கிரசின் செயல்களையும் விளக்கமாக அமெரிக்கர்களுக்கு விளக்கினர். இவர் சொற்பொழிவினால், இந்தியர்க

6

ளின் எண்ணம், காந்தியாரின் உண்மைக் கருத்து முதலியன பலர் மனத்தில் பசுமரத்தாணியெனப் பதிந்தன. இவருடைய பேச்சுத் திறனும், பொருள் களின்தொகுப்பும், அவற்றைத் தெள்ளிதின் விளக் கும் தன்மையும், அஞ்சா ஆண்மையும் இவரிடம் அன்புடைய அநேகர் மனத்தையும் கவர்ந்தன. இவரை எதிர்த்து நிற்கவேண்டுமென்னும் எண்ண முடையவரையும், இவர் பேச்சின் திறமும் அதன் நயமும் வியப்புறுமாறு செய்துவிட்டது. ஈண்டு, "கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும், வேட்ப மொழிவதாஞ் சொல்" என்னும் தெய்வப் புலவர் வாக்கு நினைவிற்கு வருகிறது. இம்முறையில், மகாத்மாகாந்திக்குப் பிரதி நிதியாகச் சென்ற நம் தேவியார், அப்பெரியார் பெறக்கூடிய பெருமை யையே பெற்றார். இஃது எத்துணை மேன்மை யுடையதாகும்.

அக்காலத்தில் தென்னாப்பிரிக்காவில் இருந்த இந்தியர்க்கு அந்நிய நாட்டினர் இழைத்த இன்னல் களைப் பலர் அறிவர். அவற்றை ஒழித்தற் பொருட்டு மகாத்மா காந்தியார் அங்குச் சென்றார்; அவர்களுக்குச் செய்யும் கொடுமைகளைக் கண்ணு ரக் கண்டார். அவற்றைப் போக்கவேண்டுமென அவர் போராடிய போராட்டம் சிறிதன்று. அப் போராட்டத்தின் பலனாய்ச் சில நன்மைகள் கிடைத் தன. கூடியமட்டும் இந்தியர்களை அன்புடனும் மதிப்புடனும் நடத்தவேண்டும் என்பதற்கு ஓர் உடன்படிக்கையும் ஏற்பட்டது. ஆயினும், அந் நாட்டினர் சின்னாட்களே இவ்வுடன்படிக்கையின் படி நடந்துகொண்டனர். மகாத்மாகாந்தி திரும் பியவுடன் பழைய கொடுமைகள் கிளைத்தெழுந்தன. இந்தியர்கள் முன்போன்றே அவமதிக்கப்பட்

டார்கள். அவர்கள் துயரம் அதிகப்பட்டனவே யன்றிக் குறைந்தபாடில்லை. இதன் பொருட்டு என்ன செய்யலாம் என்பது அவணிருந்த இந்தியர் களின் கவலை. இச்செய்தி எங்ஙனமோ காங்கிர சுக்கு எட்டியது. காங்கிரசார் யாரையேனும் அவண் அனுப்பி, இந்தியர்களின் துன்பத்தைப் போக்க வேண்டுமென நினைத்தனர். அக்காரியத்திற்கு, மகாத்மா காந்தியாருக்கு இரண்டாவதாகச் சொல் லப்படும் ச்ரோஜினி தேவியாரே தகுந்தவர் எனத் தீர்மானிக்கப்பட்டது. ஆதலின், காங்கிரசுத் தலை வர், அன்னையாரை 1924-ஆம் ஆண்டு தென்னுப் பிரிக்காவிற்கு அனுப்பினர்.

தலைவர் கட்டளைப்படியே தேவியார் தென்னுப் பிரிக்காவிற்குச் சென்றார். அவ்வமயம் அவண் **மாம்பஸா** என்னும் இடத்தில் காங்கிரசின் மகாநாடு கூட்டப்பட்டது. அதற்குத் தலைமை வகிக்குமாறு தேவியார் கேட்டுக்கொள்ளப்பட்டார். இவருடைய தலைமையுரை அவணிருந்த பலரையும் வியக்கச் செய்தது. இந்தியருக்கு அளப்பிலா ஆனந்தம் உண்டாயிற்று. ஆயினும், இவருடைய பேச்சு வன்மையும் ஆங்கிலத் திறனும் யாவரையும், ஆச் சரியத்துக்குட்படுத்தின. இம்முறையில் ஐரோப் பியரைப் பற்றிக் கூறவேவேண்டாம். பொது வாக இந்தியர்களின் பேச்சையே அவர்கள் கேட்டி ரார்கள். இம்முறையில் இந்தியப் பெண்ணின் ஆண்மை நிரம்பிய பேச்சு அவர்களை எங்ஙனம் தியங்கச் செய்திருக்கும்! அவர்களுள் சிலர், 'இவள் எங்ஙனம் விஷயங்களைத் தொகுத்துப் பேசுகின்றாள் பார்த்தீர்களா! சொற்கள் எவ்வளவு ஆணித்தர மாக உள்ளன. பொருள்களைத் தெளிவாக விளக் குதற்கு மற்றவர் இவளிடந்தான் கற்றுக்கொள்ள

வேண்டும்!'' என்றனர். சிலர், இந்தியப் பெண்ணிற்கு ஆங்கிலத்தில் இவ்வளவு அழகாகப் பேசுதற்கு எவ்வாறு வன்மை ஏற்பட்டதோ! இத்திறமை ஆண்களுக்கும் அமைதல் அருமையே! ஏனெனில், இந்தியப் பெண்களுக்கு, ஆண்களைப் போன்று பொதுக் கூட்டங்களிலும், பொதுமக்களிடத்திலும் பழகி வழக்கமில்லை யல்லவா? அங்ஙனமிருந்தும், இவளுக்கு இத்துணை வன்மை வாய்ந்தது அருமையினும் அருமையே!'' எனப் பகர்ந்தனர். சிலர், ஆங்கிலத்திலேயே பிறந்து ஆங்கிலத்திலேயே வளர்ந்த நம் நாட்டுப் பெண்களுக்கும் இங்ஙனம் பேசுந் திறமை அமைவது கடினமே'' என்று கூறினர். இவ்வாறு அந்நாட்டினரையே பிரமிக்குமாறு செய்து விட்டது நம் தேவியார் சொற்பொழிவின் ஆற்றல்.

கவியரசியாரின் பேச்சுத்திறனும், புகழும் ஆபிரிக்கா முழுவதும் பரவியது. இதை அறிந்த இந்தியர் இவரை அவண் வருமாறு வேண்டிக் கொண்டனர். அவ்வமயம், அவ்வூரின் சட்டசபையிலிருந்த ஐரோப்பிய அங்கத்தினர், இந்தியர் உரிமைகளைப் பறிமுதல் செய்யும் மசோதா ஒன்றைக் கொணர்ந்து அதைச் சட்டமாக்க முயன்றுகொண்டிருந்தனர். அதைக் கண்டித்தற்பொருட்டுத் தேவியார் நெட்டாலுக்குச் சென்றார். அங்கு இதைப் பற்றிப் பல பொதுக் கூட்டங்களில் பேசியும், பத்திரிகை பிரதிநிதிகளுக்கு அறிக்கைகள் விடுத்தும், ஐரோப்பியரின் கொடுமைகளைக் கண்டித்தும் சர்க்காரைக் கலங்குமாறு செய்தார். தென்னுப்பிரிக்கா இவரை மிகச் சிறப்பாக வரவேற்றது. இவருக்குச் சென்ற இடமெல்லாம் பாராட்டுகள் நிகழ்ந்தன. ஐரோப்பிய கனவான்கள் பலரை

இவர் நட்பாக்கிக் கொண்டார்; இந்தியர்களின் துன்பங்களைப் போக்குதற்கு எவ்வளவு அவர்கள் நட்பு இன்றியமையாததோ, அவ்வளவிற்கு அவர்களிடம் அளவளாவி வந்தார்; அதன்றியும், தென்னாப்பிரிக்கா முதன்மந்திரி, பார்லிமென்டு, அங்கத்தினர் இவர்களை நேரில் கண்டு இந்தியருக்குச் செய்யப்படும் கொடுமைகளை நீக்கி அவர்களை நியாய முறையில் நடத்துமாறு கேட்டுக்கொண்டார்.

சில பெரியவர் இவரிடம், "சமத்துவம் என்றால் என்ன? சுதந்திரம் என்றால் என்ன?" என்னும் கேள்விகளைக் கேட்டனர். இவர் அதற்குத் தகுந்த விடைகளைக் கூறி அவர்களைத் தெளிவித்தார்; இறுதியில் நெட்டாலிலுள்ள ஜோஹன்னஸ்பர்க் என்னும் இடத்தில், இந்தியருக்குப் பல ஆலோசனைகளையும் அறிவுரைகளும் பகர்ந்தனர்.

அந்நகரத்தின் உதவி மேயர் பிரான்ஸ் கில்பர்ட் தலைமையில் சரோஜினி தேவியார் ஒரு சொற்பொழிவாற்றினர். அஃது அவர் மனத்தைக் கவர்ந்தது. அவர் அன்னையாரைப் பெரிதும் பாராட்டிப் பேசினர். ஆயினும், தேவியார் இந்தியர்களுக்குக் கொடுக்கவேண்டிய சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் குறித்துப் பேசுங்கால், அவர், அதைப் பற்றி ஒன்றும் தெரியாதவர் போல நடித்து அம்மையாரை ஏமாற்ற முயன்றனர். ஆனால், அவற்றிற்கெல்லாம் ஏமாற்ற மடைகின்றவரா நம் அன்னையார்! அவருக்கும் மற்றவருக்கும் தக்க விடை இறுத்து யாவர் வாயையும் அடக்கினர். இவர் சொற்பொழிவாற்றும் மண்டபத்தில் மட்டும் வீரத்துடன் பேசினர் என்பதில்லை; எப்போதெப்

போது எங்கெங்கு யார் யாருடன் பேசச் சமயம் நேருகின்றதோ, அவ்வமயங்களிலெல்லாம் தம் கருத்தை நன்கு விளக்கி ஆண்மையுடன் பேசி வந்தார்; இவர் ஒரு சிறு விஷயத்தையும் சிறு சமயத்தையும் நழுவ விடுதல் இல்லை; தம் பேச்சை எவரும் மறுத்துப் பேசாத நிலையில் விஷயங்களை முறையுடனும் வற்புறுத்தியும் பேசுவார். இதனால், இவர் முரட்டுப் பிடியுடன் இவர் சொல்வதே சரியானது எனச் சாதிக்கும் தன்மையுடையவர் எனக் கூறுதல் கூடாது. அப்பேச்சில் உண்மையும் நியாயமும் இருக்கும். ஆதலின், அதை ஒருவராலும் மறுக்க இயலுவதில்லை. முன் கூறிய வாறு இந்தியர்களுக்குத் தக்க புத்திமதிகளைச் சொல்லிவிட்டு இந்தியாவிற்குப் புறப்பட்டார்.

10. இந்தியாவிற்குத் திரும்புதல்

கவியரசியார் இந்தியாவிற்குத் திரும்பும் செய்தி எங்கும் பரவியது. பம்பாய் அறிஞர் பலர் பெருங் கூட்டமாகத் திரண்டு இவரை வரவேற்று உபசரித்தனர். இவர் அயல் நாடுகளுக்குச் சென்று செய்த பணிகளை யாவரும் கொண்டாடினர். அவ் வாண்டு பெல்காமில் நடந்த காங்கிரசுக் கூட்டத்தில், மெனியாவிலும் தென்னப்பிரிக்காவிலும் நம் இந்தியர்க்காக இவர் செய்த தொண்டுகளைப் புகழ்ந்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அங்ஙனமாயின் நம் தேவியாரின் உலகப் பணியைப் பற்றி என் சொல்வது! அப்பெல்காம் கூட்டத்திற்குத் தென்னப்பிரிக்கா இந்தியர் சிலர் வந்திருந்தனர். அவர்கள், சரோஜினி தேவியார் தங்களுக்குப் புரிந்த உதவிகள் அளவுடையன அல்ல என்றும், அவைகளுக்குக் கைம்மாறு செய்ய எவ்வகையா

னும் அவர்களுக்கு இயலாதென்றும் பலரிடம் கூறிக்கொண்டார்கள்; அச்சொல்லளவில் அவர்கள் நின்றுவிட வில்லை; அன்னையாரின் திருவுருவப் படம் ஒன்றை, காங்கிரசுக்கு நன்கொடையாக அளித்தார்கள். அன்றியும், எங்ஙனமேனும் சரோஜினி தேவியாரைத் தங்கள் நாட்டிலேயே வைத்துக்கொள்ள வேண்டுமென்பது அவர்கள் கருத்து. ஆகலின், அவர்கள் தலைவராகிய டாக்டர் அப்துல் ரஹ்மான் சாஹிப், தேவியாரைத் தங்கள் நாட்டிற்கே அனுப்பிவிடுமாறு மிகவும் உருக்கத்துடன் கேட்டார். ஆனல், அக்காரியம் நடை பெறக் கூடியதா? கல்விக் களஞ்சியத்தை—வீர மங்கையை—யாவருக்கும் பெருமையை அளித்து வரும் பெட்பை—தன்னலங் கருதாத் தவக்கொழுந்தை—தேசபப்பற்று வாய்ந்த தெய்வத்தைப் பிற நாட்டினருக்குக் கொடுத்துவிட நாட்டன்பு வாய்ந்த எவருக்கேனும் மனமிசையுமா? ஆகவே, தென்னுப்பிரிக்க இந்தியரின் கருத்து முற்றுப் பெற்றிலது.

சின்னுட்கள் கழித்துத் தேவியார் தென்னிந்தியா, சிலோன் முதலிய இடங்களுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்தனர்; இவர் எங்கெங்குச் சென்றனரோ அங்கெல்லாம் மகாத்மா காந்தியின் கருத்தையும், காங்கிரசின் செயல் முறைகளையும் எடுத்தோதினர். இவருடைய சொற்பொழிவு பலருக்குத் தேசிய உணர்ச்சியையும், சுதந்திர வேட்கையையும் உண்டாக்கிற்று. தங்களுக்கு நன்மையளிக்கக் கூடியது காங்கிரசே என மக்கள் காங்கிரசினிடத்தில் மிக்க நம்பிக்கையைக் கொண்டார்கள்.

11. காங்கிரசின் தலைமையும் சிறைவாசமும்

தேவியார், பாரத தேச சுதந்திரத்திற்காக அல்லும் பகலும் மேற்கொண்டிருக்கும் உழைப்பை நோக்கிய தேசியத் தலைவர்களும் தேசமக்களும் இவருக்குக் காங்கிரசு தலைமைப் பதவியை வழங்கிப் பெருமைப் படுத்தினர். அப்பதவியை ஏற்றுக் கொண்ட நம் அன்னையார், காரியங்களை மிகத் திறம்பட நடத்தி மற்றவர்க்கு முன் மாதிரியாக நடந்து கொண்டார்; கான்பூரில் நடந்த காங்கிரசு கூட்டத்திற்கு இவர் தலைமை வகித்து அதைச் சிறந்த முறையில் நடத்தினர். இவர் செயலின் திறமையைப் புகழ்ந்தவர் பலராவர். அதை மறுத்துக் கூறினவர் ஒருவருமிலரென்றே சொல்லுதல் வேண்டும். இங்ஙனம் தலைமை தாங்கி, காங்கிரசை வன்மையுடன் நடத்திய இந்தியப் பெண்மணியார் இவர் ஒருவரேயாவர். இவருக்கே இப்பதவி முதன் முதலில் கிடைத்தது. இவருக்குமுன் எவ்விந்திய பெண்மணியும் இத்தகைய உயரிய பதவியை ஏற்றதே இல்லை. இஃதொன்று மட்டுமன்று. அவ்வமயம் இவர் காங்கிரசுச்காகச் செய்த செயல்களும், புத்தம் புதிய கோட்பாடுகளும் யாவராலும் புகழத்தக்கனவாயிருந்தன.

இங்ஙனமே சின்னாட்கள் கழிந்தன. பிறரைத் துன்பங்களிலிருந்து விடுவிக்கவேண்டும் என்னும் கவியரசியாரின் உயரிய எண்ணம் இவரை வாளா இருத்தற்கு இடந்தரவில்லை. உப்பு வரியைப்பற்றி எங்கும் கிளர்ச்சியுண்டாயிற்று. அதன் பொருட்டு இவர் சத்தியாக்கிரகம் செய்தார்; சட்டமறுப்புப் போரிலும் கலந்துகொண்டார். அவற்றுள் நுழைய வேண்டாமெனப் பலர் இவரைத் தடுத்தனர். ஆயினும், தன்னலங்கருதி மக்கள் படும் துன்பங்

களைப் போக்க வழி தேடாமலிருக்க இவர் மனம் இசைந்திலது. அதன்பொருட்டுக் கவியரசியார் எரவாடா சிறையில் வைக்கப்பட்டார். அதற்காக இவர் வருத்தத்தில் மூழ்கித் தம் காலத்தை வீணே கழித்தாரில்லை. தாம், "கவி இயற்றுதற்கும், அவ் வின்பத்தில் ஆழ்ந்திருத்தற்கும் இஃதொரு நல்ல சமயமென," இவர் கருதினர். சுவை நிரம்பிய கவிகள் இவரிடமிருந்து வெளிப்போந்தன. இவர் பல பாக்களைப் பாடிப்பாடி மகிழ்ந்தார். கவி உள் ளம் பெரும்பான்மையும் எதை விரும்பும்? இயற்கை வனப்புகளை யன்றோ! அச்சிறையிலேயே நறுமண மும் அழகும் நிரம்பிய மலர்ச் செடிகளை வைத்து வளர்த்தார்; அவைகள் தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களைத் தாமே தயாரித்துக் கொள்வதையும், தமக்குற்ற ஒவ்வொரு பருவத்திலும் அவைகள் அடையும் வேறுபாடுகளையும் கண்டு கண்டு ஆனந் தித்தார். அம்மலர்களின் ஒவ்வொரு பருவமும் இவர் கவிகளால் அணி செய்யப்பட்டது. நட்பின ரைப் பிரிந்திருந்த இவருக்கு நட்பினரைப்போன்று ஆறுதலளித்தவை அம்மலர்ச் செடிகளும் கொடி களுமே ஆகும். இவர் வளர்த்த செடிகளில் மலர்ந்த மலர்கள் பல நிறமுள்ளனவா யிருந்தன. அவற்றுள் சிவந்த நிறமுள்ள மலர்களைக் காணு கின்ருர்; அவைகள் இவர் மனத்தைக் கவர்கின் றன. "சிவப்பு நிறம் பெற்றுத் துலங்கும் மலர்களே, உங்கள் அழகிய நிறத்திற்கு எதை ஒப்புக் கூறலாம்! மணத்தின்போது மணமகள் அணியும் ஆடை ஒப்பாமா? ஒரு பறவையின் சிறகு ஒப்பாமா? சர்ப்பத்தின் தலையில் பதிந்திருக்கும் நாகமணி ஒக்குமா? காலை எழும் இளஞ் சூரியனுல், பரந்த கடலடையும் நிறந்தான் ஒப்பாமா? அரசி பத்மினிக்

காகப் போர் புரிந்த மன்னரின் மார்பகத்தி லிருந்து வெளிப்பட்ட செந்நீர் ஒக்குமா? எதையும் உவமைப்படுத்த முடியாத நிலையிலல்லவா, நீங்கள் கண் கவரும் நிறத்துடன் ஒளிருகின்றீர்கள்,'' என அவற்றைப் பலபடப் புகழ்ந்து பாடுகின்றார். இன்னும் அவனுள்ள சண்பகமலர், வெண்மையும் வெளிறிய மஞ்சளும் கலந்த இதழ்கள் அவிழ, இனிய மணத்தை வீசித் தேவியாரைத் தம்மிடம் நெருங்குமாறு செய்கிறது. அம்மலர்களைக் காணுகின்றார் அன்னையார், 'ஓ சண்பக மலர்களே, அழகான இதழ்களைப் பெற்றிருக்கின்றீர்கள்! உங்கள் மணத்தை நெடுந்தூரம் வீசி யாவருக்கும் இன்பமளிக்கின்றீர்கள்! மங்கையர் உங்களைத் தலையில் சூடிக் கொள்ளுகின்றனர். அம்முறையில் அவர்கள் கூந்தலுக்கு மணத்தையும் அழகையும், காண்பவருக்குக் களிப்பையும் உண்டாக்குகின்றீர்கள்! சிலர் உங்களைத் தொடுத்து மாலையாக அணிந்து ஆனந்தமடைகின்றனர். சண்பகப்பூ என்றவுடனே யாவருக்கும் ஆசையும் சந்தோஷமும் ஏற்படுகின்றன. ஆயினும், நீங்கள் பூத்த சிறிது நேரத்திற்கெல்லாம் வாடி வதங்கி விடுகின்றீர்கள்! அங்ஙனம் விரைவில் அழிகின்ற நீங்கள், மாம்பூ முதலியன போன்று, உங்களுக்குப் பின்பு பிறருக்கு நன்மையளிப்பதற்காகக் காயையேனும் வேறெதனையேனும் விட்டுச்செல்லுகின்றீர்களா? இல்லையே! ஆயினும், உங்களைப் பற்றிப் பாடாதாரும் புகழாதரும் இலரே! இது நீங்கள் முன்பு இழைத்த புண்ணியம் போலும்!'' என அம்மலரைத் தம் இனிய கவிகளால் பாராட்டுகின்றார்.

இங்ஙனம் தாம் வளர்த்து வந்த மலர்களை நோக்குவதும், அவற்றின் இயற்கைத் தன்மைகளை

யும் பெருமிதங்களையும் பன்னிப்பன்னிப் பாடுவது மாகவே அச்சிறையில் தம் காலத்தைக் கழித்து வந்தார். அறிஞர் எத்துணைத் துன்பம் நிறைந்த இடத்தில் இருப்பினும், அதை இன்ப இடமாகச் செய்து கொள்வர் என்பதற்கு நம் தேவியாரின் வாழ்க்கையே தக்க சான்றாகும். இங்ஙனம் தமக்கு இன்பத்தை ஊட்டிவந்த செடி கொடிகள் முற்றும் பூத்து, அவற்றின் அழகையும் மணத்தையும் தேவியார் நுகருவதற்கு முன்பே, இவர் சிறைச் சாலையை விட்டு நீங்கும் நாள் வந்துவிட்டது. ஆயினும், அப்போதே அவற்றை விட்டுச் செல்ல மன மற்ற தேவியார், பின்னும் ஒரு வாரம் சிறையில் தங்கி இருந்து செல்வதற்கு அதிகாரிகளின் அனுமதியைப் பெற்றார். இவர் கருதியபடியே அவ்வொருவாரத்தில் யாவும் மலர்ந்து மணத்தையும் அழகையும் அள்ளி அள்ளி வழங்கின. அவற்றை உண்டு உண்டு களித்த அன்னையார் மனக்குறை வின்றிச் சிறையிலிருந்து வெளிப்போந்தனர். சிறை பல இன்னல்களுக்கும் இடனாய் இருப்பினும், அவ்வியற்கைத் தாவரங்களில் இவருக்கிருந்த அன்பும் ஆர்வமுமல்லவா, இவரை இங்ஙனம் இருத்தியது! இஃது கவிகளின் இயற்கைத் தன்மை யாகும்!

கவியரசியார் 1930-ம் ஆண்டிலிருந்து காங்கிரசு காரியக் கமிட்டியில் ஓர் அங்கத்தினராக இருந்து வந்தார். சுதந்திர போராட்ட இயக்கத்தில் சேர்ந்து உழைத்துவரும் பெண்களுக்கு இவர் பிரதிநிதியாவார். இந்தியாவிற்குச் சில துன்பங்கள் ஏற்படுங் காலங்களிலெல்லாம், காரியக் கமிட்டிக்கு அரிய யோசனைகளைக் கூறி அதைத் தக்க வழியில் நடத்தி வந்தார். இலண்டனில் நடந்த

வட்டமேஜை மகாநாட்டிற்கு, காந்தியடிகள் முதலிய சிலர் சென்றிருந்தனர். அங்குப் பெண்களின் பிரதிநிதியாக ஒருவர் செல்ல வேண்டுமென்பது பலர் அபிப்பிராயம். அவ்வமயம் முன் நின்றவரும் நம் தேவியாரே ஆவார். அங்ஙனமே இவர் அங்குச் சென்று வேண்டுவன செய்தார்.

ஒவ்வோர் ஆண்டிலும் காங்கிரசு விழாக்கள் பல இடங்களில் நடைபெறுமல்லவா? அவை ஒவ்வொன்றிலும் நம் சரோஜினி தேவியார் கலந்து கொள்வார். அவ்விழா, குறைவறவும் சிறப்பாகவும் நடைபெறத்தக்க காரியங்களைப் புரிபவர் நம் தேவியாரே என்பது மிகையாகாது. ஆலோசனைக் கமிட்டியிலும் இவருக்கு முதலிடம் உண்டு. காங்கிரசு விழாவில் கொண்டுவரும் தீர்மானங்களுக்குச் சிலபோது எதிர் வாதங்கள் ஏற்படும். அவ்வாதங்களிலும் கலந்து அவற்றை ஒரு முடிவிற்குக் கொண்டுவர முயல்பவரும், சங்கத்தின் முடிவில் வந்தனம் கூறி அதை மங்களமாக முடிப்பவரும் நம் தேவியாரே ஆவார்.

கவியரசியாருக்கு இன்னொரு சாதுரியம் உண்டு. காங்கிரசு விஷயத்தில், இவர் பெரும்பான்மையும், தம் அபிப்பிராயத்தையே நிலை நாட்டுதல் இல்லை. இது பொதுமக்கள் நலத்தைக் குறித்ததாதலால், பல அறிஞர் கருத்துகளையும் தழுவியே நடக்கவேண்டும் என்பது இவர் எண்ணம். ஆதலின், மகாத்மா காந்தியாரின் கருத்தையும் காங்கிரசில் பங்கெடுத்துக்கொண்டிருக்கும் பெரும்பான்மையோர் தீர்மானத்தையும் பின்பற்றியே இவர் காரியங்களைச் செய்வது வழக்கம். அதனாற்றான், இவர் அத்தனை நாட்கள் காங்கிரசி

விருந்து அதை முன்னேற்ற வசதி கிடைத்தது. இதனல், இவர் பரந்த மனப்பான்மை நன்கு வெளியாகின்றது அன்றே! இங்ஙனமின்றி, குறு கிய எண்ணமுடையராய், தாம் கொண்டதே கோட் பாடு, அதையே நிலைநாட்ட வேண்டும் என்னும் கருத்துடையராய் இருந்திருப்பரேல், இவருக்கு இப்போதிருக்கும் செல்வாக்கு இருந்திருக்க முடியா தென்பது திண்ணம். அவ்வமயம் தேசத்தலைவர் களுக்குள் பல குழப்பங்கள் ஏற்பட்டன. அவர்கள் ஒற்றுமையைக் கைவிட்டார்கள். சிலர் தம் பொறுப்பிலிருந்து நீங்குதல், சிலர் அதை ஏற்றுக் கொள்ளுதல் இவற்றுள் சில விரோதங்கள் நிகழ்ந் தன. தேவியார் இவ்விருதிறத்தாரிடமும் ஒற்று மையை உண்டாக்க எடுத்துக்கொண்ட முயற்சி கள் பலப்பல. இது முக்கியமாகக் குறிப்பிக்க வேண்டிய செய்தியாகும். தலைவர்களிடையில் ஒற் றுமை உண்டாக்கும் மூலமாக மக்களிடமும் ஒற் றுமை உணர்ச்சியை உண்டாக்கப் பெரிதும் முயன்ருர்.

12. ஐக்கிய மாகாணக் கவர்னரானமை

காங்கிரசைச் சார்ந்த சில பெரியோர் 1940-ஆம் ஆண்டு பேச்சுரிமையில் சத்யாக்கிரகம் செய்து சிறை சென்றனரல்லவா? அவ்வமயம் தேவியா ருக்கு உடல் நலம் குறைந்திருப்பினும், அதைப் பொருட்படுத்தாது இவரும் சத்தியாக்கிரகஞ்செய்து சிறை சென்ருர். அங்குச் சென்றபின்பு இவர் நோய் அதிகமாயிற்று. அதன் காரணமாக அரசாங் கத்தார் இவரைச் சிறையிலிருந்து விடுவித்தனர். ஆயினும், அஃது இவருக்கு விருப்பமில்லை. அர சாங்கத்தார் குறித்த காலத்தைச் சிறையிலேயே

கழிக்கவேண்டு மென்பது இவர் எண்ணம். ஆதலின், இவர் திரும்பவும் சத்தியாக்கிரகம் செய்து சிறைக்குச்செல்ல முயன்றார். இதைப் பெரியார் மகாத்மாகாந்தி விரும்பிற்றிலர். அவர், சரோஜினி தேவியாரை நோக்கி, "நீர் திரும்பவும் சிறை செல்லுதல் கூடாது. உமது உடல் நலத்தின் பொருட்டுச் சின்னாட்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்" என்று அறிவுறுத்தினர். தமக்கு, தந்தையும் தாயும் குருவும் அவரே எனக் கருதியுள்ள தேவியார், அப்பெரியாரின் சொல்லை மறுத்தற்கஞ்சி அதற்கு உடன்பட்டார். ஆயினும், அவ்வமயமும் இவர் தம் காலத்தை வீணே கழித்தாரில்லை; காங்கிரசுக்குச் செய்யவேண்டிய முக்கிய செயல்கள் பலவற்றைச் செய்தனர்.

தேவியார் சிறிது உடல் நலம் பெற்றவுடன் பழையபடியே இவருடைய சொற்பொழிவுகள் பல இடங்களிலும் நடைபெற்றன. இச்சொற்பொழிவுகள் அநேகருக்குப் புதிய ஊக்கத்தைத் தந்தன. இவருக்கு வயதேற ஏற இவருடைய அறிவும், அனுபவமும், ஆற்றலும் வளர்ந்து கொண்டே வந்தன. இவர் உடல் சிறிது தளரினும் உள்ளம் தளர்ந்திலது. இவர் சொற்கள் ஒவ்வொன்றும் ஆணித்தரமாக வீறுபெற்று விளங்கின. "இவர் கவியரசியாராதலால், இவருடைய கவிகளில் எத்துணைப் பொருள் நுட்பமும், அழகும், கம்பீரமும் அமைந்துள்ளனவோ, அவையாவும் இவர் சொற்களிலும் அமைந்திருந்தன. பிறர் இவர் வயப்பட்டு நிற்றற்கு அவையே காரணம்" எனச் சிலர் சொல்லக் கேட்கலாம்.

கவியரசியார், ஐக்கிய மாகாணத்திற்குக் கவர்னராக அமைந்தது யாவரும் அறிந்ததே! கல்வி

யிலும், கவியிலும், சொற்பொழிவிலும் இந்தியப் பெண்மணிகளுக்கு முதன்மையுற்று விளங்கியதைப் போன்றே, இப்பதவியிலும் இவர் முதன்மை இடத்தைப் பெற்றார். இதுகாறும் பெண்டிருள் இவ்வுயர் நிலைப்பதவியைப் பெற்றவர் ஒருவருமிலரல்லவா? இவ்வேலையையும் இவர் மிகத் திறமையுடன் நடத்தி வந்தார் என அறிகின்றோம். நுட்ப அறிவும், பிறருக்கு நலம் புரியும் எண்ணமுமுடையவர், எப்போதும் எச்செயலையும் திறம்பட நடத்திப் பேரும் புகழும் பெறுவர் என்பதில் தடையாது? "இவர் சாதுரியமும் செயலின் திறமும் இன்னும் பல மகளிரை இப்பதவிக்கு ஏற்றக் கூடும்!" என எதிர் பார்க்கப்படுகிறது. இது நிற்க.

13. தேவியாருக்கும் காந்தியடிகளுக்கும் உள்ள தொடர்பு

நம் தேவியாருக்கும் காந்தியடிகளுக்கும் உள்ள தொடர்பைச் சில இடங்களில் இயம்பியுள்ளோம். "யான் இத்தகைய தொண்டில் நுழைவதற்குக் காந்தியடிகளே காரணம். அப்பெரியாருடைய தூண்டுதலும், ஊக்கமொழிகளும், அன்புமே எனக்கு இத்தகைய கிளர்ச்சியைத் தந்திருக்கின்றன. என் பொது நல வாழ்க்கையின் வழிக்கு அவரே அணையா விளக்காவார். அவ்விளக்கின் ஒளியினாலேயே யான் என் செயல்களை ஒருவாறு செய்து வருகின்றேன். எனக்குப் பெற்றோரும் குருவும் அவரே," என்னும் பொருள் கொண்ட கருத்துகளைத் தேவியார் ஆங்காங்கே கூறியிருக்கின்றார். இதனாலேயே தேவியாருக்கு அடிகளினிடம் எத்துணை அன்பும் மதிப்பும் இருந்தன என்பது தெரிகின்றதல்லவா?

1948-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முப்பதாம் நாள் வெள்ளிக்கிழமை மாலை, உலகத்தவரின் உயிரை—இந்தியாவின் இனிய செல்வத்தை—அருளே வடிவெனத் திகழ்ந்த அய்யனை - இறைவழி நின்ற ஏந்தலை—இம்சையை அறவே ஒழித்த அன்பனை—அடிமைக்கட்டை அறுத்தெறிந்த ஆண்மையை—அஞ்சலி நிலையில் நின்ற நின்மலனைக் காலக்கோளனர் கவர்ந்த செய்தியைத் திடீரெனக் கேட்ட தேவியார் என்ன நிலையை அடைந்தனரோ அறியோம்! இவர் உயிரும் உள்ளமும் பதைத் திராதோ! இவர் உடல் ஒருவழி நின்றிருக்குமா! அவ்வமயம் அடிகளின் அருகில் தாமில்லாததைப் பற்றி என்ன வருந்தினரோ அறியோம்! அடிகளின் ஊர்வலம் புறப்படவிருக்கும் நேரத்தில் தேவியார் அவண் போய்ச் சேர்ந்தார்; அவ்வமயம் பெரியாருக்கு நடைபெற்ற இறுதிச் செயல்களில் இவரும் பங்கெடுத்துக் கொண்டார். காந்தியடிகளின் நெருங்கிய அன்பர்களில் இவரும் ஒருவரல்லரோ! பன்னிரண்டாம் நாள் முதலமைச்சர் பண்டித நேருவும், சர்தார் பட்டேலும், மௌலானு ஆசாதும் மலர் மாலைகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தசாம்பற் குடத்தை வாங்கிக் கொண்டனர். அவ்வமயம் தேவர்கள் மலர் மாரி பொழிவது போன்று ஆகாய விமானங்கள் மலர்களைச் சொரிந்தன. நம் கவியரசியார் முன்னே சென்றனர். அமைச்சர்கள் அவருக்குப் பின்னே செல்ல அச்சாம்பற் குடத்தை ஊர்வலமாகக் கொண்டுபோனுர்கள். இங்கும் நம் அன்னையாருக்கு முதன்மை இடமே கிடைத்தது.

தேவியார் காந்தியடிகளின் பிரிவினல் தமக்கு ஏற்பட்ட துயரத்தைப் பின்வரும் முறையில் தெரிவிக்கிறுர்:

"காந்தியடிகளின் உயிரும் எங்கள் உயிரும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிக்க முடியாதவை என்னுமாறு எங்களிற் சிலர் நெருங்கிப் பழகினேம். எங்களிற் சிலர், உண்மையில் அவருடனேயே இறந்துவிட்டோம்! உயிரின் ஒரு பாதி போய்விட்டது போன்ற நிலைமைக்குப் பலர் வந்துவிட்டோம்! ஏனெனில், நம்முடைய உயிர், தசை, குறுதி எல்லாம் அவர் வாழ்க்கையுடன் பிணைப்புற்றவை.

"அடிகள் மறைந்துவிட்டார்! அவர் மறைந்துவிட்டதால் எல்லாம் போய்விட்டது என்று கருதுவோமானல், அஃது அவரைக் கைவிட்ட செய்கையேயாகும். அவருடைய ஊனுடல் நம்மிடையே இருந்து மறைந்ததினலேயே எல்லாம் இழந்தோமெனக் கருதுவோமானல், அவரிடம் நாம் கொண்டிருந்த அன்பும் நம்பிக்கையும் என்ன பயன் பெறும்? அவருடைய மரபினராக—அவருடைய ஆன்ம ஊதிய உரிமையாளராக—அவருடைய நோக்கத்தின் காவலாளராக—நாம் இல்லையா? உரிமை முறையில் துக்கங்கொள்வதற்குரிய காலம் ஓடிவிட்டது!

"மார்பில் அறைந்துகொள்ளவோ, தலையைப் பிய்த்துக் கொள்ளவோ இது காலமன்று! அடிகளை எதிர்த்தோரின் அறை கூவலை ஏற்க எழுச்சியுடன் உள்ளோமென முழங்கவேண்டிய சமயம் வாய்த்துவிட்டது. நாம் அவருடைய, உயிர்ச் சின்னங்கள்! அவருடைய படை வீரர்கள்! உண்மையும் அன்புமே நம் படைக்கருவிகள்! செந்நீர் சிந்தாமல் அமரில் வெற்றி பெறும் ஆற்றலே நம் வெற்றி வாள்!

"நம் தலைவர் காட்டிய வழியை நாம் பின்பற்ற மாட்டோமா? நம் தந்தையின் அருள் மொழிகளை

ஏற்று நடக்க மாட்டோமா? போர் வீரர்களா யிருந்து, உண்மைப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தமாட்டோமா? அடிகளின் பொன் மொழி களை உலகெங்கும் பரப்ப மாட்டோமா? அவர் பேச மாட்டார் என்றாலும் அவர் மொழிகளை உலக மெல்லாம் எடுத்துக் கூற ஆயிரக்கணக்கான மக்கள் இல்லையா? இப்போது மட்டுமன்று, தலைமுறை தலைமுறையாகப் பரப்பி வர மக்கள் இல்லையா?

"நடுக்கமுறும் என்குரலைக் கேட்டுக்கொண் டிருக்கும் இவ்வுலகத்தின் முன்பு, முப்பதாண்டு களுக்கு முன்னமே அடிகளின் சேவைக்காக என்னை அடிமைப்படுத்தி விட்டேன்; இன்றும் செய்துகொள்கிறேன்! சாவு என்பது என்ன? என் சொந்த தந்தை இறந்தார்! இறப்பதற்குச் சிறிது முன்னம் அவர் கூறினர்: பிறப்பு உண்டு; இறப்பு இல்லை! உண்மை அல்லது இறை நிலையை நோக்கிப் படிப்படியாக உயிர் செல்லும் வகையே வாழ்க்கை!"

"அடிகளின் உடல் நேற்று நெருப்பிலே நீருயிற்று. ஆனல், அவர் இறக்கவில்லை. ஏசுநாதர் முற்காலத்தில் உயிர்த்தெழுந்தது போலவே, அடிகளும் மூன்றும் நாள் உயிர் பெற்றெழுந்து விட்டார்! மக்களின் அழுகுரலுக்கு இரங்கியும் - வழி காட்டுமாறு உலகமே விடுத்துள்ள வேண்டு கோளுக்கிணங்கியும்—அவர் தோன்றிவிட்டார்!

"டில்லியில் பழைய மன்னர்கள் அடக்கஞ் செய்யப்பட்ட இடத்திலேயே அடிகளின் உடல் எரிக்கப் பெற்றது பொருத்தமே!" ஏனெனில், அவர் மன்னர் மன்னர்! உண்மையுருவான அவர் மா பெரும் வீரருக்குரிய சிறப்புடன் எடுத்துச்

செல்லப் பெற்றது மிகவும் சரியானது. ஏனெனில், அவர் வீரர்களுட் சிறந்த வீரர்.

"என் தலைவரின் ஆன்மா—என் குருவின் ஆன்மா—என் தந்தையின் ஆன்மா—அமைதி யுருமல் இருக்குமாக! என் தந்தை ஓய்வுகொள்ள மாட்டார்! ஓய்வுகொள்ள விரும்பவுமாட்டார்!

"எந்தையே! தங்கள் மக்கள்—தங்கள் வரிசைகள்—தங்கள் பரம்பரையார்—தங்கள் மாணவர்—ஆகிய நாங்கள் வேண்டுகின்றோம். எங்கள் வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான ஆற்றலை அளியுங்கள்!

"இதுவரை தோன்றிய இந்துக்களிலே மிகச் சிறந்தவரும் இந்துமத உண்மைகளை அறங்களை உண்மையாய்க் கைக்கொண்டவருமான ஒரு பெரியார், ஓர் இந்துவின் கையாற் கொல்லப்பெற்றது எத்துணை வருத்தமானது!"

* குறிப்பு: இது சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வெளியிட்ட "காந்தியடிகளின் பிரிவு" என்னும் நூலிலிருந்து கழகத்தார் அனுமதிபெற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

14. கவியரசியாரின் குணநலம்

ஒருவருடைய வாழ்க்கை வரலாற்றில் நாம் இன்றியமையாது காணவேண்டுவன அப்பெரியாரது நற்பண்புகளேயாகும். படிப்பவருக்குப் பயனளிப்பனவும் அவைகளே.

தேவியார் கல்வி அறிவு நிறைந்த பரந்த உள்ளம் வாய்ந்த உயர் குலத்தில் தோன்றினர்; அதற்கேற்ற சீர்மை வாய்ந்த பெருமரபில் பிறந்த ஒரு பெரியாருக்கு வாழ்க்கைப்பட்டார். இவருக்கு இயற்கையாகவே நுட்பமதி அமைந்திருந்தது. இவ்வறிவன்றோ இவரைப் பதின்மூன்ருண்டிலேயே சோதனையில் முதல்தரமாகத் தேர்ச்சியடையவும், பெரிய கவிகளை இயற்றவும் செய்தது. அன்னையார் அத்துடன் நின்ருரில்லை. பல நூல்களில் புகுந்தும், பல தேயங்கட்குச் சென்றும், அநேக பெரியவர்களுடன் பழகியும் அவ்வறிவை நாளுக்குநாள் வளரச்செய்தார். இன்றேல், இவர் இத்துணை உயர் நிலைக்கு வர இயலுமா? அறிவுடையவர்தாம் இவரை முன்மாதிரியாக்க் கொள்ள முடியுமா ?

எத்தனை தடைகள், எத்தனை வம்பளப்புகள், எத்தனை இழிச்சொற்கள் ஏற்படினும், தாம் முதலில் காதலித்தவர் யாரோ, அவரையே மணம் புரிய கருத்தூன்றி நின்றனரே! இஃது எத்தகைய கற்பு நிலை! இது நம் நாட்டுப் பண்டைய சாவித்திரி தமயந்தி முதலியவரை நினைப்பூட்ட வில்லையா? இச்சிறிய எண்ணம், இவருக்கு நன்மக்களை அளித்து, இறுதிவரையும் நல்வாழ்க்கையை நடத்துமாறு உதவி புரிந்தன்றே!

இவர் பல நாடுகளுக்குச் செல்லினும், வழக்க ஒழுக்கங்கள் வேறுபட்ட பலருடன் பழகினும் தம் முறையினின்று மாறுபடாமலும், பெண்மைக் குணத்தைக் கைவிடாமலும் சீலத்துடன் வாழ்ந்தது பெண்ணுலகத்திற்கே பீடளிப்பதாகும்.

நம் தேவியாரின் மனத்திலும், பேச்சிலும், செயலிலும் வீரம் திகழ்ந்தது. வீரம் மட்டுமா, இவரிடம் செப்பமுடைமையும் பொருந்தியிருந்தது. இவர் பிறரை நேரிலேயே கண்டித்துப் பேசும் பேச்சு, அவருக்குக் கோபத்தையும் வெறுப்பையும் மூட்டினும், அவர்களால் இவரை ஒன்றும் செய்ய இயலவில்லையே! ஏன்? இவர் வார்த்தைகளில் பொய்யில்லை புனைந்துரையில்லை; உண்மை நிலைபெற்றிருந்தது. உண்மையை ஒளிக்க எவருக்குத்தான் இயலும்! இவருடைய பேச்சில் உணர்ச்சி உருக்கொண்டிருக்கும். பகைவரை அடக்குவதும், நட்பினரை நயக்கச் செய்வதும் அவ்வுணர்ச்சிதான். இதனுல், இருசாராருமே இவர் வயப்பட்டனர். ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, கண்ணகி தேவியார், பாண்டியனிடம் வீரத்துடன் வழக்குரைத்து, "தன் கணவன் கள்வன் அல்லன் என்பதை நிலைப்பித்தனள்" எனக் கேட்கின்றோம். நம் சரோஜினி தேவியாரின் வீரத்தை நோக்கவேண்டும்! இவர் எத்தனைமுறை அரசாங்கத்தாரிடம் வாய் வார்த்தைகளாலும் எழுத்து மூலமாகவும் வீரப்போரிட்டார்! எதற்கேனும் அஞ்சினரா? சிறைக்குப் பயந்தனரா? எதிலேனும் தோல்வியுற்றனரா? வெற்றி பெறுமட்டும் வீரப்பேச்சையும் வீரச்செயலையும் கைவிட்டனரா? தமக்குத் தந்த பட்டத்தையும், பதக்கத்தையும் திருப்பி அனுப்பிவிடுவதாக அல்லவா வீரமுழக்கமிட்டார்!

இஃது எத்துணை வீரச்செயல்! இன்றேல், மேல் நாட்டில் அடிமைத் தளையில் அகப்பட்டிருந்த நம் இந்தியர் விடுபட்டு இன்பமடைய முடியுமா! நம் நாடுதான் நலம்பெற்று உயர்வடைய இயலுமா! உத்தமராகிய ஒருவர் உழைப்பு, உலகிற்கே உய்வளிக்கும் என்பதற்கு நம் தேவியார் ஒரு தக்க சான்றாவார்.

இவர் மனப்போக்கு, தம் குடும்பத்திற்கு மட்டும் நன்மை செய்துகொள்ளல் என்னும் குறுகிய பாதையில் சென்றிலது; உலகிற்குத் தம்மாலான உதவியைப் புரிதல்வேண்டும், பெண்களைக் கல்வியில் உயரச் செய்யவேண்டும், துன்புற்றவரைக் கைதூக்கி விடவேண்டும் என்னும் பரந்தவெளியில் சென்றது. தம் நாட்டுப் பெண்களுடைய கல்விக்காக இவர் பல செயல்களை மேற்கொண்டார். தம் ஊரில் வெள்ளப்பெருக்கால் துன்புற்ற மக்களுக்கு உண்டி, உடை, உறையுள் தருதற்கு இவர் மேற்கொண்ட முயற்சிகள் ஒன்றா இரண்டா! எத்தனை முறை இம்மக்களின் இரக்க நிலையைப்பற்றிச் சொற்பொழிவாற்றினர்! எத்தனைபேரிடம் சென்று பொருள் இரந்தார்! இச்செயல்கள் இவரது அருளுள்ளத்தை அளந்து காட்டுகின்றன அல்லவா? சிலர் அஞ்சத்தக்க கடுமை வாய்ந்த இவரிடம், சிலர் விரும்பத்தக்க இரக்க குணமும் அமைந்திருந்தது ஓர் உயரிய போக்காகும்.

இம்முறையில் குடும்பத்தையும் கவனியாது, தமக்கெனப் பொருள் திரட்டுவதையும் நோக்காது, உடல் நலத்தையும் கருதாது உலகிற்கென உழைத்தவரல்லரோ நம் தேவியார். தன்னலங் கருதாத் தகைமையாளராகிய இவரைப் பெரிய தியாகி எனக்

கூறுவது வேறென்ன சொல்வது! இவர் தியாகம் சிலவாண்டுகளில் சில இடங்களில் மட்டும் செயல் புரிந்து நின்றுவிட்டதா? இல்லையே. அஃது முதுமைப் பருவத்திலும் இவர் போதரும் இடங்களிலெல்லாமன்றோ தொடர்ந்து சென்று பணி புரிந்தது. நற்குணங்கள் வயதையும் இடத்தையும் வகுத்துக்கொள்வது ஏது?

இங்ஙனம் பெண்ணுலகத்திற்குச் சிறப்பாகவும், ஆணுலகத்திற்குப் பொதுவாகவும் பெட்பளித்து நின்ற நம் கவியரசியார், கல்வி, அறிவு, கற்பு, சீலம், வீரம், இரக்கம், தியாகம் முதலியவற்றுள் ஓங்கி விளங்கியதற்குக் காரணங்கள் இவருடைய உலையா ஊக்கமும், தளரா மனக்கிளர்ச்சியும், ஓயா உடல் முயற்சியுமேயாகும். இவையே இவரைப் பல வகையிலும் வீறுபெறச் செய்தன என்பதை நாம் மறந்துவிடுதல் கூடாது. ஆதலின், நம் கவியரசியாரின் வாழ்க்கையைக் கற்கும் மாணவர் ஒவ்வொருவரும், மேற்கூறியவற்றைக் கடைப்பிடித்தல் மட்டுமேயன்றி, எடுத்த காரியத்தை இடையில் விட்டுவிடாமல் மன ஊக்கத்துடன் உழன்று வெற்றிபெற முயலவேண்டும். இதுவே வாழ்க்கையின் பயனாகும்.

இங்ஙனம் பல சிறப்பியல்புகளையும் பெற்றுத் திகழ்ந்த நம் சரோஜினி தேவியார் இன்னும் சில வாண்டுகள் வாழ்ந்திருந்து நாட்டிற்கு நலம் புரிதற்கு நாம் புண்ணியம் இழைத்திலோம்! இப்பெரியார் மார்ச்சு மாதம் இரண்டாம் நாள் இவ்வுலக வாழ்க்கையை நீத்தனர். இஃது எத்துணைத் துன்பத்திற்கிடமானது! நம் நாடு, சென்ற ஆண்டு ஓர் அரிய நிதியாகிய மகாத்துமா காந்தி அவர்களை இழந்தது!

இவ்வாண்டோ ஒரு பெரும் பொக்கிஷமாகிய கவியரசி சரோஜினி தேவியாரை இழந்தது! தந்தையை இழந்த நம் நாடு, தாயையுமா இவ்வளவு விரைவில் இழந்து ஆதரவற்றதாக வேண்டும்! இஃது இந்தியர் செய்த தவக்குறைவே யாகும். ஆயினும், நம் பெரியார்களின் ஆன்மா நம்மோடு இருந்து உதவி புரிந்து, நம் தேசத்தைப் பொலிவுறச் செய்யும் என்னும் நம்பிக்கை ஒன்றுதான் நமக்கு ஆறுதலளிக்கக் கூடியதாயுள்ளது. இறைவன் அருள் புரிவானாக. நம் அன்னையாரின் ஆன்மா சாந்தமுற்று ஆனந்தத்தில் திகழ்வதாக.